விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது
Valampurii
சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 31 ஞாயிற்றுக்கிழமை (17.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 302

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# புலிகளின் செயற்பாட்டை நிறுத்த சர்வதேச புலனாய்வுச் சேவை

## அமைக்கிறது அரசாங்கம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்குடன் மேற்குலக நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளை இணைத்து சர்வதேசபுலனாய்வுச்சேவையொன்றைத் துரிதமாக ஏற்படுத்த பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## மூனின் பேச்சாளர் மீது இன்னர்சிட்டி குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

இலங்கை தொடர்பாக கேட்கப்படும் கேள்விகளுக்கு ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர் மார்டின் நெசர்கி மிகவும் தாமதமாக பதில்களை வழங்கி வருகின்றார் என்று ஐ.நா.செயல்பாடுகள் குறித்து செய்திகளை வெளியிடும் இன்னர் சிட்டி பிரஸ் பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது.

செய்தியாளர் சந்திப்புக்களின் போது இலங்கை

(20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ மறுசீரமைப்பு அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் இராணுவத்தை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நாட்டின் சமாதான சூழ்நிலைக்கு பொருந்தக்கூடிய வகையில் இராணுவ கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட உள்ளது.

இராணுவக் கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சு

(20ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனோரின் விபரங்கள் அமெரிக்காவிடம்

(வாஷிங்டன்)

இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது படையினரிடம் சரணடைந்த பின் காணாமல் போனோர் தொடர்பான விபரங்கள் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இனச் சுத்திக்கரிப்புக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு என்கின்ற ஸ்தாபனம் இவ் விபரங்களை அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் யுத்தக் குற்ற விபரங்களைக் கையாளும் பிரிவுக்கு

(20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்ற கட்டமைப்பு சர்ச்சையில்

(கொழும்பு)

இராணுவ நீதிமன்றம், நாட்டின் நீதிமன்ற கட்டமைப்பில் உள்ளடங்கிறதா? இல்லையா? என்பது குறித்து விளக்கப்படுத்த சட்ட மா அதிபர் நடவடிக்கை எடுத்து வருவதாக சட்டமா அதிபர் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின்உயர்மட்டகோரிக்கையடுத்து, சட்டமா அதிபர்

(20ஆம் பக்கம் பார்க்க)

## அமுலுக்கு வருகிறது மின்வெட்டு; இருளில் மூழ்கப் போகிறது குடாநாடு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மின்சார நிலையத்திலுள்ள மின் பிறப்பாக்கிகளில் பழுது ஏற்பட்டுள்ளதால் நாளை முதல் ஒன்றேகால் மணி நேர மின்வெட்டு அமுலுக்கு வருகிறது.

மின் பிறப்பாக்கிகள் சில பழுதாகியுள்ளதால் மின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனையடுத்தே மின்வெட்டு அமுல் செய்யப்படுவதாக இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

மாலை 5 மணி முதல் இரவு 10.30 மணி வரை பகுதி பகுதியாக மேற்கொள்ளப்படும் இம் மின்வெட்டினால் யாழ்.குடாநாடு இருளில் மூழ்கப் போகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மின்சார சபையினால் அறிவிக்கப்பட்டுள்ள மின்வெட்டு

(20ஆம் பக்கம் பார்க்க)

## வடமாகாண கல்வி அமைச்சின் அலுவலகம் யாழ்ப்பாணத்தில்

(திருகோணமலை)

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வடக்கு மாகாண கல்வி,பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கான இடத்தெரிவு தற்போது அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

கல்வி அமைச்

(20ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்-மோ.சைக்கிள் விபத்து இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

அரியாலை நெடுங்குளம் பகுதியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

தென்மராட்சிப் பகுதிக்கான பத்திரிகை விநியோகஸ்தரான இவர், கடமையை முடித்துக் கொண்டு அலுவலகத்துக்கு திரும்பிக் கொண்டிருக்கையில் யாழ்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கி சென்றுகொண்டிருந்த இ.போ.

(20ஆம் பக்கம் பார்க்க)



மயில் அழகுக்கலை நிலையம் அன் டிஜிற்றல் ஸ்ருடியோ திறப்புவிழா

விகிர்தி வருடம் ஐப்பசி மாதம் முதலாம் நாள் (18.10.2010) திங்கட்கிழமை பகல் 10.26 மணி முதல் 11.44 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இல. 137 தபால் பெட்டிச்சந்தி பலாலி வீதி திருநெல்வேலி எனும் முகவரியில் நிறுவனம் ஆரம்பிக்கப்பட உள்ளதால் தாங்களும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மணப்பெண் அலங்காரம், பேசியல், ஸ்ரெயிற்னிங் பேமிங், கெயார்கட்டிங், பருவுக்கான சிகிச்சை, கலறிங், பொடுகுக்கான சிகிச்சை அத்துடன் வேறுபல அழகுச் சிகிச்சைகளும், அழகுக்கலை வகுப்புக்களும் நடைபெறும், சான்றிதழ் வழங்கப்படும்.

உள்புற, வெளிப்புற படப்பிடிப்பு, அல்பம் தயாரித்தல், வீடியோ கிராப்பிக் டிசைனிங். 021 4922023, 0776914123



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யாழ்.பிரதேச செயலகம் நடத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)


யாழ்.பிரதேச செயலகத்தினால் "வெள்ளைப்பிரம்பு" தினத்தையொட்டி நடத்தப்பட்ட கட்டுரை முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷிகா சிங்கராஜா முதலாமிடத்தையும், யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலய மாணவி ஞா.ஞானஸ்ரீபனா இரண்டாமிடத்தையும், யாழ்.சுண்டுக்குளிமகளிர் கல்லூரி மாணவி டனோஜா இராஜேஸ்வரன் மூன்றாமிடத்தையும், யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலய. மாணவி லக்சாயினி நவரத் தினம் நான்காமிடத்தையும் பெற்றுள்ளனர்.

மேற்படி மாணவர்களை நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள வெள்ளைப்பிரம்பு தின விழாவில் கலந்து கொண்டு பரிசில்களை பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாண பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ச-2,136)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்



(ஓய்வுபெற்ற அதிபர்- யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி, உபதலைவர் சைவ வித்தியா விருத்திச் சங்கம் - திருநெல்வேலி, முன்னாள் தலைவர் ப.நோ.கூ.ச.-சாவகச்சேரி)

சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகேஸ்வரன் 16.10.2010 சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து கணபதிப்பிள்ளை-அன்னலஷ்மி தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற HINDU BOARD இராஜரட்ணம் செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற யோகாம்பாள் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி )அவர்களின் அன்புக் கணவரும் யசோதா, தயாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ண மூர்த்தி (பொறியியலாளர்,கொழும்பு), நவக்குமாரன் (கொமர்ஷல் வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளை) ஆகியோரின் மாமனாரும் உபேந்திரன், மாதங்கி, கிருத்திகன், தாரங்கி, தனுரங்கி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற திருமதி ஞானசௌந்தரி கந்தையா, திருமதி ஞானபூங்கோதை வைரவிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் 18.10.2010 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் சரசாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"அயோத்தியா"
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

(சி-1427)

தகவல்:
ந.நவக்குமாரன்
(மருமகன்)

### திருமதி சோமு பரமேஸ்வரி



நயினாதீவு 1ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பு-15ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோமு பரமேஸ்வரி அவர்கள் 15.10.2010 அன்று காலமானார்.

அன்னார் சோமு அவர்களின் அன்பு மனைவியும், வீரகத்தி செல்லாச்சி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா தெய்வானை ஆகியோரின் அன்பு மருமகளும் குணசீலன் (பணிப்பாளர் வாரணம் FM), குணராஜா (கணனிப் பிரிவு வாரணம் FM,உரிமையாளர் Easwary communication & Easwary Stores), சசிகலா (நிறைவேற்று அலுவலர், வாரணம் FM), கமல்ராஜ் (நிர்வாக உத்தியோகத்தர் வாரணம் FM) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவராசா, ஜெகராசா, மங்களேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதி, சிங்கராசா, தங்கராசா, கங்காதரன், பிரபாகரன், கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.10.2010 ஞாயிற்றுக் கிழமை இன்று பிற்பகல் 1 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று 3 மணியளவில் பூதவுடல் நயினாதீவு சல்லிவரவை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஈஸ்வரி தொலைத் தொடர்பு நிலையம்
1ஆம் வட்டாரம்,
நயினாதீவு,
யாழ்ப்பாணம்.
T.P.: 021-3213494,
0777483840

தகவல்:
மகன் S. குணசீலன்,
பணிப்பாளர்,வாரணம் FM
No.58,Joseph Dias Mawata,
Modara, Colombo-15
077-2205727,0112521281
20,Kanathiddy Road, Jaffna.

(சி-1426)

## கிளிநொச்சி மாவட்ட அரச ஓய்வூதியர் சங்க பொதுக்கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட அரச ஓய்வூதியர் சங்க செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் சமுகமளிக்குமாறு சங்க பொதுச் செயலாளர் எஸ்.பெருமாள் அறிவித் துள்ளார். மேலும் அன்றைய கூட்டத்தில் அரச ஓய்வூதியர்களின்பிள்ளைகளுக் கான தொழில் வங்கிப்படிவம், அரச ஓய்வூதியர்கள் 10 ஆயிரம்ரூபாய் இலகு கடன் பெறுவதற்கான பத்திரம் வழங்கல், இடப்பெயர்வின்போது ஓய்வூதியர்கள் தவறவிட்ட ஓய்வூதிய அங்கத் துவ அட்டைகளுக்கான புதிய அட்டைகள் வழங்குதல் ஆகியன இடம் பெறும் என செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-84)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறும் பொறியியற்துறைக்கான ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருடம் சேவையாற்றக் கூடிய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பொறியியற்துறையில் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 30.10.2010 ஆம் திகதிக்கு முன்பதாக தமது சுயவிபரக் கோவையை நேரிலோ அல்லது பதிவுத்தபால்மூலமாகவோ இணைப்பாளர் இலங்கை திறந்த பல்கலைக் கழகம் யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகளுடைய விண்ணப்பங்கள்பரிசீலிக்கப்பட்டு தகுதியானவர்கள் மாத்திரம் நேர்முகத்தேர்வுக்காக அழைக்கப்படுவார்கள் என யாழ். பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## சிறையில் பொன்சேகாவை சிக்கவைக்க அரசாங்கம் திரைமறைவில் முயற்சி

### அச்சத்தில் அனோமா

(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவிற்கு சிறைக்குள் வைத்து திட்டமிட்ட ரீதியிலான ஆபத்துக்கள் நேரலாம் என்று திருமதி அனோமா பொன்சேகா அச்சம் தெரிவித்துள்ளார்.

அதுபோல சிறைக்குள் வைத்து கலகம் விளைவிக்க முயன்றார் அல்லது துப்பாக்கி ஒன்றை பறித்தெடுக்க முயன்றார் என்பன போன்ற போலியான குற்றச்சாட்டொன்றை முன்வைத்து சரத் பொன்சேகாவின் உயிருக்கு ஊறு விளைவிக்கும் நடவடிக்கையொன்றில் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளக்கூடும் என்ற அச்சமும் நிலவுவதாகவும் அவர் கூறினார்.

அல்லது இயற்கை மரணம் என்று காட்டக்கூடிய வகையில் சூழலை ஏற்படுத்தி சரத் பொன்சேகாவை சாவைத் தேடிகொள்ள வைக்கும் முயற்சிகளில் ஈடுபடலாம் என்பதாகவும் அவர் மேலும் தெரிவிக்கின்றார்

ஆனாலும் எவ்வகையான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நேரிட்டாலும் சரத் பொன்சேகா முன்னெடுத்த ஜனநாயகத்துக்கான போராட்டம் இடைவிடாது தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பதில் தான் உறுதியாக இருப்பதாகவும் வலியுறுத்தியுள்ளார். (ச-5)


### வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம்

## அறிவித்தல்

எமது மு.ச.வண்டி சேவையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள். எதிர்வரும் தைமாதம் வரை இடநெருக்கடி காரணமாக புதிய, பழைய றூட் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதனை அன்பாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

41,முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்

(2690)

இப்படிக்கு
ஆட்டோ சங்க நிர்வாகத்தினர்.

### பண்சிற்றி பண்டத்தரிப்பு

விஜயதசமி தினம் அன்று சகல கணனி வகுப்புக்களும் பி.ப 2.00 மணிக்கும், புதிய பிரிவுகள் விசேட சலுகையுடனும் ஆரம்பமாகும்.

(C-1428)

### விற்பனைக்கு

வடமராட்சி பருத்தித்துறை வீதி வல்வெட்டித்துறை ஊறணி ஆஸ்பத்திரிக்கும் பொலிகண்டிச் சந்திக்கும் இடையில் பிரதான வீதியில் அமைந்துள்ள 3 1/2 பரப்புக் காணியும் வீடும் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
(2667) T.P : 0775097845

### தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

VTL MANAGMENT
Daanston House
Colombo -03
T.P. 072 9994777

(சி/1384)

### செல்லா சினிமா




காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00


## உதைபந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் சுப்பர் பிரீமியர் லீக்குகளில் முதற்தர அணிகளை தெரிவு செய்யவென நாடு பூராகவும் நடைபெறும் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

வடமராட்சி அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்குஇடம்பெறும்.

இதில் யாழ்.லீக் கழகமானது குருநகர் பாடுமீன் அணியை எதிர்த்து லீக் கழகமான வதிரி டைமன் அணி மோதவுள்ளது. இப்போட்டியில்வெற்றி பெறும் அணி கொழும்பில் நடைபெறும் அடுத்த சுற்றுப் போட்டிக்கு தெரிவாகும். சுப்பர் பிறீமியர் போட்டிகளில் யாழ்.மாவட்ட அணிகள் இரண்டு தசாப்த காலத்துக்குப்பின் பங்குகொள்வது குறிப்பிடத்தக்கது. (ச-24)

## பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்ற ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைப் பரீட்சை- 2010 பரீட்சைக்கு பட்டதாரிகளை தயார்படுத்துவதற்கான பயிற்சி வகுப்புக்கள்தகுதிவாய்ந்த முன்னணி ஆசிரியர்களைக்கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்டு எதிர்வரும் வார இறுதி நாட்கள் முதல் கிரமமாக நடத்த யாழ். மாவட்ட பட்டதாரிகள் சங்கம் ஒழுங்குகளை செய்துள்ளது.

இதில்பங்குகொள்ள விரும்புவோர்கள் மிகக்குறைந்த கட்டண பங்களிப்புடன் தங்களை இன்று காலை 10 மணிமுதல் 4 மணிவரையில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும், தவறுபவர்கள் 0779009371 அல்லது 0212221342 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறு பட்டதாரிகள் சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (ஏ)

## வாணி விழா

(கரவெட்டி)

அல்வாய் வடமேற்கு இளம் பிறை சன சமூக நிலையத்தின் வருடாந்த வாணிவிழாவும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று மாலை 4.00 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறைசனசமூகநிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யோகராசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ச-24)

+ + + +

(மாதகல்)

சென்.யோசப் மகாவித்தியாலயத்தில் வாணி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்றையதினம் ஏடு தொடக்குதல் நிகழ்வும் மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறுமென பாடசாலை இந்துமாமன்றத் தலைவர் அறிவித் துள்ளார். (ச-2,40)

## சித்திரத்தேர் திருப்பணி வேலைகள் ஆரம்பம்

(பருத்தித்துறை)

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திலுள்ள விநாயகர், முருக னுக்கான சித்திரத்தேர் திருப்பணி நாள் வேலை கால்கோள் விழா விஜயதசமி தினமான இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 11.00 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இச்சித்திரத்தேர் 2011 ஆம் ஆண்டு நடை பெறவுள்ள திருவிழாவின்போது வெள்ளோட் டம் விடப்படவுள்ளது.

அன்றைய வெள்ளோட்டத்தின் போது விநா யகர், முருகன் புதிய சித்திரத் தேரில் வீதியுலா வருவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-10)

# மொழியைக் காரணம் காட்டி குற்றவாளிகள் தப்பிச் செல்வதை அனுமதிக்கக் கூடாது

## பொலிசாருக்கான செயலமர்வில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி தெரிவிப்பு

மூன்று மொழிகளிலும் தேர்ச்சியுடைய அனுபவம் வாய்ந்த பொலிஸ் அதிகாரிகளால் குற்றங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் மொழியை காரணம் காட்டி குற்றவாளிகள் தப்பிச் செல்ல இடமளிக்கக் கூடாது என்றும் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். பரமராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று காலை 10 மணிக்கு இடம்பெற்ற பொலிசாருக்கான செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் , பாதிப்புக்குள்ளான நிலையில் ஒருவர் நீதிமன்றத்தையோ, பொலிஸ் நிலையத்தையோ நாடுகின்றார். அத்தருணத்தில் அவர்கள் மீண்டும் பாதிப்புக்குள்ளாகாத வகையில் அவர்களை பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். நாம் அனைவரும் பொறுப்புணர்வோடு மக்களுக்கு தொண்டாற்ற வேண்டும். எம்மை நாடி வருபவர்களின் மனநிலையை முதலில் பக்குவப்படுத்தி ஒரு மனநிலையோடு அவர்கள் சொல்லும் வாக்குமூலத்தினூடாகத் தான் நல்ல தீர்ப்பை வழங்க முடியும்.

இதற்கமைய பாதிப்புக்குள்ளானவர்கள் வழங்கும் தவறான வாக்கு மூலத்தின் மூலம் தவறான தீர்ப்புக்களை வழங்க நேரிடும். எனவே மனநிலையை சரிவர புரிந்து கொண்டே குற்றங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

இவை தவிர பாதிக்கப்பட்டவருக்கு தகுந்த பாதுகாப்பு வழங்குவது பொலிசாரின் கடமையாகும்.

மேலும் பதிவாகும் குற்றங்கள் உடனடியாக விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டுமெனவும் அப்படி உடனடியாக விசாரணைக்குட்படுத்துவதன் மூலமே குற்றவாளிகள் தப்பிச் செல்வதை தடை செய்ய முடியும் என்றும் ஒருவர் குற்றம் செய்து விட்டு வேறு இடத்திற்கு தப்பிச் சென்ற பின் அவர் தொடர்பான குற்றம் விசாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவருக்கு தண்டனை வழங்கும் காலமும் நீண்டதாகி விடும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



மேலைத்தேய நாடுகள் போன்று எமது நாட்டில் குற்றங்களை இனம் காணும் வகையில் நவீன தொழில் நுட்பம் இல்லையென்றும் குறிப்பாக டி.என்.ஏ.போன்ற குற்றம் அறியும் நவீன வசதிகள் இல்லாதது குற்றவாளிகள் தப்பி செல்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது என்றும் கூறினார்.

இவை தவிர பதிவாகும் எல்லா குற்றங்களும் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய தேவையில்லை. பொலிசார் வழங்கும் தீர்ப்பு சரியானது என்றால் அவர்கள் அத்தகைய குற்றங்கள் தொடர்பாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்க முடியும். எனவே மொழியை காரணம் காட்டி ஒருவர் தப்பிச் செல்ல சந்தர்ப்பம் வழங்கக் கூடாது எனவும் அதேவேளை தண்டனைக்கும் உட்படுத்தப்படக் கூடாது என்றும் அவர் தனது உரையில் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# வாரம் ஒரு தகவல்

## ஒரு காதல் கதை

“அப்பா,உங்களிடம் ஒரு கேள்வி”

“என்ன கேட்கப் போகிறாய்?”

“வாழ்க்கையில் 3 முக்கியமான விடயங்கள் என்ன தெரியுமா?”

“தெரியவில்லையே”

“எனக்குத் தெரியுமே. ஒரு புத்தகத்தில் படித் தேன்”

“என்ன படித்தாய்?”

“வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு விடயம்: யாரையாவது காதலிக்க வேண்டும்.

“இரண்டாவது முக்கியமான விடயம்: யாராவது நம்மைக் காதலிக்க வேண்டும்”

“மூன்றாவது முக்கியமான விடயம்: இவையிரண்டும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும்”

“இப்பதான் தெரியுது... நீ எப்படியான விடயங்களை அதிகமாகப் படிக்கிறாய் என்று”

“நான் என்னப்பா... இன்னமும் சின்னக் குழந்தையா? வயதாகி விட்டதல்லவா!”

“புரியுதடா... ஏற்பாடு பண்ணுறேன்”

“நேற்றுக் கூட அம்மா என்னை எங்கே என்று தேடிய போது ‘ அவன் எங்கே போயிருப்பான். கழுதை கெட்டால் குட்டிச்சுவர்’என்று சொன்னீங்களாமே?”

“ஆமாம்.சொன்னேன்”

“இனிமேல் அப்படியெல்லாம் சொல்லாதீங் கப்பா”

“என்னடா சொல்கிறாய்?”

“அதற்கில்லையப்பா.நான் இப்பொழுது வாலி பன். இனிமேல் என்னை கழுதை என்று சொல்வது நல்லா இருக்காது என்று நினைக்கிறேன்”

“ஏன்?”

“எதிர்வீட்டுப் பெண்ணை அவளுடைய அப்பா ‘குட்டிச்சுவர்’என்று சொல்லித் திட்டிக் கொண்டிருக்கிறார். அதனால... சொன்னேன்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வாணி விழாக்கள்

யாழ்/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய வாணிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதான மண்டபத்தில் அதிபர் எஸ்.கே. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக இளைப்பாறிய அதிபர் க.தர்மகுணசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக புங்குடுதீவு தெற்கு ஜே/26 , கிராம சேவையாளர் கு.சந்திரா மற்றும் இளைப்பாறிய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. தவராசா ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

வரவேற்புரையை ஆசிரியர் ந. சசிகுமார் ஆற்றுவார். இந்நிகழ்வில் சொற்பொழிவு, பேச்சு ,கவிதை மற்றும் பட்டிமன்றம் ஆகியன இடம்பெறவுள்ளன.

✦ ✦ ✦

புதிய உயர் கல்லூரி மாணவர் ஒன்றியம் நடத்தும் வாணி விழாவும் ஆசிரியர் தினமும் இன்று காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் மாணவர் ஒன்றியத் தலைவர் சிவ. உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் வரவேற்புரையை சா. நிசாந்தன் , ஆசியுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிக விரிவுரையாளர் திருமதி அருள் நங்கை சண்முகநாதன் நிகழ்த்தவுள்ளார். ஏற்புரையை யாழ். பல்கலைக்கழக வரலாறு விரிவுரையாளர் மு.சின்னராசா, நன்றியுரையை மாணவர் ஒன்றிய இணை செயலாளர் எஸ். இளந்திரையன் ஆற்றுவார்.

சக்தி வழிபாடு எனும் விடயம் பற்றிய சிறப்பு சொற்பொழிவை கவிஞர் சோ. பத்மநாதன் நிகழ்த்தவுள்ளார். அத்துடன் புதிய உயர் கல்லூரி விரிவுரையாளர் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. மேலும் நடனம், வில்லிசைப்பாடல், கவிதை மற்றும் இன்னிசை கானங்கள் என்பன நடைபெறவுள்ளது.

✦ ✦ ✦

துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணி மண்டபத்தில் வாணி விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு க. கணேசராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் மற்றும் பொன். சுகந்தனின் சக்தி வில்லிசை குழுவினர் வழங்கும் சிறப்பு வில்லிசை நிகழ்வும் நடைபெறவுள்ளது.

✦ ✦ ✦

நல்லூர் முருகன் சனசமூக நிலைய வாணி விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழகம் பிரபல வர்த்தகப் பிரமுகர் நா. சோமசுந்தரம் தலைமையில் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவரும் , யாழ். பெரியபுலம் மத்திய மகா வித்தியாலய ஓய்வு பெற்ற அதிபருமான சி. இராமலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

17.10.2010
(புரட்டாதி 31, ஞாயிற்றுக்கிழமை)
தசமி முன்னிரவு 10.33 மணிவரை
திருவோணம் முற்பகல் 9.44 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
விஜய தசமி, கேதார கௌரி விரதம்

**மேடம்** யோகமான நாள்,யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், தொழில் ரீதியாக புதிய முயற்சிகளில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள், வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**இடபம்** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்,தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறத் தொடங்கும், சொத்துக்கள் தொடர்பாக எடுத்த முயற்சி கைகூடும்.

**மிதுனம்** வரவைக் காட்டிலும் செலவு கூடும், எந்தக் காரியத்திலும் நிதானமாகச் செயற்படுவது நல்லது, பிரயாணத்தில் கவனம் அவசியம், தேகநலனில் கூடிய அக்கறை எடுக்க வேணடிய சூழ்நிலை உருவாகும்.

**கடகம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்,மங்கல நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு கிட்டும்.

**சிங்கம்** பெண்களால் பெருமை வந்து சேரும் நாள், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி** மனநிறைவு கூடும் நாள்,பொது வாழ்வில் புகழ் கூடும்,கடிதம் கனிந்த தகவலைத்தரும், தொழில் முன்னேற்றமுண்டு, பிள்ளைகளால் பெருமை சேரும்.

**துலாம்** காலை நேரத்திலேயே காதிலினிக்கும் செய்தி வந்து சேரும், பெரியோரின் சந்திப்பு ஏற்படும், வாகனங்களை பழுது பார்க்கும் எண்ணம் தோன்றும், தாய்வழி உறவினர் அனுசரணை வழங்குவர்.

**விருச்சிகம்** பயணங்களால் பலன் கிடைக்கும் நாள்,திருமண முயற்சி வெற்றி தரும், சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்,வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**தனுசு** நாவன்மையால் நல்ல பெயர் எடுக்கும் நாள், வழிபாட்டில் கூடிய கவனமெடுப்பீர்கள்,கொடுக்கல் வாங்கல்கள் சீராகும், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்** பயணத்தால் பலன் கிடைக்கும், பாராட்டும் புகழும் அதிகரிக்கும், பொதுநல ஈடுபாடுண்டு, அனுபவ முள்ளவர்களின் சந்திப்பால் சிறப்பான வேலையொன்றைச் செய்வீர்கள்.

**கும்பம்** வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும் நாள், சில காரியங்களைச் செய்ய பலமணி நேரம் அலைய நேரிடலாம், மாலை நேரம் பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு கிட்டும்.


**மீனம்** பணவரவு திருப்திகரமாக அமையும், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம்,விருந்து விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உறவினர் வருகையுண்டு.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 120 | 80 |
| பச்சைமிளகாய் | 130 | 120 | 50 |
| தக்காளி | 100 | 90 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 |
| கோவா | 80 | 70 | 70 |
| கரட் | 100 | 60 | 40 |
| பூசணி | 40 | 35 | 30 |
| புடோல் | 80 | 60 | 30 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 75 | 70 |
| பாகற்காய் | 160 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 50 |
| கரணைக்கிழங்கு | 70 | 55 | 50 |
| பயிற்றங்காய் | 100 | 90 | 90 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 20 | 30 |
| கறிமிளகாய் | 130 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 140 | 180 | 90 |
| போஞ்சி | 160 | -- | 100 |
| கத்தரி தம்புள்ள | 100 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-40 | 40 |

# சோனியாஜி சொல்லிய மூன்று இரகசியங்கள்!





"திருப்புமுனை" என்ற அடைமொழியுடன் தான் திருச்சியை சொல்வார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. கடந்த 9ஆம்திகதி திருச்சி மாநகரில் காங்கிரஸ் கட்சி நடத்திய கூட்டம், தி.மு.கவுக்கு அதிர்ச்சி முனையின் ஆரம்பம்!

'தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை முதன்மைக் கட்சியாக மாற்றுவோம்!' கட்சியின் மாநிலத் தலைவர் தங்கபாலு இப்படிச் சொன்னார்!

'ராஜீவ் காந்தி இரத்தம் சிந்திய மண்ணில், காங்கிரஸை ஆட்சிக் கட்டிலில் அமர்த்த சூளுரைப்போம் !' 40 ஆயிரம் தொண்டர்களுடன் கட்சியில் இணைந்து இருக்கும் எஸ்.திருநாவுக்கரசரின் முழக்கம்.

" யாருக்கும் நாம் சளைத்தவர்கள் அல்ல என்பதைக் காட்டிவிட்டோம். பிற கட்சிகளின் வெற்றி -தோல்வியை நிர்ணயிக்கும் இயக்கமான காங்கிரஸ், முதல் இயக்கமாக வேண்டும்!' மத்திய



அமைச்சர் ஜி.கே.வாசன் ஆசைப்படுகிறார்.

' மத்திய அரசின் திட்டங்கள் பல மாநிலங்களில் காங்கிரஸ் கையால் வழங்கப்படுகிறது.அந்த வாய்ப்பை தமிழகத்திலும் உருவாக்கித்தர வேண்டும்!' சுற்றி வளைத்துத் தன் நோக்கத்தைச் சொன்னார் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம்.

' தான் இதுவரை தமிழ்நாட்டு மேடைகளில் எதைப் பேசி வந்தோமோ, அதையே இவர்கள் பேசுகிறார்களே' என்று ஆச்சரியப்பட்டு,கை தட்டிக்கொண்டு இருந்தார் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்.

கட்சி தன்னுடைய தனித்துவத்தை இழக்கக்கூடாது. இந்தக் கட்சி முதன்மையான இடத்தை மக்கள் மத்தியில் பெற வேண்டும்!' என்றார். வழக்கமாக, சோனியாஜி சொல்லும் "தென் இந்தியாவின் மிக மூத்த அரசியல்வாதி கருணாநிதி" என்றோ, ' ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு தி.மு.க.வே தூண்' என்றோ சொல்லவில்லை. ' வரும்' தேர்தலில் தி.மு.க. -காங்கிரஸ் கூட்டணிக்கு மகத்தான வெற்றியைத் தேடித்தர வேண்டும்' என்றோ, ' ஆறாவது முறையாக கருணாநிதியை முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வைப்போம்'என்றோ... குரல்கள் இல்லை.

இந்த முறையும் ஏதோ ஒரு கட்சியுடன் கூட்டணியில் தொடர்ந்தால், இன்னும் 40 ஆண்டுகளுக்கு ஆட்சிக்கு வர முடியாது!' என்று காங்கிரஸ் காரர்கள் உணர்ந்துவிட்டார்கள்.

சோனியாஜி, ராகுல் உட்பட டில்லி காங்கிரஸ் தலைமையை வலம் வரும் அகமது படேல், குலாம்நபி ஆசாத் போன்ற வட்டாரங்களில் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் குறித்து பேச்சுக்கள் அதிகமாகவே இருக்கின்றன. இவர்கள் மூன்று விதமான செய்திகளைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள்.

டில்லி, ராஜஸ்தான்,அஸ்ஸாம், ஆந்திரா ,அரியானா ஆகிய ஐந்து மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்துகிறது. காஷ்மீரிலும், மகாராஷ்டிராவிலும் கூட்டணி ஆட்சி நடக்கிறது. இந்தியாவை ஆளும் பொறுப்பில் காங்கிரஸ் இருந்தாலும், பெரும்பாலான மாநிலங்களில் எதிர்க்கட்சியாகவே இருப்பது நல்லதல்ல. எனவே, ஆளும் கட்சியாகவோ அல்லது அமைச்சரவையில் அங்கம் வகித்து கூட்டணி ஆட்சிப்பொறுப்பு ஏற்க, எங்கே எல்லாம் வாய்ப்பிருக்கிறதோ, அங்கு எல்லாம் முயன்று பார்க்க வேண்டுமென்பது ராகுலின் மனப்போக்கு. இந்த அடிப்படையில், தமிழகத்தில்

**ஜூனியர் விகடன்**

காங்கிரஸ் தலைமையில் ஓர் அணியை அமைப்பது அல்லது தாங்கள் இடம்பெறும் அணியில் பாதி இடங்கள் வரை கேட்பது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இப்படி அமைத்தால் மட்டுமே , தேர்தலுக்குப் பின்னர் காங்கிரஸ் தயவை நம்பியிருக்கும் ஆட்சியை தமிழகத்தில் உருவாக்கமுடியும் என்று நினைக்கிறார்கள். தி.மு.க. மீது பட்டுக் கொள்ளாமல் சோனியாஜி பேசுவதற்கு இதுதான் காரணம்!

இரண்டாவதாக கூறப்படும் செய்தி, பீகார் சட்டசபைத் தேர்தல்முடிவை மிகுந்த எதிர்பார்ப்புடன் பார்க்கிறது காங்கிரஸ் கட்சி. அங்கு அக்டோபர், நவம்பரில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடக்கிறது. காங்கிரஸ் ஓர்

## கடுப்பில் காங்கிரஸ் அதிர்ச்சியில் தி.மு.க

அணியாகவும் லாலு பிரசாத் மற்றும் பஸ்வான் ஓர் அணியாகவும் இன்றைய முதல்வர் நிதீஸ், பாரதிய ஜனதாவுடன் இணைந்தும் மூன்று அணிகள் களத்தில் உள்ளன. காங்கிரஸ் முழு மெஜாரிட்டியுடன் வெற்றி பெற்று

சோனியாவுக்கு கிரீடம் சூட்டும் திருநாவுக்கரசர்...



ஆட்சியைப் பிடிக்கும் சூழ்நிலை இல்லை என்றாலும், நிதீஷ்குமார் எவ்வளவு வெற்றி பெறுகிறார் என்பதைப் பார்த்து,காங்கிரஸ் - நிதீஷ்குமார் கூட்டணி ஆட்சியை அமைப்பதற்கான இரகசிய எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இந்தத் தேர்தல் முடிவைப் பொறுத்து, தமிழக நிலைமையில் காங்கிரஸின் எண்ணங்கள் மாறும்.

இரண்டுக்கும் என்ன தொடர்பு என்றால்,நிதீஷ்குமாரின் ஐக்கிய ஜனதா தளத்துக்கு நாடாளுமன்றத்தில் 20 எம்.பிக்கள் இருக்கின்றார்கள். நிதீஷ் -காங்கிரஸ் உறவு ஏற்பட்டால், இந்த 20 உறுப்பினர்களின் ஆதரவு காங்கிரஸ் கட்சிக்குக் கிடைக்கும். அப்போது, தி.மு.கவின் 18 எம்.பிக்கள் ஆதரவு இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று முடிவு எடுக்கவாய்ப்பு ஏற்படும்.

அதன்பின்னர்,சோனியாஜி வட்டாரம் தி.மு.க. குறித்த தீர்க்கமான முடிவை எடுக்கும்!


மூன்றாவதாகச் சொல்லப்படுவது, ஸ்பெக்ட்ரம் விவகாரம்.

' விதிமுறைகளின் படி நான்நடந்துகொண்டேன்', 'பிரதமர் அலுவலகத்துக்கு முன்னதாக அனைத்தையும் சொல்லிவிட்டேன்' என்று மத்திய அமைச்சர் ஆ.ராசா திரும்பத் திரும்பச் சொல்லிவந்தாலும்,விவகாரம் முடிவதாக இல்லை.

ஸ்பெக்ட்ரம் புகார் வழக்கை மத்திய புலனாய்வுத்துறை (சி.பி.ஐ.) விசாரித்து வருகிறது. சி.பி.ஐ. ஒழுங்காக விசாரிக்கிறதா, இல்லையா என்றகேள்விகளுடன் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.மத்திய விஜிலென்ஸ் கமிஷன், இதுதொடர்பான ஆவணங்களை வைத்து கேள்விகளை தயாரித்துக்கொண்டிருக்கிறது.முரளி மனோகர் ஜோஷி தலைமையிலான எக்கவுண்டிங் கமிட்டி ஸ்பெக்ட்ரம் குறித்த தகவல்களைத் திரட்டி, சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு சம்மன் அனுப்பக் காத்திருக்கிறது.

இந்த நான்கு மூலைக்குள் இருந்தாலும் ஸ்பெக்ட்ரம் விவகாரம் விடுபட்டு வெளியேறுவது இப்போதைக்குச் சாத்தியம் இல்லை. எதிர்க்கட்சிகள் மீண்டும் இந்தப் பிரச்சினையை நாடாளுமன்றத்தை நடுங்கச் செய்யும் அளவுக்கு கிளப்பத் தயாராக இருக்கின்றன.' பிரதமர் மற்றும் காங்கிரஸ் மேலிடத்தால் வெளிப்படையாகப் பதில் அளிக்க முடியாத கேள்வியாக ஸ்பெக்டரம் பூதம் உருவெடுத்துவிட்டது. அமைச்சர் பதவியில் இருந்து ஆ.ராசாவை நீக்கிவைக்கும் நிலையை அநேகமாக காங்கிரஸ் மேலிடம் எடுக்கத் திட்டமிட்டுள்ளது!" என்கிறார்கள் டில்லியில்.அப்படி ஒரு நிபந்தனை வைக்கப்படுமானால், அதை கருணாநிதி எதிர்கொள்ளும் விதம் சிக்கலானது.

" தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்ததற்காக ஆ. ராசாவைப் பழிவாங்குவதா?" என்று கருணாநிதி சில மாதங்களுக்கு முன்னால் கேள்வி எழுப்பினார். இதே குற்றச்சாட்டு காங்கிரஸ் மேலிடத்தின் மீதே



சொல்லப்பட்டதா?" என்று கேட்டால், " இப்போது பிரச்சினை சாதி அல்ல. நல்லவரா, கெட்டவரா என்பதுதான். ஸ்பெக்ட்ரம் நடவடிக்கை மூலமாக, காங்கிரஸ் ஆட்சியின் தூய்மை நிரூபிக்கப்படும் பாருங்கள்!" என்பதே இந்த விவகாரங்களைக் கவனிப்பவர்களின் பதிலாக இருக்கிறது.

அதாவது, தமிழகத்தில் எப்படியாவது காங்கிரஸ் ஆட்சியை உருவாக்க வேண்டும் - அதற்கு முன்னதாக, தி.மு.கவுக்கு மாற்றாக நிதீஷ்குமாரின் 20 எம்.பிக்கள் ஆதரவைப் பெறவேண்டும். ஸ்பெக்ட்ரம் விவகாரம் - இந்த மூன்றைச் சுற்றியே தி.மு.க மற்றும் காங்கிரஸ் கூட்டணி விடயங்கள் வலம் வருகின்றன.

ராகுலைப் பொறுத்தவரையில் தெளிவாக இருக்கிறார். சோனியாஜிக்கு மட்டும்தான் சில குழப்பங்கள்!" என்கிறார்கள் டில்லி பத்திரிகையாளர்கள்.சோனியாஜியும் மகன் வழியில் செல்வதாகவே திருச்சிக் கூட்டத்தின் பேச்சு தெளிவுபடுத்துகிறது.

" இன்னும் தமிழர்கள் இலங்கை முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கிறார்களே!" என்று கருணாநிதி சொல்ல ஆரம்பித்திருக்கிறார்.' மாநில சுயாட்சி' போன்ற கருத்துக்களையும் மீண்டும் கருணாநிதி பேச ஆரம்பித்தால், விவகாரம் முற்றிக் கொண்டிருப்பதை ஊர்ஜிதப்படுத்தி விடலாம்!

ப.திருமாவேலன்

# லீயோ ஷாவ்போவுக்கு ஆதரவு அதிகரிக்கிறது

அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ள சீன எழுத்தாளர் லீயோ ஷாவ்போவுக்கு அந்நாட்டில் ஆதரவு அதிகரித்து வருகிறது. நாட்டில் ஜனநாயக சீர்திருத்தம் ஏற்படுத்துமாறு அரசை வலியுறுத்தி எதிர்ப்பாளர்கள், வழக்கறிஞர்கள் 200பேர் அறிக்கை விட்டுள்ளனர்.

சீனாவில் மனித உரிமை, ஜனநாயகம், சுதந்திர வாழ்க்கை உட்பட 8 சீர்திருத்தங்களை வலியுறுத்தி வரைவு அறிக்கையை அந்நாட்டு எழுத்தாளர் லீயோ ஷாவ்போ கடந்த 2008ஆம் ஆண்டு டிசம்பரில் வெளியிட இருந்தார். அதற்கு சில நாட்கள் முன்னதாக அவரை கைது செய்த சீன அரசு கிரிமினல் என முத்திரை குத்தி 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

இப்போது சிறையில் இருக்கும் ஷாவ்போவுக்கு இந்த ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் ஜனநாயக சீர்திருத்தம் செய்ய வலியுத்தி அரசின் எதிர்ப்பாளர்கள், வழக்கறிஞர்கள் 200பேர் கூட்டு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

நோபல் பரிசு பெற லீயோ ஷாவ்போ முழுத் தகுதி கொண்டவர் இது சிறந்த தெரிவு என்று பாராட்டியுள்ளனர்.

இதனால் சீன அர சுக்கு தர்ம சங்கடம் ஏற்பட்டுள்ளது. இதற் கிடையே ஷாவ்போ அவரது மனைவி லீயோவை விடுதலை செய்ய சர்வதேச நாடுகள் சீனாவை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

(ஸ்ரீ-2)

# இலங்கையில் மும்மொழிக் கொள்கையை விருத்தி செய்வதற்கு இந்தியா உதவி

மும்மொழிக்கொள்கையை மேலும் விருத்தி செய்வதற்கு இந்தியாவின் உதவியை இலங்கை நாடியுள்ளது.

இதற்காக, மொழிகளுக்கிடையிலான வித்தியாசங்களை கையாள்வதில் இந்திய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காகவும் இந்தியாவின் மொழிக்கொள்கையை விளக்குவதற்கும் இந்திய மனிதவள அபிவிருத்தி அமைச்சு இலங்கைக்கு விரைவில் நிபுணர்களை அனுப்பவுள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்திய மனித வள அபிவிருத்தி அமைச்சர் கபில் சிபலை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தியாவின் மும்மொழிக் கொள்கையின் படி இந்திய பாடசாலைகளில் மாணவர்கள் ஆங்கிலத்தையும் தமது தாய்மொழியையும், மாநிலத்தில் அதிகமாக பேசப்படும் மற்றொரு மொழியையும் கற்கின்றனர்.

இந்தி மொழி பேசும் மாணவர்கள் இந்தியாவின் மற்றொரு தேசிய மொழியை மூன்றாவது மொழியாக கற்கின்றனர். ஏனைய மாநிலங்களிலுள்ள மாணவர்கள் இந்தியை மூன்றாவது மொழிப்படமாக கற்கின்றனர்.

இம்மும் மொழிக் கொள்கையின் அடிப்படை ஒவ்வொரு பிள்ளையும் தனது தாய் மொழியையும் மற்றொரு தேசிய மொழியையும் கற்பதுடன் நாட்டின் ஏனைய கலாசாரங்களையும் அறிந்து கொள்ள உதவுவதை உறுதிப்படுத்துவதாகும் என இந்திய அரசாங்கத்தின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது மொழி பொதுவாக இடைநிலை பாடசாலை மட்டத்தில் கற்பிக்கப்படுகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# இங்கிலாந்து ராணியின் செலவை குறைக்க பிரிட்டன் அரசு திட்டம்

கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள இங்கிலாந்து ராணி 2ஆம் எலிசபெத் குடும்பத்தின் செலவை 25 சதவீதம் குறைக்க அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.

இது குறித்து லண்டனில் இருந்து வெளியாகும் டெய்லி எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் கூறியிருப்பதாவது,

இந்த மாதம் 20ஆம் திகதி வரவு செலவுத்திட்ட மதிப்பீடு நடத்தப்படுகிறது அப்போது ராணி 2 ஆம் எலிசெபெத் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு அரசு செய்யும் செலவு குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஏற்கனவே சமூக நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்ள ஆகும் செலவு 56.40 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. அரண்மனை பராமரிப்பு மற்றும் ராணி குடும்ப பயணத்துக்கு என 155 கோடி செலவிடப்படுகிறது. இதுவும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு குறைக்கப்படும் .கடந்த ஆண்டு ராணி குடும்பத்தினர் மேற்கொண்ட பயணத்திற்கு அரசு போக்கவரத்துத்துறை 51.46 கோடி செலவழித்துள்ளது.

இந்தச் செலவின் குறைப்பு எதிர்வரும் 2011ஆம் ஏப்ரல் மாதம் முதல் அமுலுக்கு வருகிறது. பக்கிங்காம் அரண்மனை சார்பில் ஆண்டு வருமான வரியாக 267 கோடி செலுத்தப்படுகிறது. இது தவிர பாதுகாப்பு உட்பட மற்ற செலவினங்கள் சேர்த்து ஆண்டுக்கு ஆயிரத்து 269 கோடி பக்கிங்காம் அரண் மனைக்காக செலவிடப்படுகிறது.

இவ்வாறு அந்த பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# வெளிச்சத்தில் தூங்கினால் உடல் எடை அதிகரிக்கும்

(வோஷிங்டன்)

இரவில் அதிக வெளிச்சம் கொண்ட மின் விளக்குகளை எரிய விட்டபடி தூங்கினால் உடல் எடை அதிகரிக்கும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

ரின்களில் அடைக்கப்பட்டு விற் பனைக்கு வரும் உணவு பொருட்கள் மற்றும் கொழுப்பு நிறைந்த உணவு பொருட்களை சாப்பிட்டால், உடல் எடைகூடும் என்பது தெரிந்த விடயம் ஆனால், இரவில் அதிக வெளிச்சம் கொண்ட மின் விளக்குகளால் கூட எடை கூடும் என்பது ஆராய்ச்சியில் நிரூ பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஓகியோ மாநில பல்கலைக்கழகத்தின் நரம்பியல்துறை மாணவர் லாரா பான்கென் இதற்கான ஆய்வுக்கு எலியை பயன்படுத்தினார். ஆய்வுக்கு எட்டு வாரங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. குறைந்த மின் விளக்கு வெளிச்சத்தில் வசித்த எலிகளை விட அதிக மின் விளக்கு வெளிச்சத்தில் வசித்த எலியின் எடை 50 சதவீதம் அதிகரித்துள்ளது. குறிப்பாக இரவில் அதிக நேரம் மின் விளக்கு வெளிச்சத்தில் இருந்த எலிகளின் எடைவேகமாக அதிகரித்தது தெரிய வந்தது.

இது குறித்து ஆராய்ச்சி ம்ாணவர் லாரா கூறுகையில், எலியின் இயக்கத்தில் அல்லது தினமும் சாப்பிடும் உணவில் எந்த வேறுபாடும் இல்லை. ஆனால் அதிக மின் விளக்கு வெளிச்சத்தில் வசித்த எலி அதிக எடையுடன் காணப்பட்டது. பொதுவாக மருத்தவ ஆராய்ச்சி மனிதனுக்கு இணையாக எலி பயன்படுவதால் மனிதருக்கும் இது பொருந்தும் என்றார்.

(ஸ்ரீ-2)


## kalaimagal International College

NOTHING IS IMPOSSIBLE

**கலைமகள் சர்வதேச கல்லூரி 2011 ஆம் ஆண்டிற்கான அனைத்து வகுப்புக்களுக்கும் விண்ணப்ப்பபடிவங்கள் செப்ரம்பர் 15 ஆம் திகதி முதல் உள்வாங்க உள்ளதால் உங்கள் சிறார்களையும் எமது கல்லூரியில் இணைத்துப் பயன்பெற அனுமதிக்கு முந்துங்கள்.**

### எமது சிறப்பான செயற்பாடுகளாவன:-



- முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த) வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவுசெய்யப்பட்ட முழுநேர தனியார் பாடசாலை (English Medium)
- Play Group முதல் Grade - 05 வரை 'Oxford' பாடத்திட்டமும் Grade- 06 முதல் G.C.E.(A/L) வரை இலங்கைப் பாடத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் கல்விக்கொள்கை.
- ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட தரம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
- சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- பிரத்தியேக சீருடை
- சிறார்களுக்கான சிறுவர் பூங்கா
- கணனி ஆய்வு கூடம்
- விஞ்ஞான ஆய்வு கூடம்
- நூலகம்
- சாதாரண மக்களும் முகம் கொடுக்கக் கூடிய மிகக் குறைந்த கட்டண வசதி
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழி மூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கிலமொழி மூலமும் சிங்களம் விருப்பத்திற்குரிய பாடமாகவும் காணப்படும் கற்பித்தல் செயற்பாடு
- அரச பாடசாலைகளின் நேரசூசியைப்பின்பற்றும் கல்விக் கொள்கை
- கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடாக உள்வாங்கும் அமைப்பு
- மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வருடாந்த பரிசளிப்புவிழா, கலை விழா என்பன உள்வாங்கப்பட்ட அமைப்பு

இன்னும் பல அரிய செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் பிரதான கிளைகள், சாவகச்சேரி,கொக்குவில், நெல்லியடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டும் இக்கிளைகளில் மட்டுமே முன்பள்ளி முதல் க.பொ.த. (உ/த) வரையிலான வகுப்புக்கள் உள்வாங்கப்பட்டு உள்ளன. ஏனைய அச்சுவேலி, மானிப்பாய், பருத்தித்துறை, கொடிகாமம், நல்லூர் கிளைகளில் Play Group L.K.G,U.K.G போன்ற வகுப்புக்கள் மட்டுமே ஆரம்பிக்கப்பட உள்ளன. இக் கிளைகளில் இணைந்து கொள்ளும் சிறார்கள் தமது மேல்வகுப்புகளுக்கு கிட்டிய பிரதான கிளைகளில் ஒன்றில் இணைந்து கற்கக்கூடிய வகையில் எமது வடமாகாண செயற்திட்டம் காணப்படுகிறது என்பதையும் இங்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

எமது கல்லூரியின் 2011 விண்ணப்பங்கள் செப்ரம்பர் 15 முதல் உள்வாங்கப்பட உள்ளதால் உங்கள் பிள்ளைகளுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளவும், சமர்ப்பிக்கவும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

The Director:
**kalaimagal International College**
Church Lane, Kulappiti Junction, Kokuvil.
தொ.பே: 021 3215785, 0778834592.

NOTHING IS IMPOSSIBLE

(சி-1284)



குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டோருக்கான நிலையம் மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு ஆகியன இணைந்து நடத்திய பொலிசாருக்கான செயலமர்வு நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜா, சட்ட அலுவலர் சஜிலனி அபயக்கோன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பொலிஸாரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.கரன்)

## சிறப்புப் பட்டி மன்றம்

(யாழ்ப்பாணம்)

கந்தர் மடம் அருள்மிகு பழம் வீதி ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தில் இன்று விஜய தசமியை முன்னிட்டு இரவு 8 மணிக்கு ஈழத்து முன்னணி பேச்சாளர்கள் கலந்து கொள்ளும் பட்டி மன்ற நிகழ்வு இடம் இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

## பல உயிர்களை காவுகொண்ட முதலை மடக்கிப் பிடிப்பு

காத்தான்குடி பிரதேசத்தில் நீண்ட நாட்களாய் அட்டகாசம் காட்டி பல உயிர்களை காவு கொண்ட இராட்சத முதலையை காத்தான்குடி மக்கள் நேற்று மதியம் மடக்கிப் பிடித்தனர்.

காத்தான்குடி வாவியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 60 வயது மீனவரை கடந்த 9ஆம் திகதி இழுத்துச் சென்று கடித்துக்குதறி அவரது உயிரை கொன்றதுடன் பல கால் நடைகள், கோழிகளையும் பிடித்து உண்டதுடன் இரவு நேரங்களில் அப்பகுதி மக்களைத் தூங்க விடாது கடுமையான கஷ்டங்களை உண்டு பண்ணியிருந்தது குறிப்பிடத்தக்கது.

மடக்கிப்பிடிக்கப்பட்ட முதலை வீதியில் கட்டி வைக்கப்பட்டுள்ளதாகவும் இதனை பெருமளவிலான மக்கள் பார்வையிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

(கொழும்பு)

பொதுமக்களுக்கு தகவல்களை வழங்கும் ஊடகவியலாளர்கள் தமது உயிரை பணயம் வைத்து தொழில்புரிய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என சுதந்திர ஊடக அமைப்பின் ஏற்பாட்டாளர் சுனில் ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மீது பொலிசார் தாக்குதல் நடத்தியமைக்கு ஐந்து ஊடக அமைப்புகள் கண்டனம் தெரிவித்தும் அச்சம்பவத்தோடு தொடர்புபட்ட பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென கோரியும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் ஊடக அமைப்புக்கள் நேற்று முன்தினம் கூட்டாக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

கடந்த 14 ஆம் திகதி பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை, அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை தாக்கியமை தொடர்பாக புகைப்படங்கள், வீடியோப் படங்களுடனான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. அவற்றை நாம் பொலிஸ்மா அதிபருக்கும் ஊடகத்துறை அமைச்சருக்கும் சமர்ப்பிக்க உள்ளோம்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக உரிய முறையில் விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனையினை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றார்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் ஞானசிறி கொத்திகொட கருத்து தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர் களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் தாக்கியமை தொடர்பில் பலம் வாய்ந்த அரசியல் பின்னணி உள்ளது.

இல்லாவிட்டால் இப்படி பகிரங்கமாக பொலிஸாரால் எப்படி தாக்குதல் நடத்த முடியும்? மேற்படி சம்பவ இடத்தில் ஊடகவியலாளர்கள் அரசாங்க தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டையினை காண்பித்த போதும் பொலிஸார் தாக்கியுள்ளனர். இவ்வாறு தாக்குதல் நடத்துவதனால் அதற்கான அதிகாரத்தை வழங்கியது யார்? என்றார்.

தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர்களில் ஒருவர் விபரிக்கையில்,

நாங்கள் செய்தி சேகரிக்கச் சென்ற இடத்தில் பொலிசார் பல பல்கலைக்கழக மாணவர்களைத் தாக்கினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அதனை பார்த்துக்கொண்டிருந்த எங்களை பொலிஸார் தகாத வார்த்தைகளில் திட்டிய துடன் அவ்விடத்திலிருந்து போகுமாறும் கூறினார்கள். நாம் அந்த இடத்திலிருந்து போகாமையினால் பொலிசார் எங்களை கடுமையாக தாக்கினார்கள் என்றார்.

இதேவேளை ஊடக நிறுவனங்களுக்கெதிராகவும் ஊடகவியலாளர்களுக்கு எதிராகவும் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்ற போதும் அதனை மேற்கொள் வோருக்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை.

இந்த நிலைமையினை முடிவுக்கு கொண்டு வருமாறு கோரி நாளை மறுதினம் செவ்வாய்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு லிப்டன் சுற்று வட்டத்தில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதாகவும் அந்த அமைப்புகள் அறிவித்துள்ளன.

(ஸ்ரீ-2)

# ஆல்ப்ஸ் மலையை குடைந்து பிரமாண்ட ரயில் பாதை உருவாக்கம்

(செட்ரான்)

உலகின் மிக நீண்ட மலைத் தொடரான ஆல்ப்ஸ் மலையை குடைந்து பிரமாண்டமான கணவாய் புகையிரத பாதையினை சுவிற்ஸர்லாந்து வெற்றிகரமாக நடத்தியது.

ஐரோப்பா கண்டத்தின் வடக்கு, தெற்கு பகுதியின்ன இணைத்து ஆல்பஸ் மலைத் தொடர் அமைந்துள்ளது. கோத்ராட் கணவாய் இம்மலைப்பகுதியினை குடைந்து 57 கி.மீ தூரத்திற்கு (34 மைல்கள் புகையிரத பாதை அமைக்க 9.8 மில்லியன் சுவிஸ் பிராங்க்கள் 10.6 மில்லியன் டொலர்கள்) திட்டச்செலவு மதிப்பிடப்பட்டு கடந்த 1994ஆம் ஆண்டு கட்டுமானப்பணிகள் தொடங்கின.

இந்த புகையிரதப் பாதை சுவிற்ஸர்லாந்தின் ஜூரிச் நகரினையும் இத்தாலியின் மிலன் நகரினையும் இணைக்கின்றன. மொத்தம் 10 மீற்றர் விட்டளவு கொண்ட மலையினை குடைந்து பாதை அமைக்க சிசிசி எனும் அதி நவீன இயந்திரம் வரவழைக்கப்பட்டு 50 சுரங்கத்தொழிலாளர்கள் இதில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மலையை குடையும் இயந்திரத்தின் பணியை சுவிஸ் டி.வி. ஐரோப்பா கண்டம் முழுவதும் நேரடியாக ஒளிபரப்பியது. பின்னர் கட்டுமானத்தொழிலாளர்கள் இந்தப் பணி வெற்றிகரமாக முடிந்ததையெடுத்து கைதட்டி ஆரவாரம் செய்து ஒருவருக்கொருவர் வாழ்த்து தெரிவித்துக்கொண்டார்.

இதன் கட்டுமானப்பிரிவின் தலைவர் ஹெனிஸ் ஈகர்பார் தெரிவிக்கையில்,

ஐரோப்பா கண்டத்தின் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த பணியில் மொத்தம் 2ஆயிரத்து 500 பேர் ஈடுபட்டனர். கட்டுமானப்பணியின் போது 8 பேர் இறந்துள்ளதாகவும் அவர்களுக்கு இந்த வெற்றியை சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

கோத்ராட் கணவாய் வழியாக புகையிரத போக்குவரத்து தொடங்கினால் இரு நகரங்களுக்கிடையே பயண தூரம் இரண்டு மணி நேரம் 60 நிமிடங்கள் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்திற்கும் இந்த கணவாய் பயன்படுத்தப்பட்டால் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் ஏற்படும்.

எனினும் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டில் தான் புகையிரத போக்குவரத்திற்கு திறந்து விடப்படும் என கூறப்படுகிறது. சுவிற்ஸர்லாந்து போக்குவரத்துத்துறை அமைச்சர் பீட்டர் பியூகிளிஸ்டர் கூறுகையில்,

உலகின் மிக நீண்ட கணவாய் புகையிரதப் பாதையை அமைத்த பெருமை சுவிற்ஸர்லாந்து நாட்டிற்கு கிடைத்துள்ளது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

இதற்கு முன்பு ஜப்பானில் உள்ள் ஷிகான் கணவாய் புகையிரதப் பாதைதான் (53.9 கி.மீ.) உலகின் நீண்ட புகையிரதப் பாதை என்ற பெருமையினை பெற்றிருந்தது.

(ஸ்ரீ-2)

# தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அமெரிக்காவிற்கு அச்சுறுத்தல்

## அந்நாட்டு நீதிமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அமெரிக்காவிற்கு அச்சுறுத்தல் என அந்த நாட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. அவர்கள் இலங்கையில் இருக்கின்ற அமெரிக்கர்களுக்கு மாத்திரமின்றி முழு அமெரிக்கர் களுக்கும் அச்சுறுத்தலாக இருந்ததாக அமெரிக்க அரசின் நீதிபதிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அமெரிக்காவில் மாத்திரமின்றி ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் விடுதலைப்புலிகள் அமைப்பு உண்மையாகவே அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலாக அமைந்தா? என எழுப்பப்பட்ட வினாவிற்கு பதிலளிக்கும் முகமாகவே நீதிபதிகள் திணைக்களத்தின் ஜெப்ரி நொக்ஸ் தெரிவித்துள்ளார்.

இவ் இயக்கத்திற்காக நிதி சேகரிப்பில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கருணாகரன் கந்தசாமி எனும் இலங்கை தமிழ் குடியேற்றவாசி தொடர்பான வழக்கு விசாரணையின் போதே அவர் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட கருணாகரன் தொடர்பான வழக்கு விசாரணையின் தீர்ப்பு எதிர் வரும் நாட்களில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்திற்கு உடந்தையாக இருந்தார் என குற்றம் உறுதிப்படுத்தப்படுமானால் அவருக்கு 20 வருடங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

இதனிடையே கருணாகரன் கந்தசாமி தமக்கு உயிரச்சுறுத்தல் இருப்பதாக கூறி இலங்கையிலிருந்து அமெரிக்காவிற்கு அகதியாக சென்றவராவார்.

அவர் தமிழ் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் நோக்கிலேயே நிதி சேகரிப்பில் ஈடுபட்டதாக நீதிபதிகள் தரப்பில் வாதம் ஒன்று முன் வைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ரஜினி ஸ்டைலில் சூர்யா



'கஜினி' பட வெற்றிபோல் மீண்டும் ஒரு வெற்றி போர்முலாவுடன் ஏ.ஆர். முருகதாஸ் - சூர்யா கூட்டணி அதிரடிவேகம் காட்டிவரும் படம் 'ஏழாம் அறிவு' சேர்க்கஸ் கலைஞனாக சூர்யா திறமை காட்டி வரும் இந்தப் படத்தில் சில நவீன தொழில் நுட்பத்தையும் கையாள உள்ள னராம்.

டெக்னிக்கல் ரீதியாக உலக தரத்திற்கு தமிழ் சினிமாவை உயர்த்தியிருக்கிறது எந்திரன். தமிழ் சினிமாவிலும் ஹாலி வுட்டை மிஞ்சும் படங்கள் வருவதற்கு பாதை வகுத்துள்ளது எந்திரன். இந்தப் பாதையில் தற்போது பயணிக்க உள்ள தாம் ஏழாம் அறிவு.

எந்திரனில் பயன்படுத்தப்பட்ட டெக்னிக்கல் விடயங்களைஏழாம் அறிவு படத்திலும் பயன்படுத்த முடிவெடுத்துள்ளாராம் ஏ.ஆர்.முருகதாஸ். இதற்காக எந்திரனில் டெக்னிக்கல் காட்சிகளுக்கு பணியாற்றியது ஸ்டான் வின்ஸ்டன் ஸ்டூடியோவு டன்பேச்சு வார்த்தை நடத்தி ஒப்புதல்வாங்கி இருக்கிறதாம் ஏழாம் அறிவு படக்குழு.

இதன்படி ஹொலிவுட் படங்களுக்கு நிகரான டெக்னிக்கல் காட்சிய மைப்புகள் எந்திரனுக்கு பின்னர் ஏழாம் அறிவிலும் தொடரவுள்ளது.

கஜினி மூலம் பாலிவுட் சினிமாவை கலக்கினார் ஏ.ஆர்.முருகதாஸ். இப்போது ஏழாம் அறிவு மூலம் ஹொலிவுட் தரத்துக்கு படம் தரப் போகி றார் என்பது தமிழ் சினிமாவுக்கு மற்றொரு பெருமைக்குரிய விஷயம்தான்.

# உயிருக்கு போராடிய சிறுவனை காப்பாற்றிய இளைய தளபதி

இந்திய மாநிலம் சீராலா கிராமத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி சுப்பாராவ்-மாதவி தம்பதியரின் மகன் யஷ்வந்த். இவன் ஐந்தாம் வகுப்பு படித்து வருகிறான். இவனுக்கு பிறந்தது முதலே இரத்த கொதிப்பு , வாந்தி , தலைவலி, மூக்கில் இரத்தம் வடிதல் உள்ளிட்ட இரத்தம் சம்பந்தப்பட்ட ஏராளமான நோய்கள் இருந்துள்ளன.


ஆந்திர அரசின் காப்பீட்டுத் திட்டமான ஆரோக்கிய ஸ்ரீ திட்டத்தின் மூலம் சிகிச்சை பெற்று வந்த யஷ்வந்த்தின் மேலதிக சிகிச்சைக்கு நிறைய பணம் தேவைப் பட்டது.

இதனால் ஆந்திராவிலுள்ள தனியார் மருத்துவமனைகள் யஷ்வந்திற்கு சிகிச்சை அளிக்க மறுத்துவிட்டன. இந்நிலையில் தமிழகம் வந்த யஷ்வந்தின் பெற்றோர் திரைப்பட நடன இயக்குநர் லோரன்சின் தொண்டு நிறுவனம் குறித்து கேள்விப்பட்டனர். அதன் மூலம் யஷ்வந்தின் சிகிச்சைக்கு முயற்சி செய்தனர். யஷ்வந்த் குறித்து கேள்விப்பட்ட லோரன்சிற்கு உடனே இளைய தளபதி விஜய்யின் நினைவு வர அவர் விஜய்யை அணுகி விடயத்தை தெரிவித்துள்ளார்.

உடனே விஜய் தனது தங்கை வித்யாவின் நினைவாக நடத்தி வரும் தொண்டு நிறுவனத்தின் மூலம் யஷ்வந்திற்கு உதவி செய்ய முடிவு செய்தார். மேலும் யஷ்வந்தின் சத்திரசிகிச்சைக்கு எவ்வளவு பணம் செலவானாலும் சரி அதனை தானே தருவதாக விஜய் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட யஷ்வந்திற்கு செய்யப்பட்ட சத்திரசிகிச்சை வெற்றி அடைந்து மறுபிறவி பெற்றார். குணமான யஷ்வந்த்தும் அவனது பெற்றோரும் புஷ்பா கார்டனில் காவலன் பட சூட்டிங்கில் இருந்த விஜய்யும் லோரன்சையும் நேரில் சந்தித்து கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர். அவர்களுக்கு விஜய்யும் லோரன்சும் ஆறுதலும் நம்பிக்கையும் கூறினர்.

# மீண்டும் வில்லனாகும் மாதவன்



''ஆயுத எழுத்து'' படத்தில் முரட்டுத்தனமான தாதாவாக நடித்து மிரட்டிய மாதவன், மீண்டும் அவதாரம் எடுக்கிறார். இவர் வில்லனாக மாற இருப்பது ஆர்யாவுக்கு எதிராகவாம்.

கமலஹாசன்,திரிஷா,சங்கீதா ஆகியோருடன் மாதவன் நடித்துள்ள மன்மதன் அம்பு படம் இன்னும் ஓரிரு மாதங்களில் திரைக்கு வரவிருக்கிறது. இதனை அடுத்து லிங்குசாமியின் 'வேட்டை' ப்படத்தில்மாதவன் நடிக்கவிருப்பதாக திரைவட்டாரத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

'வேட்டை' படத்தில் ஏற்கனவே சிம்பு ஹீரோவாக நடிப்பதாக இருந்த நிலையில் அவர் நீக்கப்பட்டார். அடுத்த தாக விஜய் நடிப்பதாக கூறப்பட்டு அதுவும் இல்லை என்றாகி, இப்போது அதில் ஆர்யா நடிக்கிறார். தயாரிப்பு- தயாநிதி யின் கிளௌட் நைன் மூவிஸ். இசை--யுவன் ஷங்கர்ராஜா. ஒளிப்பதிவு -நீரவ்ஷா.

இந்தப் படத்தில் நாயகிக்கான தேடுதல் வேட்டையில் தனது முந்தைய படமான பையாவின் நாயகி தமன்னாவையே தேர்வு செய்தார் லிங்குசாமி. இப்போது இதன் வில்லனுக் கான தேடலில் புக்கிங் ஆகியிருப்பவர் மாதவன்.

மாதவன் 'ரங்தே பசந்தி', 'குரு', '3 இடியட்ஸ்' உள்ளிட்ட ஹிட்டான படங்களில் நடித்து தற்போது பாலிவுட்டிலும் புகழ்பெற்ற நடிகராகத் திகழ்கிறார். இந்தியில் மாதவன் நடித்து மிகவும் பேசப்பட்ட3 இடியட்ஸ் படத்தின் தமிழ் ரீமேக்கில் நடிக்க சங்கர் கேட்டும் மறுத்து விட்டதாக தகவல்கள் வெளியாகின.

சிறந்த கதையம்சமான 3இடியட்ஸ் ரீமேக்கிலேயே நடிக்க மறுத்துவிட்ட மாதவன் வேட்டையில் வில்லனாக நடிக்க எப்படி சம்மதித்தார் என்ற சந்தேகத்தை தீர்த்து வைக்கிறது சினிமா வட்டாரத் தகவல்கள். ஆயுத எழுத்தில் நெகட்டிவ் கரக்டரில் நடித்திருந்தாலும் மாதவனின் நடிப்பு சிறப்பாகப் பேசப்பட்டது. அதேபோன்ற ஒரு அருமையான கரக்டர்தானாம் வேட்டையில் மாதவனுக்கு. அப்புறம் என்ன சிறந்த நடிகனுக்கு தேவையானது நல்ல கதாபாத்திரம்தானே அதனால்தான் ஆமாம் என்றுள்ளாராம் மாதவன். அதுமட்டுமில்லாமல் மாதவனுக்கு மிகப்பெரிய ஹிட்டாக அமைந்த படமான ரன் லிங்குசாமியின் படம் என்பதும் நம்பிக்கையான ஒரு காரணமாம். இருந்தாலும் சிம்பு, விஜய் வரிசையில் மாதவனும் சேர்ந்துவிடுவாரோ என்றும் கோடம்பாக்கத்தில் கிசுகிசுக்கப்படுகிறது.

ம்ம்ம்... கிடைத்தது வில்லத்தனமாக இருந்தாலும் அதில் வில்லங்கம் ஏதும் இல்லாமல் இருந்தால் சரி.

# என்ன சொல்றார் சிம்பு? கேட்கிறார் லேகா!



சிம்புவால் சிலம்பாட்டம் படத்தில் இருந்து நடிப்பு வரவில்லை என வம்பு பேசி ரிஜெக்ட் செய்யப்பட்ட நடிகை லேகா வோஷிங்டனுக்கு தற்போது சுக்ரதிசை போலும். தொலைக்காட்சி தொகுப்பாளினியாக தன் கரியரை தொடங்கிய அம்மணி ஜெயங்கொண்டான் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் எண்ட்ரி ஆனார்.

சிம்புவின் வதந்தியால் தமிழில் எதிர்பார்த்த வாய்ப்புகள் கிட்டாத போதிலும் பாலிவுட்டில் பலே நடிகையாகி விட்டார் அம்மணி. ராஜ்குமார் சந்தோஷ் இயக்கத்தில் மூன்று இந்திப் படங்களில் நடித்து வரும் லேகா, தமிழில் தயாநிதி அழகிரி வாங்கி விரைவில் வெளியிடவுள்ள குவாட்டர் கட்டிங் படத்திலும் நாயகியாக நடித்திருக்கிறார்.

மேலும் கமலின் புதிய படமொன்றிலும் நாயகியாக நடிக்கவிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போ என்ன சொல்லப் போறீங்க சிம்பு? என்று கேட்கிறார் லேகா.




# ஷங்கரிடம் சரணடைந்த விஜய்!


தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னத்துக்கு உதவ த்ரி இடியட்ஸீக்கு முன்னதாகவே இணைகிறார்கள் இயக்குநர் ஷங்கரும் நடிகர் விஜய்யும்.

நடிகர் விஜய் நடித்து வெளிவந்த கடைசி 3 படங்களுமே அவருக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது. எனவே மீண்டும் ஒரு வெற்றிப் படத்தை கொடுத்தே தீர வேண்டும் என மலையாளத்தில் வெளிவந்த பாடிகார்ட் தெலுங்கின் ஆசாத் மற்றும் இந்தி 3 இடியட்ஸ் என ரீமேக் ரூட்டுக்கு மீண்டும் திரும்பினார்.

3 இடியட்ஸ் படத்தை தயாரிக்க முன் வந்த ஜெமினி பிலிம் சர்க்யூட் இயக்குநர் ஷங்கர் ஹாரிஸ் ஜெயராஜ் மற்றும் சத்யராஜ் ஆகியோரை ஒப்பந்தம் செய்தார்கள். ஆனால் இப்போது அப்படத்தின் வேலைகள் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

எஸ்.ஏ.சந்திரசேகரனிடம் உதவி இயக்குநராக பணியாற்றியதன் காரணத்தால் அவரது மகன் விஜய்யை அமீர்கான் ரோலில் நடிக்க ஒப்பந்தம் செய்து கால்ஷீட்டையும் வாங்கினார் இயக்குநர் ஷங்கர்.

3 இடியட்ஸை தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில் தயாரிக்க இருந்த நிலையில் விஜய்யை தெலுங்கிலும் அறிமுகம் செய்ய வேண்டும் என்று விரும்பினார் எஸ்.ஏ. சந்திரசேகரன்.



இதுகுறித்து ஷங்கரிடம் தனது கோரிக்கையையும் வைத்திருக்கிறார். இப்படி ஒரு விடயத்தையே எதிர்பார்க்காத ஷங்கர் வேறு வழியின்றி 3 இடியட்ஸ் படத்தை சிறிது காலம் தள்ளி வைக்க வேண்டியதாகிவிட்டது.

தமிழ்ப் படங்களின் தயாரிப்பு செலவை விட வட்டி அதிகமாக கட்டியவர் என கோடம்பாக்கத்தில் பேசப்பட்டவர். ஏ.எம். ரத்னம். ஷங்கரின் இந்தியன், பாய்ஸ் மற்றும் முதல்வன் இந்தி ரீமேக்கான நாயக் ஆகிய படங்களை தயாரித்தவர். விஜய்யின் கில்லி, சிவகாசி ஆகிய படங்களையும் தயாரித்தவர். தற்போது பெரும் கடன் சுமையில் இருப்பதால் அவருக்கு உதவ ஷங்கர் முன் வந்தார்.

ஷங்கரிடம் விஜய்யின் கால்ஷீட் இருப்பதால் இருவரும் ஏ.ஏம்.ரத்னம் தயாரிப்பில் இணைவது என இறுதி செய்யப்பட்டது.

முதலில் ஒரு மாஸ் பாட்டு ,நாலு அதிரடி ஃபைட், க்ளைமாக்ஸீக்கு முன்னால் ஒரு குத்துப்பாட்டு... இப்படி விஜய் படங்களுக் குரிய ஃபார்முலா எதுவும் இல்லாமல் அவரை இயக்க முடிவு செய்திருக்கிறார் ஷங்கர் தற்போதைய சூழல்களைக் கருத்தில் கொண்டு ஷங்கரின் கண்டிஷன்களுக்கு கட்டுப்படுவதாக உறுதியளித்திருக்கிறார் விஜய்.

# தனுஷ் செல்வராகவன் இரகசிய திட்டம்



தனுஷ்க்கு ஆடுகளம், சீடன், உத்தம புத்திரன் என அடுத்தடுத்து படங்கள் திரைக்கு வர காத்தி ருக்கின்றன. மாப்பிள்ளை படமும் கூட கிட்டத்தட்ட முடிவடையும் நிலையில் உள்ளது. இந்த அதிரடி தொடர் படங்களின் எண்ணிக்கையை மேலும் கூட்ட தனுஷ்ம் செல்வராகவனும் இரகசிய திட்டமிட்டு களத்திலும் இறங்கி கலக்கி வருகிறார்களாம்.

தனுஷ்-செல்வராகவன் சகோரதக் கூட்டணி தற்போது 'மறவன்' படத்தில் இணைந்துள்ளது. இந்தப் படத்தின் முதல் கட்டப் படப்பிடிப்பையும் படு கமுக்கமாக முடித்துள்ளனராம். பத்து நாட்களாக நடந்த மறவன் படப்பிடிப்பில் எல்லோரையும் தூங்கவிடாமல் வேலை வாங்கினராம் செல்வா. மொத்த யூனிட்டும் மொத்த மாகவே தினமும் நான்கு மணி நேரத்திற்கும் குறை வாகவே தூங்கியதாம்.

இப்படி நடந்து முடிந்த முதல் கட்டப் படப்பிடிப்பிலேயே படத்தின் ரொம்பவே கஷ்டமான காட்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டு விட்டதாக கூறி பெருமைப்படுகிறது படக் குழு. படத்தின் நாயகியாக ஆன்ட்ரியா நடிக்க இசைப் பணியை ஜீ.வி. பிரகாஷ் ஏற்றுள்ளார்.

முக்கியமான காட்சிகள் பல முடிந்து விட்டதால் மற்ற காட்சிகள் விரைவில் எடுக்கப்படும். இந்தப் படமும் தற்போது வெளிவரவிருக்கும் தனுஷ் படங்களின் வரிசையில் இடம்பெறலாம்.

# நவராத்திரியின் மகிமை !



ஆதியின் மூலமாய் நீங்காமல் நிலைத்திருப்பவள் சர்வசக்தி. வரலாற்றின் தொடக்கம் தொட்டே சக்தி வழிபாடு இருந்து வந்துள்ளது. சர்வம் சிவமயம் என்றாலும் அந்த சிவத்தை தன் ஆற்றலால் இயக்கி வருபவள். தாய் சக்தியே ஆவாள்.

அம்பிகையை கொண்டாடி மகிழ நமக்கு தசரா பண்டிகை மிக முக்கியமானதாகும். நவராத்திரி என்பது ஒன்பது நாளில் அலைமகள், திருமகள், கலைமகள் மூவரையும் பூஜிப்பது ஆகும். பத்தாம் நாள் மகிஷாசுரனை வென்ற மகிஷாசுரவர்த்தினிக்கு பூஜை செய்யும் விஜய தசமி திருநாளாகும்.

உலகை ஆளும் பராபரையான பராசக்தி துர்க்கையாக தோன்றி தீமைகளை அழிப்பவளாகவும், திருமகளாக தோன்றி செல்வங்களை அளிப்பவளாகவும் கலைவாணியாக வந்து ஞானத்தை வழங்குபவளாகவும் திகழ்கின்றாள்.

வருடத்தில் நான்கு நவராத்திரிகளை தேவிக்கு கொண்டாட வேண்டும் என்பது ஐதீகமாகும். இதில் ஆடிமாதத்தில் வரும் ஆஷாட நவராத்திரியைப் பற்றி ஓரளவுக்கு மக்களுக்கு தெரிந்திருக்கும். ஆனால் அனைவரும் அறிந்த மகா நவராத்திரி புரட்டாதி மாதம் அமாவாசை அடுத்து வருவதாகும்.

புரட்டாதி மாதம் வளர்பிறை பிரதமை திதியில் தொடங்கி தசமி திதியுடன் நவராத்திரி முடிவடைகின்றது. நவராத்திரி விழாவில் இரவு நேரத்தில் தான் பூஜைகள் நடக்கும்.

சிவபக்தியிலே சிறந்த இராவணனை வெல்வது கடினம் என்று இராமன் எண்ணினான். அதற்காக அகத்தியரிடம் ஸ்ரீ வித்யா மகாமந்திரத்தை உபதேசம் பெற்றார். இம்மந்திரத்தை சொல்லி ஒன்பது நாளும் துர்க்கையை வணங்கி அவள் அருள் பெற்று விஜயதசமியன்று இராமன் வெற்றி பெற்றான் என்று கூறுவர். அதுபோல் அஞ்ஞாதவாசத்தில் பாண்டவர்கள் இருந்தபோது கௌரவ படை அவர்களை அழிக்க வந்தது.

விராடநகரத்தில் வந்த கௌரவப்படையை பாண்டவர்கள் துர்க்கையை வணங்கி போரில் வெற்றி பெற்றனர். இப்படி பற்பல அற்புதங்க்ளை நிகழ்த்த துர்க்கையின் வழிபாடு உகந்ததாகும்.

நவராத்திரியின் முதல் மூன்று நாட்களும் வெற்றியினை வழங்கும் துர்க்கை அம்மனை பூஜிக்க வேண்டும். துர்க்கம் என்றால் கோட்டை. நாட்டைக் காக்கும் கோட்டையை போல் என்றும் நம்மை காத்து அருள்பவள் துர்க்கை. நவராத்திரியின் முதல் மூன்று நாளில் துர்க்கைக்கு சிவப்பு மற்றும் மஞ்சள் மலர்களால் அர்ச்சனை செய்து அவள் அருளைப் பெறலாம். இவள் நெருப்பின் ஒளி பொருந்திய அழகுடையவள். ஆவேசப் பார்வை கொண்ட சிவபிரியை. போருக்குச் செல்லும் வீரர்கள் போரின் தொடக்கத்திலும் முடிவிலும் இவளை வழிபடுவார்கள். வங்காளத்தில் இதனை துர்க்கா பூஜை என்று கொண்டாடுவார்கள்.

அடுத்த மூன்று நாட்களிலும் செல்வத்தினை வாரி வழங்கும் மகாலட்சுமியை வணங்குவார்கள். செந்தாமரையில் வீற்றிருக்கும் விஷ்ணுபிரியை அருளழகு கொண்டவள். அமுத கலசத்துடன் தோன்றியவள். நாற்புறமும் யானைகள் அரண்போல் இவளுக்கு நிற்கின்றன. தன் திருப்பார்வையால் வறுமையை அகற்றி வளம் தருபவள்.

## இன்று விஜயதசமி தினமாகும்

கடைசி மூன்று நாட்களில் ஞானசக்தியாக விளங்கும் சரஸ்வதியை வணங்குபவர் வெண்தாமரை. மலரில் சாத்வீகமுகத்துடன் வைரம்போன்று ஒளிவீசும் தன்மையுடன் ஸ்ரீ சரஸ்வதி காட்சி தருகிறாள். சகல கலைகளும் அதிபதியாக விளங்கும் தேவி இவள்.

நவராத்திரியின் ஆறாவது, ஏழாவது நாளில் மூல நட்சத்திரத்தில் சரஸ்வதியை ஆவாகனம் செய்து வழிபடுவது வழக்கமாகும். திருவோணம் நட்சத்திரத்தில் சரஸ்வதி பூஜை முடிவடையும் வாக்கினில் இனிமையும் தெளிவும் பெற அருள்புரிபவள் சரஸ்வதி. பிரணவ மந்திரமான "ஓம்" எனும் ஒலியின் சிறப்பினை உணர்த்தும் படியான வீணையினை கையில் ஏந்திய வண்ணம் அருள் புரிகிறாள். சரஸ்வதி தேவியை மூன்று தினங்களில் மல்லிகை, முல்லை, நந்தியாவட்டை ஆகிய மலர்களால் அர்ச்சனை செய்ய வேண்டும். அஷ்டலட்சுமியைப் போல் அஷ்ட சரஸ்வதிகள் இருக்கின்றனர். வாகீஸ்வரி, சித்ரேஸ்வரி, துளஜா, கீர்த்தீஸ்வரி, அந்தரிட்ச சரஸ்வதி, கடசரஸ்வதி, நீல சரஸ்வதி, கினி சரஸ்வதி என்று வரிசையாக அஷ்ட சரஸ்வதிகள் அழைக்கப்படுகின்றனர்.


சக்தியில்லையேல் சிவமில்லை என்பதை உணர்த்தும்படியாக நவராத்திரி திருவிழா அமைந்துள்ளது. நவராத்திரியின் ஒன்பதாம் நாள் மகாநவமி சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை கொண்டாடப்படுகின்றது.

நம்முன்னோர் வாழும் ஜீவனிலிருந்து சடப்பொருளான ஆயுதம் வரை வணங்கி வழிபட்டுள்ளனர். இது தூணிலும் துரும்பிலும் கூட இறைவன் இருக்கிறான் என்பதையே உணர்த்துகின்றது. நவீன இயற்பியல் நிலைநிற்கும் தன்மையற்ற துமிகளை இறைவனின் செயலாகவே கருதுகின்றது. நவராத்திரியின்போது இந்த ஒன்பது தேவியர்களையும் முறையாக வழிபடுகிறோம்.

ஒரு தேவியை முதன்மையாகவும் மற்றவர்களைப் பரிவார தெய்வங்களாகவும் பாவித்து வணங்க வேண்டும். நவராத்திரியின் போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கன்னியை ஒவ்வொரு தேவியாக பாவனை செய்து வழிபடுவார்கள். இந்த ஒன்பது நாட்களிலும் தேவிக்கு உகந்த லலிதா சகஸ்ரநாமம், அபிராமி அந்தாதி, சௌந்தர்ய லஹரி, துர்க்காஷ்டகம் போன்ற சுலோகங்களை படித்து குங்கும அர்ச்சனை செய்ய வேண்டும். ஏழை எளிய பெண்களுக்கு அன்னமிட்டு துணியோ, புடைவையோ நம்மால் முடிந்ததை தந்து தேவியின் அருள்பெறலாம். இந்த விழாவின்போது உறவினர்கள், நண்பர்கள் வந்து கலந்து கொண்டு உறவுகளை பலப்படுத்தவும் வழி உண்டாகிறது. அன்னையின் திருவருளைப் பெற்று மகிழ்ந்திட இதுவே உகந்த நாளாகும்.

அண்டமெல்லாம் பூத்தாளை, மாதுளம்பூ நிறத்தாளை, முக்கண்ணியை தொழுவார்க்கு ஒரு நாளும் தீங்கில்லை என்று அபிராமிப்பட்டர் அகமகிழ்கின்றார். அவளின் திருவுருளைப் பெறுவதற்கு நாம் சிரத்தையுடன் தொழுவோமாக!

## நவ துர்க்கைகள்



நவராத்திரி வழிபாட்டில் முதன்மையானது துர்க்கையின் வழிபாடு. முதல் மூன்று நாட்கள் வழிபடு தெய்வமான துர்க்கையின் அம்சங்கள் வார்த்தையில் வடிக்க முடியாத வர்ண ஜாலம்.

களப்பிரம்மதேவர் வராஹ புராணத்தில் 9 துர்க்கைகளின் பெயர்களையும் அம்பிகையின் அம்சங்களையம் ஸ்லோகமாக கூறியுள்ளார்.

**சைலபுத்ரி:** ஆனந்தமயமானவள். தன் இரு கரங்களிலும் சூலமும், தாமரையும் வைத்துக்கொண்டு ஒய்யாரமாய் வீற்றிருப்பாள். காளை வாகனத்தில் கலங்காமல் தொலுவிருப்பாள்.

**பிரம்மசாரினி:** வெண்ணிற ஆடையுடன் வலக்கையில் ஜெபமாலையும், இடக்கையில் கமண்டலமும் தாங்கி அமர்ந்திருப்பாள். இவள் எப்போதும் தவத்திலேயே இருப் பாள். அதனால்தான் இவள் பிரம்மசாரினீ. பிரம்மம் என்றால் தவம் என்பது பொருள்.

**சந்திரகண்டா:** சந்திரனை போல் தங்கமயமான வண்ணத்தில் ஜொலிப்பவள். இவள் சிரசில் மணிவடிவத்தில் பாதி சந்திினை சுமந்திருப்பாள்.

**கூஷ் மாண்டா:** சூரிய மண்டலத்தில் வசிப்பவள். சூரியனை போல் பத்து திக்குகளிலும் தன் ஆசியைத் தருபவள். தன் புன் சிரிப்பில் உலகத்தையே உருவாக்குபவள். இவள் சக்திக்கு கூஷ்மாண்டா என்றுதான் பெயர்.

**ஸ்கந்த மாதா:** ஸ்கந்தனை தன் மடியில் வைத்துக்கொண்டு உலகைக் காக்கும் தேவி இவள். சைலபுத்ரி, பிரம்மசாரினீயாக தவமிருந்து சிவனை மணந்து முருகனை ஈன்று அவன் தன் மடியில் வைத்துள்ளார். தேவி சேனாபதியும் இவளே.

**காத்யாயனீ:** காத்யானர் என்ற முனிவரின் மகளாய் பிறந்ததால் இப்பெயர் அம்பிகையை நோக்கி காத்யானர் தவம் புரிந்தார். தாயை தரிசித்ததும் தாங்களே எனக்கு மகளாய் பிறத்தல் வேண்டும் என்ற வரம் கேட்டார். அம்பாளும் அவ் வாறே அவர் மகளாய்ப்பிறந்து உலகைக் காத்தாள்.

**காளராத்ரீ:** வேண்டுவோர்க்கு அபயத்தையும் தீயவர்க்கு பயத்தை யும் தருபவள். இருளின் நிறமானவள். தலை முடி பறந்துகொண்டிருக்கும். மின்னலை போல் ஒளிவீசும் மாலை அணிந்தவள். கோளங்கள் போல் மூன்று கண்கள் மூச்சுவிட்டால் அக்னி ஜுவா லை. நான்கு கரங்களில் கத்தி, அரிவாள், அபய, வரத முத்திரையோடு கழுதா வாகனத்தில் அமர்ந்திருப்பாள்.

**மஹா கௌரி:** முக்கண்ணன் பரமேஸ்வரன்போன்று முக்கண்ணுடன் காளை மீது அமர்ந்திருப்பாள். எட்டு வயதுப் பெண் உருவத்தில் நான்கு கையோடு, சங்கு போன்ற வெண்மை நிறத்தில் காட்சி அளிப்பாள்.

**ஸித்தி தாத்திரி:** சக்தியானவள் சிவனை ஆராதித்ததில் அவர் உடலின் பாதிபெற்று அர்த்தநாரீஸ்வராக ஆனாள். இவள் உருவம் தேவி புராணத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

## முத்திரு தேவிகள்


துர்க்கையவள் பாதார விந்தங்களிலே
பணிவிடைகள் செய்துவிடு
மாறி மழை பொழிவது போல
இன்பத்திலே குளிப்பாய்

வெற்றித் திருமகளை
வேண்டி நின்றுவிடு
செல்வம் செழிப்போடு
என்றும் வாழ்வாய்

வெள்ளைத் தாமரையிலே
வீற்றிருக்கும் வாரையை
பாதூவி வாழ்த்திடு
கல்விப் பாதையது
கனிந்து உன்னருகே வரும்

முத்திரு தேவியரையும்
முன்னின்று வணங்கிடு
தா என்றாள் தந்திடுவாள்
நோய் நொடிகள் போக்கிடுவாள்

வே. அகிலேஸ்வரன், மருதங்கேணி



## துர்க்காதேவி ! வாழ்வுக்கு வரங்கள் தருக

சிங்க வாகன் மேறுகின்ற துர்க்கா தேவி!
எழுகின்றாய் எம்மிடையே ஏற்றிப் போற்றுகின்றோம்
துயரங்கள் போக்கிட துணையாவாய் நீயே
தாள்கள் பணிவோர்க்கு அருள்வாய் போற்றி
புவனம் பதினான்கையும் ஆளுகின்ற தாயே!
பாரினில் எம்மைப் பக்குவமாய் காத்திடு தாயே
ஓம் சக்தி! வீர சக்தி! இசைத்து நிற்கிறோம்
வாழ்வுக்கு வரங்கள் தருவாய் பணிகின்றோம்

செல்வி. க.கமலாம்பிகை, மீசாலை

## சாந்தி தருவாய் துர்க்கையம்மா

சக்திக் கனலே காளியம்மா
சாந்தி தருவாய் துர்க்கையம்மா
சிவனொரு பாகன் உமையம்மா
தவசீலர்க்கு அருள்வாய் சிவகாமியம்மா
சூரனைக் கொன்றாய் சக்தியம்மா
சுந்தர வதனத் தாயம்மா

ராஜேந்திரன், தொண்டைமானாறு


## காத்தி யாயினி துர்க்காதேவி

மதுகைடப மகீசா துரநாசினி
மாதங்கினி மங்கள நாயகி
அதிமதுர வாக்கு டையாள்
ஆதி பராசக்தி ஆனந்தி
அதிசய அழகு டையாள்
அகிலாண் டநாயகி ஆயிரம்
கதிரவ னொளி யுடையாள்
காத்தி யாயினி துர்க்காதேவி

பா. பாலச்சந்திரன், மயிலணி

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2010 முதல் 16.11.2010 வரை



(மூலம், பூராடம், உத்தராடம்1 ஆம் பாதம்)

### தனுசு

**வருவோர்களை வரவேற்பால் திணறடிக்கும் தனுசு இராசி நேயர்களே!**

நீங்கள் வாழ்க்கைத் தேவைகள் அனைவருக்கும் பூர்த்தியாக வேண்டுமென்ற நல்லெண்ணம் படைத்தவர்கள். விடாமுயற்சியும் உழைப்புமே உங்களுக்கு வெற்றியைத் தேடி தரும். எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும்த அதற்கு வழி வகுத்துக் கொடுத்தவர்களை நன்றி மறக்கமாட்டீர்கள் தான, தர்மங்களில் பிரியம் வைப்பவர்கள். மதிப்பையும், மரியாதையையும் தக்க வைத்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்துவீர்கள்.

இம்மாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஜென்மத்தில் இராகு வீற்றிருந்து நல்ல வளர்ச்சியை கொடுத்தாலும் இராசிநாதன் குரு வக்ர கதியில் இருப்பதால், எதிர்பார்த்த நற்பலன்களை ஓரளவுதான் வழங்கும். பத்தில் சனி வீற்றிருப்பது யோகம் தான். அதே நேரத்தில் மாத தொடக்கத்தில் சுக்ரன் வக்ரம் பெறுவதும் யோகம் தரும். இருப்பினும், கேதுவின் பார்வை இருப்பதால் பணப்புழக்கம் அதிகரித்தாலும், மன நிம்மதி குறையும்.

அலைச்சல், ஆரோக்கியம் பாதிப்பு, அடுத்தவர் நலனுக்காக பாடுபட்டும் அதனால், போதிய பலன் கிடைக்காமை போன்றவைகளால், மனநிம்மதி குறையலாம். எனவே முறையாக குரு வழிபாட்டை மேற்கொண்டு, செந்தூர், ஆலங்குடி, பட்டமங்கலம் போன்ற சிறப்பு தலங்களுக்கும் யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வந்தால் உங்கள் ஆசைகள் அனைத்தும் நிறைவேறும்.

**விரயங்கள் கூடும் நேரம்!**

எதிர்வரும் 20 ஆம் திகதி விருச்சிக இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். விரயாதிபதி, விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். எதையும் ஒரு முறைக்கு இருமுறை செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.

பயணங்கள் அதிகரிக் கும். பக்க பலமாக இருப்பவர்களை நம்பிச் செயற்பட இயலாது. பதவிகளில் மாற்றம் உருவாகும். சொத்துக்கள் வாங்க, விற்க உகந்த நேரமிது.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

எதிர்வரும் 31 ஆம் திகதி விருச்சிக இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் யோகத்தைச் செய்ய வேண்டுமானால், மறைவிடத்தில் சஞ்சரிக்க வேண்டும். அந்த அடிப்படையில் இப்பொழுது, புதனின் சார பலம் நன்றாக இருக்கிறது. வாழ்க்கைத்துணை வழியே வந்த பிரச்சினைகள் அகலும். உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

**கும்ப குருவின் சஞ்சாரம்!**

கும்ப இராசியில் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி குரு பகவான் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக, அதன் பார்வை படும் இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. பிரிந்தவர்கள் ஒன்று சேர்வர். பிரச்சினைகள் அகலும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். சர்ப்ப சாந்திகளைச் செய்வதன் மூலம் சந் தோஷங்கள் வந்து சேரும்.

இம்மாதம் இனிய மாதமாக மலர அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். அம்பிகை வழிபாடு இன்பத்தை வழங்கும். இழப்புகளை ஈடுசெய்யும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய மாதமாகும். குடும்பத்தில் அமைதி நிலவ அனைவரையும் அனுசரித்து செல்ல வேண்டியது அவசியமாகும். பிள்ளைகள் வழியில் மனக்குழப்பம் ஏற்பட்டு அகலும். வாங்கிய சொத்துக்களையும், விலை உயர்ந்த பொருட்களையும் விற்க நேரிடுகிறதே என்று கவலைப்படுவீர்கள். நவம்பர் முதல் வாரத்தில் நல்ல தகவல்கள் வந்து சேரும். இராகு- கேதுகளுக்கு ப்ரீதி செய்தால், நல்ல பலன்கள் இல்லம் தேடி வரும்.



(உத்தராடம் 2,3,4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதங்கள்)

### மகரம்

**அதிகாரத்தை விட அன்புக்கு முக் கியத்துவம் கொடுக்கும் மகர ராசி நேயர்களே!**

உங்களை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. ஒரு சமயத்தில் அடிபணிந்து போவீர்கள். ஒரு சமயத்தில் ஆவேசமாகப் பேசுவீர்கள். உலகம் செல்லும் வழியில் நாமும் செல்ல வேண்டு மென்ற எண்ணம் உங்கள் உள்ளத்தில் இருந்தாலும் அதை நிறை வேற்ற முடியவில்லையே என்று கவலைப்படு வீர்கள். அன்பு காட்டுவதும் நிதானத்தோடு செயற்படுவதுமே உங்கள் வெற்றிக்கான அடித்தளமாகும்.

இம் மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சகாய ஸ்தானதிபதி குரு வக்ரம் பெற்று சஞ்சரிப்பதால் சில பிரச்சினைகள் முடிவுக்கு வராமல் இழுபறி நிலையிலேயே இருக்கும். சில்லறைத் தொல்லைகள் உருவாகலாம். கூட்டுகிரக யோகமாக துலாம் ராசியில் நான்கு கிரகங்கள் இணைந்து செயற்படும் இம்மாதத்தில் சப்தமாதிபதி நீச்சம் என்பதால் குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கலாம். வாழ்க்கைத்துணை வழியே பிரச்சினைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது. சேமிப்புகள் கரையாமல் இருக்கவும் செல்வாக்கு குறையாமல் இருக்கவும் தெய்வ வழிபாடுகளை முறையாக மேற்கொள்வது நல்லது.

**இலாபம் அதிகரிக்கும் நேரம்!**

எதிர்வரும் 20 ஆம் திகதி விருச்சிகர ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இலாப ஸ்தானத்தில் இலாபாதி சஞ்சரிக்கும் பொழுது வருமானம் திருப்தி தரும் .வளர்ச்சி கூடும். வாங்கிய சொத்துக்களை விற்று விட்டோமே என்று கவலைப்பட்டவர்கள் மீண்டும் சொத் துகள் வாங்கிச் சேமிக்கும் வாய்ப்பு கிட்டும். பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். உடன்பிறப்புகள்உங்களுக்குஉத விக்கரம்நீட்டுவர். அம்பிகை வழிபாடு அனு கூலத்தைத் தரும்.

**புதனின் பெயர்ச்சியால் ஏற்படும் பலன்கள்!**

எதிர்வரும் 31ஆம் திகதி விருச்சிக ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். உங்கள் ராசிக்கு 6,9க்கு அதிபதியான புதன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம் சீராக இருந்தாலும் எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல் களில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. குடியிருக்கும் வீட்டால் பிரச்சினைகள் உருவாகலாம். ஆரோக்கியத்திலும் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும். மற்றவர்களிடம் ஒப்படைத்த பொறுப்புகள் மூலம் இடையூறுகள் ஏற்படலாம். எனவே பொறுப்புகளை ஒப்படைக்கும் பொழுது முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது.

**கும்ப குருவின் சஞ்சாரம்!**

கும்ப ராசியில் நவம்பர் 7ஆம் திகதி குரு சஞ்சரிக்கப் போகிறார். வக்ர கதியில் அதன் இயக்கம் இருப்பது நல்லதல்ல. குறிப்பாக கூட இருப்பவர்களால் தொல்லைகள் உருவாலாம். அடுத்தவர்களை அனுசரித்து செல்வதன் மூலமே ஆதாயத்தை அடைய முடியும். விரயங்கள் அதிகரிக்கும். அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பர பொருட்கள் வரை வாங்கும் எண்ணம் மேலோங்கும். இம்மாதம் இனிய மாதமாக அமைய சனீஸ்வர வழிபாட்டில் கவனம் செலுத்துவது நல்லது. நீல வண்ணப் பிரியனின் வழிபாடு உங்கள் நிகழ்காலத்

**சிவல்புரி சிங்காரம்**

தேவைகளைப் பூர்த்தி செய்து வைக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பொறுமையை கடைப்பிடிப்பதன் மூலம் பெருமையைக் காணலாம். பற்றாக்குறை பட்ஜெட் மாறும். உறவினர்பகையை உருவாக்கி கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. குடும்ப ஸ்தானதிபதியை விரய ஸ்தானாதிபதி பார்ப்பதால் குடும்பச் சுமை கூடும். பிள்ளைகளின் ஆசைகளைப் பூர்த்தி செய்வீர்கள். பெண் குழந்தைகளின் பூப்புனித நீராட்டு விழாக்கள், பெற்றோர்களின் மணி விழாக்களை முன்னிட்டு விரயங்கள் ஏற்படலாம். மாதத்தின் முற்பாதி வருமானம் திருப்தி தரும். பிற்பாதி வரவை விட செலவு இருமடங்காகும். கும்ப குருவின் ஆதிக்க காலத்தில் குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது.

(தொடரும்)

# புலிகள் இயக்கத்தின் பணிகளை மீளவும் ஆரம்பிக்க சர்வதேச அளவில் முனைப்பு

## சரத் வீரசேகர எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் இன்னமும் இயங்கி வருவதாக முன்னாள் சிவில் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பதிகாரியும் பாராளுமன்ற உறுப்பினருமானரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கையில் தோற்கடிக்கப்பட்ட போதிலும் இயக்கத்தின் பணிகளை மீள ஆரம்பிக்க சர்வதேச அளவில் முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சவாலையும் வெற்றி கொள்வதற்கான சக்தி காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை திகாமடுல்ல பிரதேசத்தில் அரசாங்கம் பாரியளவு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பின் பின்னர் 6 புதிய அமைச்சர்கள் பதவியேற்பு

(கொழும்பு)

நவம்பா மாதம் 19 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக்காலத்துக்காக பதவியேற்றுக் கொண்டதன் பின்னர் இடம்பெறவுள்ள அமைச்சரவை மறுசீரமைப்பின் போது ஆறு எம்.பி.க்கள் புதிய அமைச்சர்களாக பதவியேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன் படி தற்போதைய அமைச்சர்களின் எண் ணிக்கை அதிகரிக்கப்படலாம் என்று தெரியவருகின்றது.

ஆனால் புதிய அமைச்சுப் பதவிகள் யாருக்கு வழங்கப்படும் என்பது தொடர்பில் இதுவரை உறுதியாக தெரியவரவில்லை. எனினும் கண்டி, பதுளை, காலி, குருணாகல், கேகாலை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு புதிய அமைச்சுப் பதவிகள் பகிரப்படும் என ஆளும் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

அதாவது இம்முறை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட புதிய முகங்களுக்கும் அமைச்சுப் பதவிகள் கிடைக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் இரண்டாவது தடவை பதவிக்காலத்துக்கான பதவியேற்பு விழா பழைய பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் (தற்போதைய ஜனாதிபதி செயலகம்) நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# உலக தொழில்நுட்பத்துடன் இணைந்து முன்னேறும் காலம் உதயமாகியுள்ளது

## அமைச்சர் திஸ்ஸவிதாரண தெரிவிப்பு

வல்லரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த மனநிலையில் இருந்து விடுபட வேண்டும் என தொழிநுட்ப மற்றும் ஆய்வுகள் துறை அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

ஹொரண பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

பின்தங்கிய மன நிலையை விட்டு உலகத்துடன் இணைந்து முன்னோக்கி செல்வதற்கான காலம் உதயமாகியுள்ளது. உலகில் நாளாந்தம் அறிமுகம் செய்யப்படும் புதிய தொழிநுட்பங்களை தமது அமைச்சின் ஊடாக மக்கள் பாவனைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதேவேளை உள்நாட்டில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளக்கூடிய விடயங்கள் குறித்தும் ஆராய்ந்து வருவதாக அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கைத் தமிழ் ஆய்வில் பெண்கள் 4

**கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கடந்த 2, 3, 4 ஆம் திகதிகளில் நடைபெற்ற தமிழ் இலக்கிய விழா ஆய்வரங்கில் அருட்திரு தமிழ்நேசன் அடிகளாரால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது**

### பல்துறை ஆய்வாளர்கள்

கலை, இலக்கியம், சமயம், மொழியியல், பண்பாடு, சமூகம், வரலாறு போன்ற பல்துறை ஆய்வுகளில் சில துறைகளை முன்னிலைப்படுத்தி ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்ட பெண்களாக கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கோகிலா மகேந்திரன், கலாநிதி ஏ.என். கிருஷ்ண வேணி, கலாநிதி சுபதினி ரமேஷ், ரூபி வலன்ரீனா பிரான்சிஸ் போன்றோரைக் குறிப்பிடலாம்.

### கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

இலங்கையிலே மொழி, இலக்கியம், பண்பாடு சார்ந்த துறைகளில் காத்திரமான ஆய்வு முயற்சிகளை மேற்கொண்ட பெண் ஆய்வாளர்களில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் முக்கியமானவர். இவர் தனித்தும் கூட்டாகவும் பல ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டு பல ஆய்வு நூல்களை வெளிக் கொணர்ந்துள்ளார்.

'குறுந்தொகை ஒரு நுண்ணாய்வு' 'சி. வை. தாமோதரம்பிள்ளை, ஓர்ஆய்வு நோக்கு', 'தமிழ் மொழி அகராதி தந்த சதாவதானி' போன்ற இவருடைய ஆய்வு நூல்கள் முக்கியமானவை. இதைவிட '19ஆம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியத்தின் முக்கிய போக்குகள்', 'சாதியும் சடங்கும் (பண்டைத் தமிழர் தொடக்கம் யாழ்ப்பாணத் தமிழர் வறை), 'பண்டைத் தமிழர் வாழ்வியற் கோலங்கள்', 'புலோலியூர் பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்து அந்தாதி வரையும் மதிப்பீடும்', 'கஞ்சிக் கடினமன்று' 'காலந்தந்த கைவிளக்கு', 'சென்ற கூாலத்தின் பழுதிலான் திறம்', 'சங்க காலத் திருமண நடை முறைகள்', 'பாரதியின் கன்னிக் குயிலின் இன்னிசைப் பாட்டு' போன்ற நூல்களை இவர் வெளிக் கொணர்ந்துள்ளார்.

1981 இல் யாப்பானிய நிறுவனத்தின் புலமைப்பரிசில் பெற்று யப்பான் சென்ற இவர், யப்பான் ஷக்அயின் பல்கலைக் கழகத்தில் முழு நேர ஆய்வாளராகவும், விரிவுரையாளராகவும் விளங்கினார். இக்கால கட்டத்தில் தமிழ் யப்பானிய மொழிகளை ஒப்பிட்டு ஆய்வுகள் பல செய்தார். அவை நூல்களாக வெளியிடப்பட்டன. இந்த வகையில், 'தமிழ் - யப்பானிய இலக்கண ஒப்புவமை', 'யப்பான் மொழி கற்பதற்கான வழிகாட்டி', 'மன்யோசு காதல் காட்சிகள்', 'மன்யோசுப் பாடல்கள்', 'யப்பானிய காதற் பாடல்கள்', 'தமிழர் யப்பானிய வாழ்வில் தைப்பொங்கல்' போன்ற நூல்களைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

இவர் தனது கணவர் பேராசிரியர் அ. சண்முகதாஸுடன் இணைந்து 'ஆற்றங் கரையான்', 'இத்திமரத்தாள்', 'தமிழர் திருமண நடைமுறைகள்', 'தமிழ்த் தோணி' ஆகிய நூல்களை எழுதியுள்ளார். ச.லலீசனுடன் இணைந்து 'பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்' என்ற ஆய்வுத் தொகுப்பு நூலையும் வெளிக்கொணர்ந்துள்ளார்.

வடமொழி, மலையாளம், யப்பானிய மொழி, ஆங்கிலம், தமிழ் என பன்மொழி வல்லுநரான , இவர் தனித்தும், கணவர் மற்றும் ஏனையவர்களுடன் இணைந்தும் 20ற்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவுஸ்திரேலியா, யப்பான், நைஜீரியா, சிங்கப்பூர், மலேசியா இந்தோனேசியா, ஜெர்மனி எனப் பல நாடுகளுக்கும் சென்று ஆய்வுகளையும் விரிவுரைகளையும் மேற்கொண்டுள்ளார்.

பழந்தமிழ் இலக்கிய ஆய்வுகளில் முனைப்புடன் ஈடுபட்டு வரும் மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் சங்க இலக்கியங்களை நுணுகிக் கற்கும் நிலைப்பாடு அருகி வருவதை ஆதங்கத்தோடு சுட்டிக்காட்டி தனது ஆய்வு முயற்சிகளின் நோக்கத்தை இவ்வாறு தெளிவுபடுத்துகிறார்.

" சங்க இலக்கியப் பாடல்கள் எம்முடைய முன்னோர் எமக்கு அளித்த வைப்பு நிதியாகும். காலநதியின் ஓட்டத்தில் கரைந்து போகாத கற்பாறைகள்.எம்முடைய தாய் மொழியை உலக அரங்கில் செம்மொழியென சிறப்புற அரங்கேற்றும் புலமைச் சான்றுகள். இத்தகைய இலக்கியங்களை நுணுகிக் கற்கும் நிலைப்பாடு இன்று அருகி வருகின்றது. நவீன தொழில்நுட்பம் இலக்கியத் தேடலை சற்று மறைத்துள்ளன.

எனவே அந்தக் குறையைப் போக்க மீண்டும் சங்க இலக்கியத் தேடலை கற்கை நெறியில் இணைக்க வேண்டும்.அதற்கான தகவல்களை வழங்கும் பணியில் சிறுதுளியாக எனது நூலாக்கம் எழுந்துள்ளது" என்கிறார்.

"கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் படைக்கும் நூல்கள் பொருட் செறிவும், மொழி வளமும் கொண்டவை'' என்ற வ. இராசையாவின் கூற்று மனோன்மணி சண்முகதாசின் ஆய்வு நூல்களுக்கு வழங்கப்பட்ட முத்தாய்ப்பாகக் கொள்ளமுடியும்.

### கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்

கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று தனது இளங்கலை, முதுகலை, கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர். தற்போது கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மொழித்துறையில் தமிழில் முதுநிலை விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார்.

சங்க இலக்கியம், நவீன தமிழ் இலக்கியம், பெண்ணிய விமர்சனம், நாடக இலக்கியம், மொழிபெயர்ப்பு ஆகியவற்றில் ஈடுபாடுடையவர்.

இவை தொடர்பான கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். இவருடைய ஆய்வு முயற்சிகளில் 2006 இல் இவர் வெளியிட்ட "சங்கக் கவிதையாக்கம் - மரபும் மாற்றமும்" என்ற நூல் முக்கியம் பெறுகின்றது. இது இவருடைய கலாநிதிப் பட்ட ஆய்வாகும்.

**அருட்திரு தமிழ்நேசன் அடிகளார்**

இந்நூலில் இவர் சங்கக் கவிதைகளை பால்நிலை அடிப்படையிலும் சமூகப் படிநிலை அடிப்படையிலும் ஆராய்ந்துள்ளார்.

" ஈழத்துத் தமிழ்நாடக அரங்கப் பாரம்பரியம்'' (2007)," இலங்கைத் தமிழரிடையே வாய்மொழி இலக்கியம்'' (2007) போன்ற நூல்களைத் தொகுத்துள்ளார்.

(தொடரும்)

## இலங்கையின் மிகப் பெரிய உப்பளம் நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையில் மிகப் பெரிய உப்பளம் ஒன்றை நிர்மாணிக்கும் பணிகள் தற்போது இடம்பெறுகின்றன.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கும்புறுபிட்டி றைகம என்ற இடத்தில் ஆயிரத்து எண்ணூறு ஏக்கர் நிலப்பரப்பில் இந்த உப்பளம் நிர்மாணிக்கப்படுகிறது.

இதன்மூலம் வருடாந்தம் ஐம்பதாயிரம் மெட்ரிக் தொன் உப்பை உற்பத்தி செய்யலாம் எனவும் இத்திட்டத்தின் மூலம் பிரதேச மக்கள் பெரிதும் நன்மை அடையவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஶ்ரீ-2)

## மாணவர் உரிமைக்கான போராட்டங்கள் ஒருபோதும் கைவிடப்பட மாட்டாது


### உதுல் பிரேம ரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

மாணவர் உரிமைக்காக மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் கைவிடப்படமாட்டாதென அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் உதுல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார்.

ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்களைக் கைது செய்வதற்கும் அரசாங்கம் தயங்கப் போவதில்லை என உயர்கல்வி அமைச்சர் கூளுரைத்துள்ளதாகவும் மாணவர் உரிமைகளை வென்றெடுப்பதற்காக பத்தாயிரம் மாணவர்கள் தங்களை அர்ப்பணிக்கத் தயாராக இருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பு மருதானை சமூக கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்கும் எஸ்.பி.திஸாநாயக்கவின் முயற்சிகளுக்கு தாம் ஒருபோதும்இடமளிக்கப்போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரிமைக்காக குரல்கொடுக்கும் மாணவர்களை சிறையில் அடைப்பதன் மூலம் போராட்டங்களை தடுத்து நிறுத்தமுடியாதென அவர் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் நடவடிக்கைகளினால் இது வரையில் 150 மாணவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஶ்ரீ-2)

## கொரியாவின் முக்கிய சுற்றுலா தலமாக இலங்கையை அறிவிக்கத் திட்டம்


(கொழும்பு)


இலங்கை கொரிய நாட்டின் முக்கிய சுற்றுலா இடமாகப் பிரசாரம் செய்யப்படும் என கொரியா உறுதி அளித்துள்ளது.

கொரிய விளையாட்டு, சுற்றுலாத்துறை அமைச்சரை இலங்கைக்கான பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சந்தித்தபோது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையை மேம்படுத்த அமைச்சர்கள் கொள்கை அளவில் இணங்கியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது கொழும்புக்கும் சியோலுக்கும் இடையில் நேரடி விமான சேவையை ஈடுபடுத்துமாறு கொரிய அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். (ஶ்ரீ-2)





கோப்பாய் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 4 கிராமங்களைச் சேர்ந்த 28 பயனாளிகளுக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலர் தலைமையில் SOND நிறுவனத்தால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. கோப்பாய் பிரதேச உதவிப் பிரதேச செயலர், கோப்பாய் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் விவசாயத்திற்கான நீர் இறைக்கும் இயந்திரம் வழங்குவதை படங்களில் காணலாம்.

# ஏற்ற இறக்கங்களைச் சந்திக்கும் பங்குச்சந்தை;
# இந்த ஆண்டு மீண்டும் ஓர் எழுச்சி உண்டு
## – ஓர் ஆய்வு முகாமையாளர்

கடந்த வாரம் குறிப்பாக கடந்த புதன்கிழமை பங்குச்சந்தை ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தாலும் இந்த ஆண்டில் மீண்டும் ஒரு எழுச்சி ஏற்படும் என பங்குத் தரகர்கள் தெரிவித்துள்ளனர்.

கப்பிட்டல் ரஸ்ட் ஆய்வு முகாமையாளர் சரித குணசேகர கருத்துத் தெரிவிக்கையில்,

அடுத்த வாரம் முதல் வரவுள்ள நிறுவனங்களின் 3-ம் காலாண்டு நிதிநிலை அறிக்கைகள் இந்த எழுச்சிக்கு உதவி செய்யும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஏ.எஸ்.பி.ஐ. 6000 புள்ளிகளை கடந்த செப்ரெம்பர் 13ஆம் திகதி கடந்தது. இது 13 வியாபார நாட்களில் 1000 புள்ளிகள் அதிகரித்து 7000 புள்ளிகளானது.

இந்நிலையில், கடந்த புதன்கிழமை அனைத்துப் பங்கு விலைச் சுட்டி (ASPI) மற்றும் மிலங்கா என்பன 5 வீதத்துக்கும் மேல் சரிவடைந்தன. புதனன்று சந்தை ஆரம்பமாகி ஒரு மணி நேரத்துள் பங்குச்சந்தைச் சுட்டிகள் 5 வீதத்துக்கு மேல் சரிவினை கண்டன. இதனையடுத்து மு.ப.10.59 மணிவரை பங்குப்பரிவர்த்தனை நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. 2005 ஜனவரி 27-ம் திகதிக்குப் பின்னர் (அப்போது 6.97% சரிவு) சந்தை நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்ட சந்தர்ப்பம் இதுவேயாகும்.

பின்னர் சந்தை நடவடிக்கைகள் ஆரம்பமானபோதும் சந்தையில் சரிவு தொடர்ந்தது. சிறிது நேரத்தில் சந்தை மீண்டும் எழுச்சி பெற்றது. ஏ.எஸ்.பி.ஐ. 94.81 புள்ளிகளும், மிலங்கா 47.13 புள்ளிகளும் உயர்வடைந்து முடிபடைந்தது.

அரசாங்கத்தின் முதலீட்டு நிதியே சந்தையின் சரிவைத் தடுத்து நிறுத்த உதவியதாக பெயர் குறிப்பிட விரும்பாத ஆய்வாளர் ஒருவர் தெரிவித்ததாக ரொய்ட்டர்ஸ் தெரிவித்தது.

ஆசியாவில் சிறந்த, வினைத்திறனான பங்குப் பரிவர்த்தனை என கணிக்கப்பட்ட கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் கடந்த செவ்வாய்க்கிழமை 4.48% சரிவைத் தொடர்ந்து புதன்கிழமையும் சரிவு ஏற்பட பயத்தின் காரணமான விற்பனை (Panic Selling) அதிகரிக்க திருத்தம் (Correction) நடைபெற்றது.

இதன்போதும் விற்பனையை விட கொள்வனவே அதிகமாகக் காணப்பட்டது. இது சந்தை எதிர்காலத்தில் அதிகரிக்கும் என முதலீட்டாளர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதைக் குறிப்பதாக குணசேகர தெரிவித்தார்.

மார்ஜின் ரேடிங் கட்டுப்பாடு, போர் செல்லிங், விலைக் கட்டுப்பாடு (Price band), பல பட்டியல்படுத்தப்பட்ட நிறுவனப் பங்குகள் உடைக்கப்படுகின்றமையால் திரவத் தன்மை அதிகரித்தல், புதிய நிறுவனங்களின் வரவு போன்றவற்றால் சந்தையில் ஏற்ற இறக்கங்கள் சிறிது காலத்திற்கு தொடரும் என சில ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை ஹைட்ரோ பவர் பிறி லங்கா, லாப் காஸ் மற்றும் மேச்சன்ரைல் இன்வெஸ்மன்ட் என நிறுவனங்களின் ஆரம்பப் பங்கு வழங்கல்கள் (IPO) வரவுள்ளன. மேலும் பல நிறுவனங்கள் பட்டியல்படுத்தத் திட்டமிட்டுள்ளன. மத்திய வங்கியின் பணிப்புரைக்கமைய பல நிதி நிறுவனங்கள், வங்கிகள் பட்டியல்படுத்தப்பட வேண்டும். இந்நிலையில் இந்த ஆண்டும், அடுத்த ஆண்டும் 20இற்கும் மேற்பட்ட கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியல்படுத்தப்படவுள்ளன.




26ஆம் திகதியிலிருந்து வழங்கப்படவுள்ள ஹைட்ரோ பவர் பிறி லங்கா லிமிட்டட் இன் ஆரம்ப பங்கு வழங்கல் குறித்து நிறுவனத்தின் தலைவர் ரோகினி நாணயக்கார விளக்கமளிப்பதை காணலாம். 350 மில். ரூபாயிற்கு, 10 ரூபாய் முகப் பெறுமதியான பங்குகள் வழங்கப்படவுள்ளதாகவும் இதன் வர்த்தகம் சி.எஸ்.சியில் நவம்பர் 15இல் ஆரம்பமாகும் எனவும் தெரிவித்தார்.

## வர்த்தக உலகம்
ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்
(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 111.05 | 112.65 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 177:12 | 180.85 |
| யூரோ (ஐரோ. ஒன்றியம்) | 155.02 | 158.80 |
| சுவிஸ் பிராங் | 115.19 | 118.99 |
| கனேடிய டொலர் | 109.44 | 113.13 |
| அவுஸ்திரேலிய டொலர் | 109.15 | 112.45 |
| சிங்கப்பூர் டொலர் | 85.15 | 87.26 |
| ஜப்பான் யென் | 1.35 | 1.39 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.53 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.43 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# வர்த்தக செய்தித் துளிகள்

## இல. நிதித்துறையில் நுழையும் மஹிந்திரா அன்ட் மஹிந்திரா

இந்தியாவின் மஹிந்திரா அன்ட் மஹிந்திரா நிறுவனம், ஐடியல் மோட்டார்ஸ் உடன் இணைந்து ஒரு நிதிக் கம்பனியை அமைக்க முடிவெடுத்துள்ளது. மஹிந்திரா பினான்ஸ் கம்பனியின் ஒரு குழு இது தொடர்பாக ஆராய இலங்கை வந்துள்ளது. இவர்கள் மத்திய வங்கியின் அனுமதிக்கு விரைவில் விண்ணப்பிக்கவுள்ளனர்.

ஐடியல் மஹிந்திரா பினான்ஸ் கம்பனி 2011 முதற் காலாண்டில் அதன் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. 200 மில்லியன் ரூபாய் முதலீட்டில் இத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் ஐடியல் மோட்டார்ஸ் தலைவர் நளின் வெல்கம தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐடியல் மோட்டோர்ஸ் காட்சியறை ஒன்று கடந்த மாதம் யாழில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புதிய வடிவில் செலான் வங்கியின் டிக்கிரி பிளஸ் சிறுவர் கணக்கு

செலான் வங்கி தனது புகழ்பெற்ற டிக்கிரி சிறுவர் கணக்கினை பல்வேறு மாற்றங்களுடன் செலான் டிக்கிரி பிளஸ் என்ற பெயரில் மீள அறிமுகம் செய்துள்ளது. செலான் டிக்கிரி பிளஸ் கணக்கானது, குவளைகள், பாடசாலைப் புத்தகப்பைகள், ஸ்கிரபிள் போட் மற்றும் வானொலிப் பெட்டிகள் முதல் அன்பளிப்பு வவுச்சர்கள், ஓகன் இசைக் கருவிகள் மற்றும் பி.எம்.எக்ஸ் துவிச்சக்கர வண்டிகள் எனப் பல பரிசுகளை வழங்கும். 1992 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட செலான் டிக்கிரி தற்போது பல்வேறு மாற்றங்களுடன் செலான் டிக்கிரி பிளஸ் கணக்கு என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக வங்கியின் சந்தைப்படுத்துதல் பிரிவு உதவிப் பொது முகாமையாளர் கமல் தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் சொத்து மதிப்பு 6.4 டிரில்லியன் டொலராக உயர்கிறது

அபரிமிதமான பொருளாதார வளர்ச்சி காரணமாக இந்தியாவின் சொத்து மதிப்பு 6.4 டிரில்லியன் டொலராக உயரும் என்று கிரெடிட் சூஸ் குளோபல் வெல்த் ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. இது தற்போதைய மதிப்பை விட 2 மடங்கு அதிகமாகும். தற்போது இந்தியாவின் சொத்துவளம் 3.5 டிரில்லியன் டொலர்களாக உள்ளது. உலகளாவிய சொத்து மதிப்பு 195 டிரில்லியன் டொலர்களாக உள்ளது.

உலகிலேயே அதிகளவான கோடீஸ்வரர்களைக் கொண்ட கண்டமாக ஆசியாதான் திகழ்கிறதாம். ஐரோப்பாவை விட ஆசிய பசுபிக் பிராந்தியத்தில்தான் பெருமளவில் கோடீஸ்வரர் உள்ளனர். உலகம் முழுவதும் உள்ள பெரும் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 1000 ஆகும். இவர்களில் வட அமெரிக்காவில் 500 பேரும், ஆசிய பசுபிக்கில் 245 பேரும் உள்ளனர். ஐரோப்பாவில் 230 பேர் மட்டுமே உள்ளனர்.

# கொழும்புக்கும் சென்னைக்குமிடையில் ஸ்பைஸ்ஜெற் விமான சேவை ஆரம்பம்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சிக்கன விமான சேவையை ஸ்பைஸ்ஜெற் விமான நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

வர்த்தகத்துறையில் பலமான வரலாற்றைக் கொண்ட இலங்கைக்கு பயணத்தை விஸ்தரிப்பு செய்வதையிட்டு நாம் பெருமையடைகிறோம். குறைந்த செலவில் சிரமமின்றி பயணம் செய்யக் கூடிய இப்பாதை மிகவும் பிரபலமடையும் என நம்புகிறோம் என ஸ்பைஸ் ஜெற் லிமிட்டட் பணிப்பாளர் கிஷோர் குப்தா தெரிவித்தார்.




சென்னையிலிருந்து தினமும் அதிகாலை 1.30 மணிக்கு புறப்படும் SG 001 விமானம், அதிகாலை 2.50ற்கு கொழும்பை வந்தடையும். அதேபோல் கொழும்பிலிருந்து தினமும் அதிகாலை 4.10 மணிக்கு புறப்படும் SG 002 விமானம் காலை 5.45 மணிக்கு சென்னையைச் சென்றடையும்.

இப் பயணத்திற்கான கட்டணம் ரூ.2399இலிருந்து ஆரம்பிக்கிறது. புதிய போயிங் 737-800 (189 ஆசனங்கள்) விமானங்களை இதற்கென பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தினமும் 20 நகரங்களை உள்ளடக்கும் வகையில் 151 விமானங்களை ஸ்பைஸ்ஜெற் இயக்குகிறது.

ஸ்பைஸ்ஜெற் விமான நிறுவனத்தை (37.9% பங்குகள்) அண்மையில் இந்தியாவின் சன் குழுமத் தலைவர் கலாநிதி மாறன் கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6833.61 | 6626.86⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 7466.29 | 7149.26 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 18 788.12 | |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** கொழும்பு பார்மசி (2198.40), ஓட்டோரும் (649.90), கார்ஷன்ஸ் (1037.00), சி.ஐ.ரி. (195.00), புக்கிட்தாரா (8305.00).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** அற்கின் ஸ்பென்ஸ் (189.30), சம்பத் (249.50), சி.டி.பி. (48.50), கலமசு (1000.00), எஸ்.எம்.பி.லீசிங் (X) (1.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# தொன் கணக்கில் தங்கம் வாங்கும் கோடீஸ்வரர்கள்

(ஜெனிவா)

சர்வதேச நிதி நெருக்கடிக்குப் பிறகு, உலகின் முன்னணிக் கோடீஸ்வரர்கள் பலர் தொன் கணக்கில் தங்கத்தை வாங்கிக் குவித்து வருவதாக, சுவிஸின் புகழ்பெற்ற யுபிஎஸ் வங்கியின் செயல் அதிகாரி ஜோசப் ஸ்டாட்லர் சர்வதேச தனியார் வங்கிகளின் உச்சி மாநாட்டில் தெரிவித்தார். அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

கடந்த 2008-ம் ஆண்டு ஏற்பட்ட சர்வதேச நெருக்கடியால் பங்குச் சந்தை முதலீடுகள் கடுமையாகச் சரிந்ததுடன், வங்கி வைப்புகள் உட்பட பல முதலீட்டு திட்டங்களும் பாதிப்படைந்தன. இதன் காரணமாக தங்கத்தில் முதலீடு செய்வது பாதுகாப்பானதாக இருக்கும் என முதலீட்டாளர்கள் கருதினர். தங்கக் கட்டிகளாக, தங்கம் சார்ந்த மியூச்சுவல் பண்ட் திட்டங்கள் என முதலீடு செய்து வருகின்றனர். குறிப்பாக உலகின் முன்னணிக் கோடீஸ்வரர்கள் தொன் கணக்கில் தங்கத்தை வாங்கிக் குவித்து வருகின்றனர். இதனால் தங்கத்துக்கு தேவை அதிகரித்து அதன் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. தங்கத்தின் விலை கடந்த 10 ஆண்டுகளில் தொடர்ந்து உயர்ந்து வந்துள்ளது. எனவே ஒவ்வொருவரும் தங்களுடைய மொத்த முதலீட்டில் 7 முதல் 10 சதவீதம் வரை தங்கத்தில் முதலீடு செய்வது நல்லது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கடத்தல்களும் கப்பம் கோரலும் மீண்டும் தலைதூக்கியுள்ளது

## பிரபாகணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

மீண்டும் தலைநகரில் தமிழ் வர்த்தகர் கடத்தப்பட்டு ஐந்து கோடி கப்பம் பறிக்கப்பட்டுள்ளது. கொழும்பு வர்த்தகத்திலிருந்து தமிழ் மற்றும் முஸ்லிம்களை ஓரம் கட்டும் முயற்சி தொடர்கிறது. முன்னைய காலங்களில் தமிழ் பேசும் வர்த்தகர்களை கடத்திச் சென்று கப்பம் கோருவது எமது கடும் முயற்சியினால் தடுத்து நிறுத்தப்பட்டது. எனினும் இன்று மீண்டும் இவ்வாறான சில சம்பவங்கள் தலைதூக்கியுள்ளதாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள நகையக உரிமையாளர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு கப்பம் பெறப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்தே பிரபா கணேசன் மேற்படி அறிக்கையை விடுத்துள்ளார்.

கொழும்பு செட்டியார் தெருவில் அமைந்துள்ள ரவி ஜுவலரியின் உரிமையாளரான ஆர். மகேந்திரனும் அவருடைய மகனும் 7.15 இனந்தெரியாதோரால் கடந்த 13ஆம் திகதி புதன்கிழமையன்று இரவு 7.15 மணிக்கு கொட்டாஞ்சேனை கிறீன் வீதியில் வைத்து கடத்திச் செல்லப்பட்டிருந்தனர்.

பின்னர் மகனை விடுவித்த கடத்தல்காரர்கள் தந்தையாகிய மகேந்திரனை விடுவிப்பதற்காக ஐந்து கோடி ரூபாய்களைக் கப்பமாகக் கோரியிருந்ததாகவும் அவரது குடும்பத்தினர் அதனைக் கொடுத்த பின்னரே மகேந்திரன் விடுதலையானதாகவும் தெரிய வருகிறது.

இச்சம்பவம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றாலும் சம்பந்தப்பட்டவர்கள் பொலிஸாரிடமோ மக்கள் பிரதிநிதிகளிடமோ சென்று முறைப்பாடு செய்ய அஞ்சுகின்றார்கள்.

இதனால் கப்பம் கோரும் நபர்களை சட்டத்தின் முன்கொண்டு வர முடியாதுள்ளது. ஆகவே பாதிக்கப்படுவோர் தைரியமாக செயற்பட்டால்தான் இவ்வாறான சட்டவிரோதச் செயல்களை முறியடிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி மன்றத் திருத்த சட்டமூலத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆதரவளிக்காது

## அக்கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் திருத்தச் சட்ட மூலத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர்ப்பை வெளியிடக்கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

வரவு- செலவுத்திட்ட யோசனை தோற்கடிக்கப்பட்டால் உள்ளூராட்சி மன்றத்தை கலைக்கும் வகையில் அரசாங்கம் திருத்தங்களை கொண்டு வர முயற்சிப்பதாகவும் இதற்கு முஸ்லிம் காங்கிரஸ்கட்சி ஆதரவளிக் காது எனவும் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களில் விசேட ஆணையாளர்களை நியமிக்கும் திட்டம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக ரீதியில் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் அதிகாரங்களை பறிக்கும் வகையில் ஆணையாளர்களை நியமிப்பது பொருத்தமற்றதென அவர் சுட்டிக்கட்டியுள்ளார்.

இம் மன்றத் திருத்தச் சட்ட மூலங்கள் தொடர்பில் சிறுபான்மை கட்சிகளுடனும் ஜனாதிபதியுடனும் விரைவில் பேச்சுவார்ததை நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)




- 1091 - லண்டனில் பெரும் சூறாவளி இடம் பெற்றது.
- 1346 - இங்கிலாந்தின் மூன்றாம் எட்வேர்ட் ஸ்கொட்லாந்தின் இரண்டாம் டேவிட் மன்னனைச் சிறைபிடித்து பதினோராண்டுகள் லண்டன் கோபுரத்தில் அடைத்து வைத்தான்.
- 1448 - கொசோவோவில் ஹங்கேரிய இராணுவம் ஒட்டோமான் படைகளினால் தோற்கடிக்கப்பட்டனர்.
- 1604 - ஜெர்மனிய வானிலையாளர் ஜொகான்னஸ் கெப்லர் வானில் திடீரென மிக ஒளிர்வுள்ள விண் மீன் (எஸ். என். 1604) தோன்றுவதைக் கண்டார்.
- 1610 - பதின்மூன்றாம் லூயி பிரான்சின் மன்னனாக முடி சூடினான்.
- 1660 - இங்கிலாந்தின் முதலாம் சார்ள்ஸ் மன்னனுக்கு மரண தண்டனையை அறிவித்த ஒன்பது பேர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1662 - இங்கிலாந்தின் இரண்டாம் சார்ளஸ் டன்கேர்க் நகரை 40ஆயிரம் பவுணிற்கு பிரான்சுக்கு விற்றான்.
- 1800 - டச்சு குடியேற்ற நாடான குரக்காவோ இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் வந்தது.
- 1805 - நெப்போலியனின் போர்கள்: ஊல்ம் நகரில் இடம்பெற்ற சமரில் ஆஸ்திரியப் படையினர் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகளிடம் வீழ்ந்தன.
- 1806 - கெயிட்டியின் மன்னன் முதலாம் ஜாக் படுகொலை செய்யப்பட்டான்.
- 1907 - மார்க்கோனி அட்லாண்டிக் நகரங்களுக்கிடையேயான தனது முதலாவது கம்பியில்லாத் தொடர்பை கனடாவின் நோவா ஸ்கோசியா வுக்கும், அயர்லாந்துக்கும் இடையே ஏற்படுத்தினார்.
- 1912 - முதலாம் பால்க்கன் போர்: பல்கேரியா, கிரேக்கம், சேர்பியா ஆகியன ஒட்டோமான் பேரரசுடன் போரை அறிவித்தன.
- 1917 - முதலாம் உலகப் போரில் ஜெர்மனி பிரித்தானியா மீதான தனது முதலாவது குண்டுத்தாக்குதலை நிகழ்த்தியது.
- 1933 - அல்பேர்ட் ஐன்ஸ்டைன் நாசி ஜெர்மனியில் இருந்து வெளியேறி ஐக்கிய அமெரிக்காவில் குடியேறினார்.
- 1941 - இரண்டாம் உலகப் போரில் முதற் தடவையாக ஜெர்மனிய நீர்மூழ்கிக் கப்பல் அமெரிக்கக்கப் கப்பலைத் தாக்கியது.
- 1961 - பாரிசில் போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான அல்ஜீரியர்கள் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1965 - 1964 நியூயோர்க் உலகக் கண்காட்சி இரண்டாண்டுகளின் பின்னர் முடிவுற்றது. மொத்தமாக 51 மில்லியன் மக்கள் இக்கண்காட்சியைக் கண்டு களித்தனர்.
- 1966 - நியூயோர்க்கில் கட்டிடம் ஒன்றில் இடம்பெற்ற தீயில் 12 தீயணைப்புப் படையினர் சிக்கி இறந்தனர்.
- 1979 - அன்னை தெரேசா அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.
- 1995 - யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்ற இலங்கை இராணுவம் ரிவிரெச நடவடிக்கையை ஆரம்பித்தது.
- 1998 - நைஜீரியாவில் பெற்றோலியம் குழாய் வெடித்ததில் 1200 கிராமத்தவர்கள் கொல்லப்பட்டனர்.
- 2003 - தாய்ப்பே 101 உலகின் மிக உயரமான வானளாவி ஆனது.
- 2006 - ஐக்கிய அமெரிக்காவின் மக்கள் தொகை 300 மில்லியனை எட்டியது.
- 2006 - ஈழப்போர்: புலிகளின் குரல் வானொலி ஒலிபரப்பு நிலையம், இலங்கை அரசின் வான்குண்டுத் தாக்குதலில் முழுமையான சேதமடைந்தது.

### பிறப்புகள்

- 1906 - கே.பி.ஹரன், தமிழ்ப் பத்திரிகையாளர், (இ.1981)
- 1912 - பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் (இ.1978)
- 1965 - அரவிந்த டி சில்வா, இலங்கை அணியின் துடுப்பாளர்
- 1970 - அனில் கும்ப்ளே, இந்திய அணியின் சுழற் பந்தாளர்
- 1972 - எமினெம், அமெரிக்காவின் ராப் இசைக்கலைஞர்

**1981 - கவிஞர் கண்ணதாசன், இறந்தார்.**



# சட்டவிரோதமாக பிரிட்டன் செல்ல முயன்று திருப்பி அனுப்பப்பட்டவருக்கு பிணை

போலி பிரித்தானிய கடவுச்சீட்டை பயன்படுத்தி சிங்கப்பூர் ஊடாக பிரித்தானியாவை நோக்கி சட்ட விரோதமாக செல்ல முயன்று சிங்கப்பூரிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரை நீர் கொழும்பு பிரதான நீதவான் ஜயகித அல்விஸ் மூன்று இலட்சத்து 20 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் சரீரப் பிணையிலும் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

அம்பாறையை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு பிணையில் விடுதலை செய்யப்பட்டவராவார்.

2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி சிங்கப்பூரிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட சந்தேக நபர் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (ஸ்ரீ)

# சகல தபால் காரியாலயங்களும் கணனி வலையமைப்பில் இணைப்பு

நாட்டிலுள்ள சகல தபால் காரியாலயங்களையும் கணனி வலைப் பின்னல்கட்டமைப்புக்குள் கொண்டு வருவதற்கான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தபால் தொலைத்தொடர்பு அமைச்சு குறிப் பிட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக இவ்வருட இறுதிக்குள் சகல பிரதான தபால் காரியாலயங்களையும் கணனி வலைப் பின்னல் கட்டமைப்புக்குள் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

300 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இந்த முதற்கட்ட வேலைத்திட்டம் இவ்வருடம் டிசம்பர் மாத முடிவில் பூர்த்தி செய்யப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 2012ஆம் ஆண்டுக்கு முன்னர் 3ஆயிரத்து 140 உப தபால் காரியாலயங்களை கணனி வலைப்பின்னல் கட்டமைப்புக்குள் கொண்டு வருவதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளதாகவும் இத்திட்டத்திற்காக 650 மில்லியன் ரூபா செலவிடப்படுமெனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வலைப்பின்னல் கட்டமைப்பு வேலைத்திட்டமானது மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் கணனிப் பீடம் மற்றும் பொறியியல் பீடம் என்பவற்றுடன் இணைந்து மேற்கொள்ளப்படுவதாகவும் இக்கணனி வலைப் பின்னல் திட்டத்திற்கென ஆயிரம் 200கணனிகள் பயன்படுத்தப் படவுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சு பல புதிய சேவைகளையும் ஆரம்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இப்புதிய சேவைகளின் போது கட்டணப் பட்டியல் வசதி, இணையப் பாவனை வசதி, இலத்திரனியல் கொள்வனவு மற்றும் இலத்திரனியல் மருத்துவ வசதி போன்ற 13 புதிய சேவைகள் அறிமுகப்படுத் தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### ஊமை மனங்கள்

ஆசைத் தமிழ் படித்து
அகவை காண வந்தேன்
பாசத் தமிழ் எல்லாம்
பாவி அவன் கையில்

ஈழத்தமிழ் சோகம்
இடிகிறது நெஞ்சுக்குள்ளே
மண்ணை இழந்த நிலைமை
மானமே பறிபோனாச்சு

எம்மைக் கைது செய்து
அடைத்தார் சிறையிலின்று
மீள முடியாத துயரம்
தின்று திணறடிக்குது வாழ்வை

விலங்குகளின் சூழல்வாழ்
துவழுகிறோம் நாமிங்கே
நாக்கிழந்த பிணங்களாய்
சொற்பேச்சை நாமிழந்தோம்.

நெய்தல் மகன்
வே.அகிலேஸ்வரன்

### இதயம்

நான்
இறந்த
பிறகும்
என் இதயம்
உயிரோடுதான்
இருக்கும்
நீ
உயிரோடிருக்கும்
வரை

கொற்றையூர்
மகே-மேனன்

### கனவு

தனிமையான வேளையிலே
இனிமையான தூக்கத்திலே
காலத்தால் கொடுக்கப்பட்ட
சின்ன சின்ன பரிசுகளே
சுகமான கனவுகள்
எப்பொழுதும்....
மனதை விட்டு அகலாது.

A.சுயிந்தன்
C.H.C

### விடியல்

என்
வீட்டு ரோஜா
மொட்டலர்ந்து
இதழ்விட்டு
மணம்பரப்பி
மண்ணில்
உதிர்ந்து போனது
நாளைய விடியலுக்காய்
மீண்டும் எழுவதற்கு ...

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்



### எங்கள் வாழ்க்கை

கூரையே இல்லாத
குடிசை வீடு – அதில்
குந்தி இருக்க – சிறு
திண்ணையும் இல்லை
இது தான் எங்கள்
வாழ்வான போது
வடக்கின் வசந்தம்
வந்து கதவு தட்டுதாம்
பாதை திறந்து
பயணம் நடக்குதாம்
வசந்த விழாவுடன்
களியாட்ட நிகழ்வும்
நடத்தி முடிப்பதில்
காலம் கழியுது

இணுவை
சுகந்தி



### இமயம் தொட...

உன் கனவுகள் எல்லாம்
பொடிப் பொடியாகி
உருக்குலைந்து விட்டதே என
வாழ்வை வெறுக்காதே
உற்று நோக்கு
பொடியான இடிபாடுகளுக்குள் தான்
பொன்னான வாய்ப்பு
மறைந்திருக்கும்
சோர்வு விலக்கி தேடு
தேடல் உன்னை வாழவைக்கும்.


மாவை. நா.கஜேந்திரா

### அந்த நாள்...

உன்னோடு பழகிய அந்த
நிமிடங்களை மறக்க முடியவில்லை
உன்மேல் கொண்ட நட்புக்காக
என்னை நீ கண்ணீர் மழையினால்
நனைப்பது நிஜம் - இன்றும்
உன் நினைவைத் தவிர வேறொன்றும்
இல்லை என்னிடம் நண்பியே.

இ.ஷோபா

## மௌனத்தின் தேடல் - 40



மறக்க முடியுமா வலியின் சின்னம்
போர் தந்த பரிசாய்
இன்னும் நீள்கின்றது
மிச்சங்களான எச்சங்கள் சில
காத்திருக்கின்றன....
தூசு தட்டப்படலாம் என்ற
நம்பிக்கையில்

S.வினோவர்மன்
புளியங்கூடல்

### பொறுக்காத தெய்வங்கள்

வன்னி மக்களின்
சொத்துக்கள் யாவும்
அழிக்கப்படுவதைப்
பார்க்கப் பொறுக்காத
தெய்வங்கள் இங்கே
தங்கள் திருமுகங்களைத்
திருப்பிக் கொண்டனவோ

வி.சிறீதேவி
துன்னாலை

இறைவா இங்கே
உமக்கும்
அகதி வாழ்வு – என்பதனாலா
நாம் இரத்தம் சிந்தியவேளை
கண்டு கொள்ளாதிருந்தாய்?
ஓ தெய்வமே!
மன்னித்து விடு!
உன் அவலநிலை
புரியாமல் இருந்த எம்மை...

k.சாரு
வட்டக்கச்சி

சனத்தின் கதிதான் சாமிக்கும்
கொட்டிலுமில்லை கோயிலுமில்லை
பொல்லாத போர் புரிந்த
பொல்லாக் குணமிது

பா.பாலச்சந்திரன்
மயிலணி

பிள்ளையார் வீடு
புதர் மண்டிக்கிடக்கு- வீடுகட்ட
புத்தரிடம் மனுக் கொடுத்து
பிள்ளையார் தவம் கிடப்பு...

S.துவாரகன்
அரியாலை

### ஏன் இந்த நிலை

தமிழனுக்கு அகதி நிலை
வீட்டிற்கு அழிவு நிலை
இறைவனுக்கு தூக்கு நிலை
மரத்திற்கு பட்ட நிலை
இயற்கைக்குக் கோர நிலை

வா.செல்வந்தி

### பொய்யான தெய்வம்

மானிடர்கள் பாதை தனை
மாறிய வேதனையால்
தெய்வம் தன் பயணமதை
மறந்து கண்ணீர் விடுகிறது
அதனால் தான் இன்று
உலகம் நிலை குலைந்து விட்டது.

இ.தர்சன்
கரணவாய்

### கோபமோ ? இறைவா

போர் கண்டு நீ இடம் பெயர்ந்தாயோ -இல்லை
போர் உனையும் இடம் பெயரச் செய்ததோ
காலனை எதிர்க்கும் நீ
எம்மினத்தின் கனவையும் எதிர்த்ததேன்

முல்லையூர் சேரன்
பருத்தித்துறை

### தண்டனை

மனிதனைப் படைத்த
மா பாவிக்கு மரண தண்டனை
மரத்திலே நிகழுது
பாருமையா

து.ஆதவன்
சிறுப்பிட்டி மேற்கு

கடல் துளி என
காட்சி தரும் போர் சிதைவின்
சினம் இது வெனில்
அழிப்பு போரில் பலியான
மனித உயிர்கள்?

சு.சுகிர்தமலர்
உரும்பிராய்

### தெருவிற்கு ஏன் வந்தோம்

நல்ல தமிழ் கட்சிகளில்
வல்ல தலைமை இருந்திருந்தால்
எங்கள் தமிழ் தெய்வம்
ஏன் தெருவில் வந்திருக்கும்

உடு-இந்திரயித்தன்

### மரநிழலே தஞ்சம்

அல்லல்கள் பலவற்றால் அவதியுற்று
அநாதையாக்கி மர நிழலை தஞ்சம் புகுந்த
மானிடமே !உன்போல்
இல்லத்துள் இருந்து ஆதரிப்போரற்று
இறுதியில் இறைவா நீயும் மர நிழலை
தஞ்சமடைந்தனையோ!!

பொ.புனிதன்
வரியப்புலம்-சுன்னாகம்

### ஐ.நா வின் கேள்வி

இறுதி யுத்தத்தில்
அழிக்கப்பட்ட உன்
ஆலய வாசலில்
உயிரிழந்த உறவுகள்
என்ன பேசினார்கள் சாமி

வி.விஜிஸ்
சாந்தை, கல்வி வ.கழகம்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 41



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 22.10.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# பிரிட்டனில் இளம்பெண்ணை காப்பாற்ற முயன்ற இந்தியர் மீது இனவெறி தாக்குதல்

(லண்டன்)

பிரிட்டனில் ரவுடி கும்பலிடம் இருந்து இளம் பெண்ணை காப்பாற்ற முயன்ற இந்தியர் மீது அந்தக் கும்பல் காட்டுமிராண்டித்தனமாக இனவெறி தாக்குதல் நடத்தியுள்ளது.

நடு வீதியல் ஒரு பெண்ணிடம் தவறாக நடக்க முயன்ற கும்பலை தட்டிக் கேட்ட பங்கஜ் ராவத் என்ற இந்தியரை 5 பேர் கொண்ட ஸ்கொட்லாந்து ரவுடி கும்பல் அடித்து உதைத்து எலும்புகளை உடைத்துள்ளது.


பங்கஜ் ராவத் என்ற இந்தியர் ஸ்கொட்லாந்தில் எடின்பர்க் நகரில் உள்ள புடைவைக்கடை ஒன்றில் வேலை பார்த்து வந்தார். இவர் கடந்த 9 ஆம் திகதி இரவு வெளியில் சென்று விட்டு நண்பர் ஒருவருடன் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக 20 வயது மதிக்கத்தக்க இளம் பெண் ஒருவர் வந்து கொண்டிருந்தார். அந்தப் பெண்ணிடம் 5 பேர் கொண்ட ரவுடி கும்பல் சில்மிஷம் செய்ததாகக் கூறப்படுகிறது.

இதைப் பார்த்த பங்கஜ் ராவத் அந்த பெண்ணை கும்பலிடம் இருந்து காப்பாற்ற முயன்றார். இதனால் ஆத்திரம் அடைந்த அந்த ரவுடி கும்பல் அவரை இன ரீதியாக விமர்சித்ததுடன் கடுமையாக அடித்து உதைத்தது. இதில் பலத்த காயம் அடைந்த ராவத் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து ராவத் கூறுகையில், இளம் பெண்ணை அந்தக் கும்பல் கையை பிடித்து இழுத்து பலவந்தப்படுத்திய போது நான் அந்தப் பெண்ணைக் காப்பாற்ற முயன்றேன். என்னிடம் நீ யார்? எந்த நாட்டுக்காரன்? என்று அந்த கும்பலில் இருந்த ஒருவர் கேட்டார். நான் இந்தியன் என்றேன். உடனே என்னை கேலி செய்து இன ரீதியாக விமர்சித்ததுடன் முரட்டுத் தனமாக தாக்கினர். உடன் இருந்த என்னுடைய நண்பரால் அந்தக் கும்பலை எதிர்த்து எதுவும் செய்ய முடியவில்லை.

இது குறித்து கருத்து தெரிவித்த பொலிசார், இந்தத் தாக்குதல் காட்டு மிரண்டித்தனமானது. சம்பவத்தை நேரில் பார்த்தவர்களிடம் விசாரணை நடத்தி வருகிறோம். இதில் ஈடுபட்டவர்களை தேடி வருகிறோம். என்றனர். (ஶ்ரீ-2)



ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் உள்ள பிரதமர் மாளிகையில், அந்நாட்டுப் பிரதமர் நாடோ கனை (வலது), வநுவாடு பிரதமர் மற்றும் பசுபிக் தீவின் தலைவருமான எட்வர்ட் நடபே சந்தித்து உரையாடினார்.

# உலக மக்களின் தேவையை பூர்த்தி செய்ய இன்னொரு பூமி தேவைப்படும்

## விஞ்ஞானிகள் கருத்து

(லண்டன்)

உலக மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இன்னொரு பூமி தேவைப்படும் என்றும் இத்தகைய சூழ்நிலை இன்னும் 20 ஆண்டுகளுக்குள் ஏற்படும் எனவும் விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பூமியில் உள்ள வளங்களை மிகவும் அதிக அளவில் மனிதர்கள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர் என்று வாழும் பூமி குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் இயற்கை வளங்களின் நுகர்வு இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் பூமியின் வளம் பாதியாகக் குறைந்து விட்டது.

தற்போதைய நிலை தொடருமானால் எதிர்வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் மேலும் ஒரு பூமி மனிதனுக்குத் தேவைப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வெப்ப மண்டல நாடுகளில் வன விலங்குகளின் வாழ்க்கைச் சூழல் கேள்விக் குறியாகியுள்ளது. இவற்றின் எண்ணிக்கை கடந்த 30 ஆண்டுகளில் 60 சதவீத மாகக் குறைந்து விட்டது.

புவியில் உள்ள வளங்களில் மிக அதிகமான அளவில் பிரிட்டன் மக்கள் பயன்படுத்துவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே போல அனைவரும் பயன்படுத்தத் தொடங்கினால் புவியில் உள்ள மக்கள் தொகைக்கு மேலும் ஒரு பூமி தேவைப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

புவியில் உள்ள வளங்களைப் பயன்படுத்தும் அளவு மற்றும் கரியமில வாயு வெளியிடும் அளவு ஆகியவற்றைக் கணக்கில் எடுத்து பார்க்கும் போது பிரிட்டன் 31 ஆவது இடத்தில் உள்ளது. (ஶ்ரீ-2)

# டெங்கு நோயினால் உலக மக்கள் பாரிய ஆபத்தினை எதிர்நோக்கியுள்ளனர்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

டெங்கு நோயினால் உலக மக்கள் பெரும் ஆபத்தினை எதிர்நோக்கி வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலமாக டெங்கு நோயின் ஆதிக்கம் உக்கிரமடைந்து வருவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

டெங்கு நோய் பாதிப்பு தொடர்பில் உலக நாடுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இல்லாவிட்டால் பாரிய ஆபத்துக்கள் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்திய வலய நாடுகளில் நாற்பது வீதமான மக்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாகவும் நுளம்புகளினால் ஏற்படக் கூடிய டெங்கு காய்ச்சல் மிகவும் ஆபத்தானதென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிக வெப்பம் அல்லது மழையுடன் கூடிய காலநிலைகளின் போது டெங்கு நோயைப் பரப்பக்கூடிய நுளம்பு பரவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஶ்ரீ-2)

# நேபாளத்தில் விரைவில் புதிய அரசு அமைவது உறுதி

## பிரதமர் வேட்பாளர் நம்பிக்கை

(காத்மண்டு)

நேபாளத்தில் விரைவில் புதிய அரசு அமையும் என்று பிரதமர் வேட்பாளரும் நேபாள காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ராமச்சந்திர பெதியால் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் புதிய பிரதமரை தேர்ந்தெடுக்க 12 சுற்று தேர்தல் நடந்துவிட்டது. ஆனால் 12 சுற்றிலும் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் பிரதமரை தேர்ந்தெடுக்க முடியவில்லை. தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது. பிரதமரை தேர்ந்தெடுப்பதற்கான 13 ஆவது சுற்று தேர்தல் வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில் பிரதமர் பதவிக்கு போட்டியிடும் முக்கிய வேட்பாளரான ராமச்சந்திர பெதியால் நேபாளத்தில் விரைவில் புதிய அரசு அமையும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். காத்மண்டுவில் கடந்த 4 ஆம் திகதி செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் அவர் இதைத் தெரிவித்தார். புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பது குறித்து அரசியல் கட்சிகளிடம் கருத்தொற்றுமையை ஏற்படுத்த நேபாள காங்கிரஸ் தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

அரசியல் கட்சிகளிடையே விரைவில் கருத்தொற்றுமை ஏற்படும் என்ற நம்பிக்கை உள்ளது. ஒரு வாரகால விஜயதசமி கொண்டாட்டம் முடிவடைந்த பின்னர் புதிய அரசு அமைவது உறுதி என்றும் அவர் கூறினார். (ஶ்ரீ-2)

# நடுவானில் இந்திய விமானி மாரடைப்பால் மரணம்

(டுபாய்)

கட்டார் ஏர்வேஸ் விமானம் ஒன்று நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது இந்திய விமானி ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்தார். இதையடுத்து அந்த விமானம் கோலாலம்பூர் விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் இருந்து கட்டார் ஏர்வேஸ் விமானம் ஒன்று கட்டார் தலைநகர் டோஹாவுக்கு கடந்த 13 ஆம் திகதி புறப்பட்டது. இதில் 260 பயணிகள் இருந்தனர். விமானத்தை மும்பையைச் சேர்ந்த விமானி அஜய் குக்ரேஜா வயது(43) உள்ளிட்ட விமானிகள் குழு இயக்கியது. விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது தனக்கு நெஞ்சு வலிப்பதாக சக விமானியிடம் அஜய் கூறினார்.

இதையடுத்து வழியில் கோலாலம்பூர் விமான நிலையத்தில் அவசரமாக விமானம் தரையிறக்கப்பட்டது. விமான நிலையத்தில் அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினார். பின்னர் அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக கோலாம்பூரில் உள்ள செர்தாங் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

கோலாலம்பூர் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் மாரடைப்பால் அஜய் உயிரிழந்ததாகவும் மேலும் இவர் நீண்ட நாட்களாக ஆஸ்துமா நோயால் அவதிப்பட்டு வந்ததாகவும் அவர் எப்போதும் இன்ஹேலர் வைத்திருப்பார் என்றும் தெரியவந்துள்ளது. (ஶ்ரீ-2)



ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில், அந்நாட்டுப் பிரதமர் விளாடிமிர் புடினை (வலது), வெனிசுலா ஜனாதிபதி ஹுகோ சாவஜ் சந்தித்து உரையாடினார்.





அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையும் வன்னிப் பிராந்திய திருச்சபையும் இணைந்து நடாத்திய சிறுவர் தினவிழாவில் நிகழ்வை நடத்திய பிராந்தியக் குரு முதல்வர் அருட் திரு டி.எஸ். குகனேஸ்வரனையும் நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்களையும் படங்களில் காணலாம்.

# ராஜீவ்காந்தி கொலை வழக்கிலிருந்து பிரபாகரன் விடுவிக்கப்படவில்லை

## இந்திய புலனாய்வுப்பிரிவு தெரிவிப்பு



விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் சுட்டுக்கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதும் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்படவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சி.பி.ஐ பதில் அளித்துள்ளது.

தமிழீழவிடுதலைப்போராட்டத்தில் இராணுவத்திற்கு எதிராக போரில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டதாக கடந்த 2009 ஆம் ஆண்டு மே 17 ஆம் திகதி இலங்கை அரசு அறிவித்தது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் பிரபாகரன் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர் இறந்ததாக அறிவிக்கப்பட்டதால் பிரபாகரன் பெயர் வழக்கில் இருந்து விடுவிக்கப்படுமா என்ற கேள்வி எழுந்தது. ஆனால் இதுவரை பிரபாகரன் பெயர் ராஜீவ் கொலை வழக்கில் இருந்து விடுவிக்கப்படவில்லை என்ற தகவல் சி.பி.ஐ.யிடம் இருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ளது.

திருப்பூர் குத்தூஸ்புரத்தை சேர்ந்த மணி என்பவர் சி.பி.ஐ. யிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களைக் கோரி இருந்தார். அதில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ராஜீவ் கொலை வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளாரா? இலங்கை அரசு பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டதாக அதிகார பூர்வமாக அறிவித்துள்ளதா? இது தொடர்பாக அரசு ரீதியான தகவல் இலங்கை அரசிடம் இருந்து பெறப்பட்டுள்ளதா? பிரபாகரனின் இறப்புச் சான்றிதழ் இலங்கை அரசிடம் இருந்து பெறப்பட்டுள்ளதா? ராஜீவ் கொலை வழக்கில் பிரபாகரன் விடுவிக்கப்பட்டுள்ளாரா? என்ற தகவல்களை கோரி இருந்தார்.

இந்நிலையில் இக் கேள்விகளுக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி சி. பி.ஐ. எம்.டி. எம்.ஏ. பிரிவு பதில் அளித்துள்ளது.

அந்தப் பதிலில் ராஜீவ் கொலை வழக்கில் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் குற்றவாளி தான் எனவும் பிரபாகரன் இறந்து விட்டதாக இலங்கை அதிகாரிகள் தகவல் தெரிவித்திருப்பதாகவும் அரசு ரீதியான தகவல் பெறப்பட்டுள்ளதாகவும் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் இறப்புச் சான்றிதழ் தொடர்பான கேள்விக்கு அலுவலக ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று மட்டும் பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும் ராஜீவ் கொலை வழக்கில் இருந்து பிரபாகரன் விடுவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஶ்ரீ-2)

## புலி ஆதரவாளருக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

அமெரிக்காவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்த இலங்கைத் தமிழருக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டுமென சட்டத்தரணி சார்ள்ஸ் ரோஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளித்த கருணாகரன் என்ற நபரின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக அமெரிக்காவில் புகலிடம் கோரியுள்ளதாகவும் தமது சொந்தங்களை அமெரிக்காவிற்கு அழைத்து வரும் நோக்கில் பணம் திரட்டியதாகவும் மற்றும் அறக்கட்டளை ஒன்றுக்காகவும் பணம் திரட்டப்பட்டுள்ளதா கவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் இருபது ஆண்டுகால சிறைத் தண்டனை ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (ஶ்ரீ-2)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

## அமரர் திருமதி சந்திரசேகரம் பவானிதேவி

தாயின் மடியில்
18 . 08 . 1956

ஆண்டவன் அடியில்
17 . 09 . 2010



மனைவியாய், தாயாய், சகோதரியாய், மகளாய், மருமகளாய், மைத்துனியாய்,அத்தையாய், அன்ரியாய், சித்தியாய், அப்பம்மாவாய், அம்மம்மாவாய் ஊரிலுள்ள அயலவர்க்கும் உறவினர்களுக்கும் பவானி அக்காவாய் யாதுமாகி நின்ற எங்கள் அன்புத் தெய்வம் இறைவன் அடி சேர்ந்து ஒருமாதம் சென்று விட்டது. துன்பத்தைத் தந்த ஆண்டவன் அதைத் தாங்கும் சக்தியையும் தந்து தான் ஆகவேண்டும். கோடியுகம் சென்றாலும் எங்கள் இனிய உறவே உங்களை மறக்க முடியாதம்மா. உங்கள் இழப்பை தாங்க முடியாதம்மா. என் செய்வது? கவிப்பேரரசு கண்ணதாசனே சொல்லி விட்டார் கேள்வியாக "கண்ணிலே நீர் எதற்கு" என்றும் பதிலாக "காலமெல்லாம் அழுவதற்கு" என்றும் அதுபோல் எங்கள் கண்ணீர் மாலையை மானசீகமாக உங்களுக்கு அணிவித்து உங்கள் ஆத்மா சாந்தி அடைய என்றும் வணங்குகின்றோம்.

*எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தியறிந்து ஓடோடி வந்து ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையங்கள் சாற்றியோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் பத்திரிகைகள் மூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தோர், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*கடந்த 17.09.2010 அன்று இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (17.10.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.*

*அழைப்பு கிடைக்காதோர் அனைவரும் தயவு செய்து இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.*

*வளாக வீதி,*
*திருநெல்வேலி.*

(2669)

**தகவல்**
**குடும்பத்தினர்**



வாசிப்பு மாதத்தை முன்னிட்ட நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் அதிபர் எஸ்.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ***ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம்*** நூல்களை இலவசமாக வழங்குவதையும் அதிபர் எஸ்.பாலகிருஷ்ணன், வணபிதா அமலதாஸ் அடிகள், ஆசிரியர்கள், மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## ரி-56 துப்பாக்கியுடன் நால்வர் கைது

(கொழும்பு)

ரி-56 ரக துப்பாக்கியுடன் நான்கு இளைஞர்களை வாழைச் சேனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிரான் பகுதியில் இடம்பெற்ற கொள்ளை திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்பு பட்டதாக கூறப்படும் மேற்படி இளைஞர்கள் இரு நாட்களுக்கு முன் கைது செய்யப்பட்டதாகவும் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகவும் வாழைச் சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

## மன்னார் தமிழ்ச் செம்மொழி விழா 22ஆம் திகதி கோலாகல ஆரம்பம்

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 22,23,24,25 ஆகிய திகதிகளில் மன்னார் தமிழ்ச் செம்மொழி விழா இடம் பெறவுள்ளது.

இவ்விழாவுக்கான ஏற்பாடுகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் பாலத்தில் இருந்து பண்பாட்டுப்பேரணி ஆரம்பமாகும். இப்பேரணி மன்னார் நகரமண்டபத்தை அடைந்ததும். அங்கே தொடக்க விழா நிகழ்வுகள் இடம்பெறுவதோடு மாலை 3 மணிக்கு இசைவிழாவும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு முதலாவது இலக்கிய விழாவும் மாலை 3 மணிக்கு நாட்டிய விழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலையில் இரண்டாவது இலக்கிய விழாவும் மாலையில் நாடக விழாவும் இடம்பெறவுள்ளதோடு மாலை 3 மணிக்கு நிறைவு விழாவும் இடம்பெறும்.

இவ்வரங்க நிகழ்வுகள் நடைபெறும் அதேவேளையில் 23,24, 25ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியில் இலக்கிய ஆய்வரங்குகள் நடைபெறும்.

இதிலே இலங்கையில் உள்ள பல பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் பங்கேற்கின்றனர். உயர்தர தமிழ்பாட மாணவர்கள், ஆசிரியர்கள், இலக்கியவாதிகள், தமிழ் ஆர்வலர்கள் என 400 இற்கு மேற்பட்டோர் ஒவ்வொரு நாளும் இதில் பங்கேற்பார்கள்.

மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெறும் ஏழு அரங்க நிகழ்வுகளிலும் விருந்தினர்களாக மன்னார் மாவட்டத்தின் பல்வேறு அரச அதிகாரிகள், சமயத் தலைவர்கள், கல்வியாளர்கள், கலை இலக்கியவாதிகள் ஆகியோரும் இன்னும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பேராசிரியர்கள், கலை இலக்கிய வாதிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவ் வரங்க நிகழ்வுகளில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கலை இலக்கிய வாதிகள் இயல், இசை ,நாடக நிகழ்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

மன்னார் மாவட்டச் செயலகம், மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள், கல்வி வலையங்கள், பாடசாலைகள் மற்றும் அரச, அரசார் பற்ற, மத அமைப்புக்கள் போன்ற அனைவருடைய ஆதரவையும் பெற்ற மக்கள் மயப்படுத்தப்பட்ட விழாவாக இச்செம் மொழி விழா அமையவுள்ளது.

*மக்களிடமிருந்து மக்களுக்காக* என்ற கொள்கையின் அடிப்படையில் மக்களிடமிருந்து நிதிப் பங்களிப்பைப் பெற்று இவ் விழா நடைபெறுகின்றது. என மன்னார் தமிழ்ச்சங்க நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இவ்விழாவில் பேராளர்களாகக் கலந்து கொள்ள விண்ணப்பித்த அனைவருடைய விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளதாகவும் விண்ணப்பித்த அனைவரும் தங்கள் வரவை உறுதிப்படுத்தும்படி கேட்கப்படுகின்றன.

செம்மொழிவிழாவையொட்டி மேற்கொள்ளப்பட்ட அதிஸ்லாபச் சீட்டிழுப்புச் திகதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய சீட்டிழுப்புத் திகதி எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பொருளாளர் தோமாஸ் மரியதாஸ் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## அமைச்சராக இருந்த காலத்திலேயே ஊடகங்களில் தம்மை வெளிப்படுத்திக்கொள்வதில் ஜனாதிபதி வல்லவர்

### மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் மாயையான ஓர் ஆட்சியையே தற்போது முன்னெடுத்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மாயையாகவே நாட்டை ஆட்சி செய்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடுத் ரஜ்ஜ்ருவன்கே படுத் ரஜ்ஜ்ருவன்கே (வழக்கும் அரசினது, பொருட்களும் அரசினது) என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய ஜனாதிபதியும் முன்னாள் அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவை *மிஸ்டர் மாயாரட்ன* என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அழைப்பார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது அமைச்சின் பிழைகளை மூடி மறைத்து ஊடகங்களில் பிரமாண்டமாக தம்மை வெளிப்படுத்திக்கொள்வதில் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சராக இருந்த காலத்திலிருந்தே வல்லவர் எனவும் தமது பிழைகளையும் போலித் தன்மையையும் நாட்டு மக்கள் அறிந்து கொள்ளக்கூடாது என்ற காரணத்தினால் இந்த அரசாங்கம் ஊடகங்களின் மீது மறை முகமான அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அபிவிருத்தி, வெளியுறவுக் கொள்கை மற்றும் பொருளாதாரம் போன்ற துறைகள் தொடர்பில் அரசாங்கம் நடத்தி வரும் பிரசாரங்கள் வெறும் மாயையே தவிர வேறொன்றுமில்லை என்றும் உண்மை நிலைமைகளை அடி மட்ட மக்களுக்கு எடுத்துச் செல்லும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி முனைப்புக்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## இலங்கையில் 23 வீதமான குடும்பங்களில் தாய் அல்லது தந்தை மட்டுமே உள்ளனர்

### சமூக சேவைகள் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 23 வீதமான குடும்பங்களில் தாய் அல்லது தந்தை மட்டுமே வழிநடத்துவதாக சமூக சேவைகள் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகளவான விவாகரத்து பிரிவு மற்றும் தாய் அல்லது தந்தை உயிரிழத்தல் ஆகிய காரணங்களினால் குடும்பங்களை தாய் அல்லது தந்தை மட்டுமே வழிநடத்தி வருவதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் தென்மாகாணங்களில் இந்த நிலைமை மிகவும் மோசமாகக் காணப்படுகின்றதெனவும் வடக்கில் பெருமளவிலான மக்கள உள ரீதியான பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய மன நல ஆலோசனை தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலக நாடுகளில் அனைத்து வைத்தியசாலைகளிலும் மன நல ஆலோசகர்கள் காணப்படுவதாகவும் நாடு முழுவதிலும் 94 முழு நேர மன ஆலோசகர்கள் கடமையாற்றி வரும் அதேவேளை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 20 மன நல ஆலோசகர்கள் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

சிறைச்சாலைகள், வைத்தியசாலைகள், புனர்வாழ்வு மையங்கள், சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களில் மன நல ஆலோசகர்களை கடமையில் ஈடுபடுவத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## மலையகத்தில் அதிசக்தி வாய்ந்த வெடி மருந்துகளுடன் மூவர் கைது

மலையகத்தில் தாக்குதல் நடத்தும் நோக்கில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெரும் தொகையான அதிசக்தி வாய்ந்த வெடி மருந்துகளுடன் மூன்று சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக மத்திய மாகாண பயங்கரவாத விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் கடந்த 14ஆம் திகதி கைது செய்யப்பட்டதாகவும் அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

தமக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொண்ட விசாரணையில் தலவாக்கலை, கிரேட் வெஸ்ட்ன் தோட்டத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் 5 கைக்குண்டுகள், ஒன்றரை கிலோ எடைகொண்ட இரண்டு குண்டுகள் மற்றும் 4 கிலோ கிராம் சி 4 ரக வெடி மருந்துகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் தலவாக்கலை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என மத்திய மாகாண பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் மவற்றோ ரன்ன.
-கணியன் பூங்குன்றனார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கையடக்கத் தொலைபேசிக்கு தடை கொண்டு வருக

எங்கள் கலாசாரம் சிதைவடைகின்றது எனக் கூறிக்கொள்வதனால் எந்தப் பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை. மாறாக கலாசாரப் பிறழ்வுகளைத் தடுத்து எம் இளம் சமூகத்தை நல்வழிப்படுத்துவதற்கான செயலாக்கங்களை அமுல்படுத்துவதே இன்றைய முதன்மைப் பணியாகும்.

அவ்வகையில் எங்கள் கலாசாரச் சீரழிவின் மூலங்களை கண்டறிவது, அதைத் தூண்டும் காரணிகளை தெரிந்துகொள்வது, அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பது என்று ஒழுங்கமைப்பில் மிகவும் உறுதியாக செயற்படும் போதே தமிழர் பண்பாட்டு ஒழுக்கம் நிலைநிறுத்தப்படும்.

இவ்வகையில் நோக்கும் போது எங்கள் இளம் சமூகம் அறியாநிலை நின்று தங்கள் எதிர்கால வாழ்வை சிதறடிக்க வைப்பதில் கையடக்கத் தொலைபேசிகளின் பாவனையே முதன்மையான பங்கை வகிக்கின்றது எனலாம்.

குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையே கையடக்கத் தொலைபேசிகளின் பயன்பாடு மிகவும் அதிகரித்துவிட்டது. கல்வி கற்க வேண்டிய மாணவர்கள் கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்த வேண்டிய தேவை கிடையாது.

எனவே மாணவர்கள் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துவதை முற்றாகத் தடை செய்யும் வகையில் பிராந்தியம் அல்லது யாழ். குடாநாடு தழுவிய விசேட நடைமுறைகளைக் கொண்டு வரவேண்டும்.

சட்டம் என்பது நாடு முழுவதற்கும் உரியதாயினும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மட்டும் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தியது போல், வடபுலத்தில் உயர் பாதுகாப்பு வலய நடைமுறை இருப்பது போல் யாழ். குடாநாட்டில் மாணவர்கள் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்த முடியாது என்ற எழுதாத யாப்பை அமுல்படுத்த வேண்டிய தேவை அவசரமாக ஏற்பட்டுள்ளது. இந்த முடிவை நடைமுறைப்படுத்தும் பணியின் பெரும் பங்கை பெற்றோர்களும் பாடசாலைச் சமூகமும் எடுத்தாக வேண்டும். இதற்கு அப்பால் ஒரு பிராந்தியத்தில் கலாசாரப் பிறழ்வை கட்டுப்படுத்துவதற்காக சட்டத்தை பிராந்திய மட்டத்தில் அமுல்படுத்துவதற்கு ஏற்ற வழிவகை பற்றியும் நீதிபரிபாலனம் சிந்திக்கவேண்டும்.

இது பற்றிய சிந்தனைகள் காலதாமதமாகுமாயின் அதற்காக வருந்தவேண்டிய சந்தர்ப்பம் காத்திருக்கிறது என்னும் உண்மையை இவ்விடத்தில் கூறித்தான் ஆகவேண்டும்.

# சன் சீ கப்பலில் பயணித்த அகதிச் சிறுவர்களுக்கு கல்வி போதிப்பதற்கு விசேட நடவடிக்கை

சன் சீ கப்பல் மூலம் கனடா வந்தடைந்த தமிழ் அகதிகளின் குழந்தைகளுக்கு கல்வி போதிப்பதற்கான விசேட நடவடிக்கைகளை கனேடிய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. அதற்கென மூன்று விசேட போதனாசிரியைகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சன் சீ கப்பல் மூலம் கனடா சென்றடைந்த தமிழ் அகதிகளில் தனியாக இருந்த பெண்களும் ஆண்களும் சகல வசதிகளும் கொண்ட தடுப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டு தொடர்ச்சியாக விசாரிக்கப்பட்டு வருகின்றனர். ஆயினும் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் தாய்மாருடன் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே தாய்மாருடன் தங்க வைக்கப்பட்டுள்ள குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கான கல்வி தொடர்பில் கனேடிய கல்வி அமைச்சு விசேட ஏற்பாடொன்றை மேற்கொண்டுள்ளது. அதன் பிரகாரம் குறித்த சிறுவர்களின் வயது வரம்பைப் பொறுத்து அவர்களுக்குத் தனித்தனியான வகுப்புகளை ஒழுங்கு செய்து கல்வி போதிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த சிறுவர்கள் ஆங்கிலத்தில் உரையாடுவதில் போதுமான திறமை கொண்டிருக்கவில்லை என்றும் ஒரு சிலர் மாத்திரம் ஓரளவு ஆங்கிலப் புலமையுடன் காணப்படுவதாகவும் அதுவும் கூட சரளமாக உரையாடுமளவுக்குப் போதுமானதாக இல்லை என்றும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியைகளில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இருந்தும் அனைவரும் கல்வி கற்பதில் ஆர்வம் கொண்டிருப்பதாகவும் தாய்நாட்டைப் பிரிந்து வந்த துயரம் அவர்களிடம் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கும் இன்னொரு ஆசிரியை, அவர்கள் தாய்நாட்டை . விட கனடாவில் இருப்பதையே பெரிதும் விரும்புவது போல் காணப்படுவதாகவும் குறிப்பிடுகின்றார்.

தற்போதைக்கு அகதிக்குழந்தைகளின் ஆங்கிலப் புலமையின்மை காரணமாக, சைகைகள் மற்றும் அங்க அசைவுகளுடனான பாடல்கள் மூலமாகவே அவர்களுக்கு ஒவ்வொன்றாக ஆங்கில வார்த்தைகள் கற்பிக்கப்படுவதாகவும் ஆசிரியைகள் தெரிவித்துள்ளனர். உடம்பின் பாகங்கள் தொடர்பில் அவர்களுக்கு கற்பிப்பதற்கு ஒரு வார காலம் தேவைப்பட்டதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிடுகின்றனர். அகதிக்குழந்தைகளின் தாயொருவர், கனடா தமக்கு மறுவாழ்வு அளித்துள்ளதாக நன்றி ததும்ப குறிப்பிட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# தாய்லாந்தில் கைதானோர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் அபாயம்!

தாய்லாந்தில் கைது செய்யப்பட்ட 155 ஈழத்தமிழர்களில் 128 பேர் பெரும்பாலும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப் படுவார்கள் என்று தாய்லாந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி பாங்கொக்கிற்கு வடக்கே புறநகரப் பகுதியில் அமைந்துள்ள 17 தொடர்மாடிக் குடியிருப்புகளில் தாய்லாந்து இராணுவத்தினர், குடிவரவு அதிகாரிகள் இணைந்து நடத்திய தேடுதலில் 155 ஈழத்தமிழர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் தாய்லாந்தில் தங்கியிருப்பதற்கான சட்டபூர்வ ஆவணங்கள் நுழைவு அனுமதியை வைத்திருந்தவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது 128 பேர் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தாய்லாந்து குடிவரவுச் சேவையின் பேச்சாளர் தெரிவித்தார்.

நாட்டின் சட்டத்துக்குப் புறம்பாக தாய்லாந்தில் தங்கியிருந்த இவர்களை மீளவும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவது தொடர்பாக இலங்கை தூதரக அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவுள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி ஐ.நாவின் எந்தவொரு முகவர் அமைப்பும் உடனடியாகக் கருத்து வெளியிடவில்லை. கைது செய்யப்பட்டவர்களில் எவருமே புலிகள் இயக்க உறுப்பினர்கள் இல்லை என்று தாய்லாந்து குடிவரவுச் சேவையின் பேச்சாளர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இந்திய-இலங்கை பயணிகள் கப்பல் சேவை தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கை

இந்திய - இலங்கை பொது போக்குவரத்து கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு இரு தரப்பிலும் விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இரு நாடுகளுக்குமிடையில் விரைவிலேயே பயணிகள் கப்பல் சேவைகளை ஆரம்பிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என இந்திய உயர்ஸ்தானிகரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்திய கப்பல்துறை அமைச்சின் செயலாளர் கே. மோகன்தாஸ் உட்பட்ட பிரதிநிதிகள் குழு கடந்த 2 தினங்களாக இலங்கைக்கு விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்து தமது இணக்கத்தை வெளியிட்டுள்ளனர்.

துறைமுகப்பணிகள் அமைச்சுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னரே கடல் போக்குவரத்துத் தொடர்பாக அவர்கள் இந்த இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளனர்.

அத்தியவசியமான ஏற்பாடுகளை நிறைவு செய்ததன் பின்னர் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

அதன் பின்னர் கொழும்பு மற்றும் தூத்துக்குடிக்கு இடையிலும் தலைமன்னார் மற்றும் இராமேஸ்வரத்திற்கு இடையிலும் பயணிகள் கப்பல் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலைக்கு முன்னரும் தலை மன்னார் மற்றும் இராமேஸ்வரத்திற்கிடையே கப்பல் போக்குவரத்து இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# செப வாழ்வு



சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழி கேட்டுக் கொண்டு போய்ச்சேரும்.

ஆம், எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதில் ஊக்கம் குறையாமல் உற்சாகத்தோடு செய்ய வேண்டும். அச்செயல் கைகூடாவிட்டாலும் அதை இறுதிவரை செய்து முடிக்க வேண்டும். ஓட்டப் பந்தயத்தில் ஓடுகின்றவர் அனைவரும் பரிசு பெறுவதில்லை என்பதை அறிவர். இருந்தாலும் ஓட்டத்தில் ஓடுபவர் இறுதிவரை ஓடி முடிக்க வேண்டும். அதுவே ஒரு வீரனுக்கு அழகு.

அதேபோல செபம் செய்கின்ற ஒவ்வொருவரும் ஊக்கமுடனும், தொடர்ந்தும் செபம் செய்ய வேண்டும். ஒரு நாளுக்கென்றோ, ஒரு மாதத்திற்கென்றோ, ஒருவருடத்திற்கென்றோ நாம் செபம் செய்ய முடியாது அல்லது நன்மை கிடைக்கும் போது மட்டும் செபம்; இல்லையென்றால் இல்லை என்பதல்ல. சுருங்கக் கூறின் நமது வாழ்வே ஒரு செப வாழ்வாக இருக்க வேண்டும். அப்படியென்றால் முதலில் செபத்தின் தன்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.எனவே செபம் என்பது

✦ நமது, இதயத்தை ஆண்டவரிடம் எழுப்ப அவரது அன்பில் நிலைத்திருப்பது.

✦ செபம் என்பது நமக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர் உரையாடல்.

✦ செபத்தில் நாம் இறைவனை அவராகவும், இறைவன் நம்மை நாமாகவும் ஏற்றுக் கொள்ளுதல்.

✦ செபம் என்பது நமது இறைநம்பிக்கையின் வெளிப்பாடு.

✦ ஆழ்மான நம்பிக்கை உண்மையான செபத்தின் வெளிப்பாடு.

✦ செபத்தில் நாம் நம்பிக்கை கொள்கிறோம், நம்பிக்கையில் நாம் செபிக்கின்றோம்.

✦ அதேவேளையில் செபம் வறண்டு போகிறபோது நம்பிக்கை என்னும் நீர் ஊற்றி உயிர் பெற செய்ய வேண்டும்.

எனவே நாம் செபிக்கும் போது நம்பிக்கையோடும், விடா

## பரமபிதா காட்டிய பாதை

முயற்சியோடும், தாழ்ச்சியோடும் செபிக்கவேண்டும்.

ஆம், செபம் என்பது இரண்டு ஆன்மாக்களின் தேடல்; இரண்டு உள்ளங்களின் உரையாடல். அங்கு வெளிப்புறச் சடங்கிற்கோ, ஆடல் பாடலுக்கோ இடம் இல்லை. எனவே நாமும் செபிக்கின்ற போது நம்பிக்கையும் விடாமுயற்சியும் தாழ்ச்சியும் கொண்டிருக்க வேண்டும். செபத்தில் நாம் நம்பிக்கை கொள்ளவேண்டும். நம்பிக்கை நமது செபமாக மாறவேண்டும். செபிப்போமா?

*ஜோன் றொபேர்ட்*

# தமிழகத்தில் அடுத்த ஆண்டு எம்.ஜி.ஆர் ஆட்சி உருவாகும்

## அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா சபதம்



(சென்னை)

அ.தி.மு.க. தனது முதல் கன்னி வெற்றியை கடந்த 1973ஆம் ஆண்டு எந்த மே மாதத்தில் குவித்ததோ அதே மே மாதத்தில் 2011 இல் அமைய உள்ள புதிய அரசுக்கான சட்டப் பேரவைத் தேர்தலிலும் எம்.ஜி.ஆர். ஆட்சி மீண்டும் தமிழகத்தில் உருவாக்க சபதம் ஏற்க வேண்டும் என தொண்டர்களுக்கு அக்கட்சியின் பொதுச்செயலர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எம்.ஜி. ஆரால் தமிழக மக்களுக்காக உருவாக்கப்பட்ட அ.தி.மு.க. தனது 38 வருட வெற்றிப் பயணத்தை நிறைவு செய்து இன்று அகவை 39 இல் அடியெடுத்து வைக்கிறது.

சரித்திரத்தின் சக்கரங்களை பின் நோக்கி உருட்டிப் பார்த்தால் கணக்குப் போட்டு பிறக்கின்ற கட்சிகளுக்கு மத்தியில் கணக்கு கேட்டு பிறந்த ஒரே இயக்கம் அ.தி.மு.க மட்டும் தான்.

கழகம் பிறந்த சில மாதங்களிலேயே நடைபெற்ற திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் அ.தி.மு.க தன் முதல் வெற்றியை பெற்றது.

எஃகு கோட்டையாய் கழகத்தைக் கட்டிக் காத்து வந்த எம்.ஜி.ஆர்.கழகத்தின் கொள்கை –கோட்பாடுகளை பட்டி தொட்டியெங்கும் பரப்புவதற்காக என்னை 1983இல் அ.திமு. க.வின் கொள்கை பரப்புச் செயலாளராக்கி மாநிலம் முழுவதும் வலம் வர வைத்தார்.

இவ்வேளையில் கடந்த 1984இல் எம். ஜி.ஆர். நோய்வாய்ப்பட்டு அமெரிக்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது பொதுத் தேர்தல் வந்தது. அப்போது மக்களிடம் எம்.ஜி.ஆர். ஐஸ் பெட்டியில் இருக்கிறார் என்று வதந்திகளை கட்டவிழ்ந்து விட்டார் கருணாதிநி. இது மட்டுமல்லாமல் எனக்கு வாக்குப் போடுங்கள். நண்பர் எம்.ஜி.ஆர். உயிரோடு வந்துவிட்டால் அவரிடம் ஆட்சியை ஒப்படைத்துவிடுகிறேன் என்று கருணாநிதி கூறினார்.

இப்படி எம்.ஜி.ஆர்.களத்தில் இல்லாத நேரத்தில் நடந்த ஒரு உக்கிரமான போரில் எதிரிகளிடமிருந்து கழகத்தை சேதாரமில்லாமல் கட்டிக்காத்து அவரிடம் ஒப்படைக்கும் பெரும் வாய்ப்பினை நான் பெற்றேன்.

புரட்சித் தலைவர் நலமாக இருப்பதாகவும் அவர் படுக்கையில் இருந்தபடியே வெற்றி பெற்று உங்கள் திருமுகம் பார்ப்பதற்கு விரைவில் தமிழகம் திரும்பி வருவார் என்கிற நம்பிக்கையூட்டும் பிரசாரத்தையும் தமிழகம் முழுவதும் நான் செய்து வந்ததின் விளைவாக கருணாநிதியின் பொய்பிரசாரம் முறியடிக்கப்பட்டு அ.தி.மு.க. அமோக வெற்றியை ஈட்டியது.

பின்னர் கடந்த 1987 ஆம் ஆண்டு எம். ஜி.ஆரின் மரணத்தை ஏதுவாக பயன்படுத்திக்கொண்ட கருணாநிதி கழகத்திற்கு துரோகம் செய்வதற்குக் காத்திருந்த துரோகிகள் சிலரையும் துணைக்கு அழைத்துக் கொண்டு கழகத்தை பிளவுபடுத்தினார். மேலும் கட்சியின் தலைமை அலுவலகத்தைப் பூட்டினார். இரட்டை இல்ல சின்னத்தையும் முடக்கிடச் செய்தார். சிங்கத்தின் குகைக்குள் பிளவு வந்தால் சிறு நரிகள் நாட்டாமையாகிவிடும் என்பது போல் பிளவை பயன்படுத்திக் கொண்டு கருணாநிதி 1989இல் ஆட்சிக்கு வந்தார்.

அதனைத் தொடர்ந்து கடந்த 1991 தேர்தலில் கழகம் அமோக வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. பின்னர் கருணாநிதியால் கட்டவிழ்த்துவிடப்பட்ட பொய்,புரட்டுகளால் கடந்த 1996இல் அ.தி.மு.க ஆட்சியை இழக்க வேண்டிய நிலை உருவானது.

ஆனாலும் மனம் தளர்ந்து விடாது செயல் சோர்ந்து போகாது தொண்டர்களை தட்டிக் கொடுத்து தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் தொண்டர்களுக்கு ஊட்டி அதன் மூலம் மீண்டும் கழகத்தை எழுச்சிப் பாதைக்குள் கொண்டு வந்து கடந்த 1998இல் நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பெரும் வெற்றிகளை குவிக்கச் செய்தேன்.

அதனைத் தொடர்ந்து 2001 சட்டமன்றப் பொதுத்தேர்தலில் கருணாநிதியை வீழ்த்தி அ.தி.மு.க மீண்டும் தமிழகத்தில் மலரச் செய்தது. தமிழகத்தின் நீண்ட கால வளர்ச்சியை மனதில் கொண்டு எண்ணற்ற புரட்சிகர திட்டங்களை தமிழகத்திற்கு தந்தோம்.

இருப்பினும் பொய்யான வாக்குறுதிகளை அள்ளி வீசி ஓட்டுக்குப் பணம் என்னும் இழிவான யுக்தியை அறிமுகம் செய்து 2006இல் வாக்குப் போட்ட சட்டை போல் பல கட்சிகளின் துணையோடு ஒரு அரசாங்கத்தை அமைத்தார் கருணாநிதி.

இந்த நான்கரை ஆண்டுகாலத்தில் விலைவாசி உயர்வு, மின்வெட்டு, மின் கட்டண உயர்வு, பேருந்து கட்டண உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், சட்டம், ஒழுங்கு, சீரழிவு என பல்வேறு பிரச்சினைகளுக்கு தமிழக மக்களை கருணாநிதி ஆளாக்கிவிட்ட கருணாநிதியிடமிருந்து தமிழகத்தை மீட்டு மீண்டும் ஒரு பொற்கால ஆட்சியை தரக் கூடிய வலிமையும் வல்லமையும் கொண்ட ஒரே அரசியல் பேரியக்கம் அ.தி.மு. க.தான் என்பதில் எள் முனையளவும் ஐயமில்லை.

பாடசாலைகளில் சத்துணவு, ஆலயங்களில் அன்னதானம் என்று அன்னமிட்டே வாழும் அ.தி.மு.க தனது முதல் கன்னி வெற்றியை கடந்த 1973இல் எந்த மே மாதத்தில் குவித்ததோ அதே மே மாதத்தில் 2011 இல் அமையப் போகும் புதிய அரசுக்கான சட்டப் பேரவைத் தேர்தலிலும் கருணாநிதியை வீழ்த்தி எம்.ஜி.ஆரின் ஆட்சியை மீண்டும் தமிழகத்தில் உருவாக்கிட இந்நாளில் அனைவரும் சபதமேற்போம் என ஜெயலலிதா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

## பாரதச் செய்திகள்

### பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் பாரிய ஊழல் மோசடிகள்

பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நிர்வாக முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் வீ.கே.சன்குலு ஊழல் மோசடிகள் குறித்து விசாரணை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலஞ்ச ஊழல் மோசடிகளினால் உரிய முறையில் கட்டட நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மோசடிகள் குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் பணிப்புரை விடுத்துள்ளார்.

தவறான காரணங்களினால் இந்தியாவின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்பட அனுமதிக்க முடியாதென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஶ்ரீ-2)



இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், அவரது மனைவி குர்சரன் கௌர் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் எம்.எஸ்.கில் ஆகியோர்களுடன் 19ஆவது பொது நலவாய போட்டியில் பதக்கம் வென்றவர்கள் பிரதமர் இல்லத்தில் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

### ராகுல் காந்திக்கே அடுத்த பிரதமராகும் வாய்ப்புள்ளது

#### பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு

காங்கிரஸ் பிரபலமான தலைவர்களில் ஒருவர் ராகுல் காந்தி. அவருக்கு மக்களின் ஆதரவு இருக்கிறது. பிரதமர் ஆவதற்கான வாய்ப்பும் உள்ளது என்று பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இந்திய மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆங்கில இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது, அரசியலில் எனக்கு போதிய வாய்ப்புகள் கிடைத்துள்ளன. அந்த வகையில் நான் மிகவும் திருப்தியுடன் இருக்கிறேன். கிட்டத்தட்ட எல்லா காங்கிரஸ் அரசுகளிலுமே நான் பங்கு வகித்து இருக்கிறேன். இது போன்ற வாய்ப்பு ஒரு சிலருக்கு தான் கிடைத்து இருக்கும்.

பிரதமர் மன்மோகன் சிங்குடன் எனக்கு நல்ல உறவு இருந்து வருகிறது. அவருடன் நான் பல ஆண்டுகள் பணியாற்றி இருக்கிறேன் . அவர் ஒரு நல்ல மனிதன், எல்லோருக்கும் மரியாதை கொடுக்கக்கூடி யவர், மிகச் சிறந்த பண்பாளர். எங்கள் இருவருக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கை இருக்கிறது.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியுடனும் எனக்கு நல்லுறவும் பரஸ்பர நம்பிக்கையும் உள்ளது.

நாட்டில் உள்ள முக்கிய கட்சி யான காங்கிரசின் பிரபலமான தலைவர்களில் ஒருவர் ராகுல்காந்தி மேற்கு வங்காளத்தில் பல பொதுக்கூட்டங்களில் அவருடன் நான் கலந்துகொண்டு இருக்கிறேன். அவருக்கு மக்களின் ஆதரவு இருக்கிறது. அவருக்காக



கூட்டம் கூடுகிறது. எனவே அவர் பிரதமர் ஆவதற்கான வாய்ப்பு உள்ளது.

ராகுல் காந்தி பிரதமர் ஆகும் போது அவரது மந்திரி சபையில் வாய்ப்பு கிடைத்தால் அது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும் .

இப்போதே எனக்கு 75 வயது ஆகி விட்டது. அப்போது என்னுடைய வயது என்னவாக இருக்கும் என்றார். (ஶ்ரீ-2)

# முதலாவது ஒருநாள் போட்டியில் ஆஸி.-இந்தியா இன்று களத்தில்

(கொச்சி)

கடவுளின் சொந்த பூமி என வர்ணிக் கப்படும் இந்திய கேரள மண்ணில், மிக நீண்ட இடைவெளிக்கு பின் சர்வதேச கிரிக்கெட் போட்டி நடக்க உள்ளது. இன்று கொச்சியில் நடக்கும் முதலாவது ஒரு நாள் போட்டியில் இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் மோதுகின்றன.

டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிய உற்சாகத்தில் இருக்கும் தோனி தலைமையிலான இந்திய அணி தனது வெற்றிநடையை தொடரக் காத்திருக்கிறது. கொச்சியில் மழை நீடிப்பது கவலை அளிக்கும் விடயம். இன்று மட்டும் மழை பெய்யக்கூடாது என இரசிகர்கள் பிரார்த்திக்கின்றனர்.

இந்தியா வந்துள்ள அவுஸ்திரேலிய அணி முதற்கட்டமாக டெஸ்த்தொடரில் பங்கேற்றது. இதில் இந்தியா 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. அடுத்து மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளன. முதல் போட்டி கொச்சியில் இன்று நடக்கிறது. மேற்கில் அரேபியக் கடல், 44 நதிகள், ஆயுர்வேத சிகிச்சை, பாரம்பரியம் மிக்க கோயில்கள் எனக் கடவுளின் பூமியாகக் காட்சியளிக்கிறது கேரளா. இங்கு கடைசியாக 2007 ஆம் ஆண்டு சர்வதேச ஒருநாள் போட்டி நடந்தது.

இம்முறை இரு அணிகளும் நட்சத்திர வீரர்கள் இல்லாததால் இளம் வீரர்கள் சாதிக்வுள்ளனர். இந்திய அணியைப் பொறுத்தவரையில் சச்சின் இல்லாதது பலவீனம். சகீர் கான், ஹர்பயன், ஷேவாக், காம்பீர், இசாந்த் சர்மா, பிரக்ஜன் ஓஜா உள்ளிட்ட 7 முன்னணி வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்குப் பதில் வாய்ப்புப் பெற்றுள்ள ஷகர் தவான், விராத் ஹாலி, சவுரப் திவாரி, போன்ற இளம் வீரர்கள் தங்களது திறமையை நிரூபித்துக் காட்டவேண்டும்.

ஆரம்ப ஜோடியாக முரளி விஜய் யுடன் சேர்ந்து ஷகர் தவான் களமிறங்கலாம். சம்பியன் லீக் இருபது-20 தொடரில் அதிரடியாக ஆடிய விஜய், சுரேஸ் ரெய்னா மீண்டும் கலக்கலாம். தோனி, யுவராஜ், பொறுப்பாக துடுப்பாட்டம் செய்யவேண்டும். யுவராஜ் சிக்ஸர் மன்னாக விஸ்வரூபம் எடுத்தால் முதல் போட்டியில் எளிதில் வெற்றிபெறலாம்.

# முன்னாள் வீரர்கள் விமர்சனம்; பொன்டிங் பதவிக்கு ஆபத்து!

(சிட்னி)

இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின் தோல்வியால், அவுஸ்திரேலியா அணித்தலைவர் பொறுப்பில் நீடிப்பதில் பொன்டிங்கிற்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. இதில் அவுஸ்திரேலியா 0:2 என்ற கணக்கில் படுதோல்வி அடைந்தது.

இதனால் அணியின் தலைவர் பொன்டிங் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி உள்ளார். முன்னாள் வீரர்கள்பலர் பொன்டிங்கை அணித்தலைவர் பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் என குரல் எழுப்பி வருகின்றனர்.


இது குறித்து அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் பந்துவீச்சாளர் ஜியாப் லோசன் கூறுகையில், அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பொறுப்பிலிருந்து பொன்டிங் விலக வேண்டிய நேரம் வந்து விட்டது. அணித்தலைவர் பொறுப்பு அவருக்கு கூடுதல் சுமையை அளிக் கிறது. இதனால் அவர் சிறப்பாக துடுப்பாட்டம் செய்ய முடியவில்லை. இந்திய வீரர் சச்சின், தற்போதும் சுப்பர் போர்மில் விளையாடி வருகிறார். அவரைப் போல அணியில் சாதாரண வீரராக பொண்டிங் விளையாட வேண்டும். மைக்கெல்கிளார்க்கிற்கு அணித்தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும் என்றார்.

இதே போல இந்தியாவுக்கு எதிராக பெங்களூரில் நடந்த 2வது டெஸ்டில், அணியின் களத்தடுப்பு குறித்து பொன்டிங்கை கடுமையாக விமர்சித்துள்ளார் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன். இதனால் பொன்டிங்கிற்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பொன்டிங் கூறியதானது,

அவுஸ்திரேலிய அணியின் சிறந்த தலைவராக நான் செயல்பட்டு வருகிறேன். தவிர, துடுப்பாட்ட வீரராகவும் திறமையை வெளிப்படுத்தி உள்ளேன். இதில், எந்த சந்தேகமும் இல்லை. விமர்சனங்கள் வருவது இயற்கை தான். இதனால் அணித்தலைவர் பொறுப்பிலிருந்து விலகும் எண்ணம் இல்லை.

டெஸ்ட் அரங்கில் அவுஸ்திரேலிய அணி நீண்ட காலம் நம்பர்-1 இடத்தில் இருந்தது. தற்போது பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து விரைவில் மீள்வோம். இதற்கான ஆலோசனைகளை அணிவீரர்களுக்கு அளித்து வருகிறேன். இது எனது கடமை. ஷேன் வோர்ன், லோசன் ஆகியோர் கூறிய கருத்துக்கள் பற்றி கவலை இல்லை. அதற்காக நான் அவர்களை குறை கூற விரும்பவில்லை. என்னைப் பொறுத்த வரை நான் சிறப்பாகவே செயல்பட்டு வருகிறேன். இவ்வாறு பொன்டிங் தெரிவித்தார்.



## இளைஞர் சேவை விளையாட்டு நாவலப்பிட்டிக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவிருந்த இளைஞர் சேவை விளையாட்டு விழா தவிர்க்க முடியாத காரணங்களினால் மலையகத்தின் நாவலப்பிட்டிக்கு இடமாற்றப்பட்டுள்ளதாக இளைஞர் விவகார பிரதி அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார். நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனைக் கூறினார்.

தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் சுற்றுலா பயணிகள் துரையப்பா விளையாட்டரங்கை கூடுதலாக பயன்படுத்தி வருகின்றமையால் விளையாட்டரங்கின் ஓடுபாதைகள், விளையாட்டுதிடல்கள் என்பன மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இவைகளை புனர்நிர்மாணம் செய்ய மிக நீண்ட காலம் தேவைப்படும். ஆகையினால் இளைஞர் சேவை விளையாட்டு விழா எதிர்வரும் நவம்பர் மாதம் 11, 12, 13, 14 ஆகிய திகதிகளில் நாவலப்பிட்டிய ஜயதிலக விளையாட்டு அரங்கிற்கு மாற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது நாவலப்பிட்டிய விளையாட்டரங்கு ஜனாதிபதியின், ஆலோசனைக்கமைய 20 மில்லியன் ரூபாய் செலவில் புனர்நிர்மாணம் செய்யப்படுகின்றது. இந்த விளையாட்டுவிழாவில் 25 மாவட்டங்களை சேர்ந்த 3,000 விளையாட்டு வீரர்கள்பங்கு கொள்ள இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)



அம்லா

# இங்ராம், அம்லா சதம் அடித்தனர்; தென்னாபிரிக்கா இலகு வெற்றி

(புலோம் பொன்ரைன்)

அம்லா, இங்ராமின் சதமடித்து அசத்த முதலாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 64 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சிம்பாவே அணியை வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாவே அணி 2 'இருபது-20' 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது-20 தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் முதலாவது ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் புலோம் பொன்ரைனில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி,

அம்லா, இங்ராம் சதமடிக்க 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 351 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் இங்ராம் 126 பந்துகளில் (8 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள உட்பட) 124 ஓட்டங்களையும் ஹசிம் அம்லா96 பந்துகளில் (14 பவுண்டரிகள் உட்பட) 110 ஓட்டங்களையும் மில்லர் 51 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மஷகட்ஷா 4 விக்கட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி ரெய்லர் சதமடித்துப் போராடியும் 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து287 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 64 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ரெய்லர் ஆட்டமிழக்காமல் 136 பந்துகளில் (12 பவுண்டரிகள் உட்பட) 145 ஓட்டங்களையும் மஷகட்ஷா 30, அணித் தலைவர் சிக்கும்புரா 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் திரோன் 3 விக்கெட்டுக்களையும் போத்தா 2 விக்கட்டுக்களையும் பார்னல் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் தென்னாபிரிக்க அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இப்போட்டியில் சதமடித்து அசத்திய தென்னாபிரிக்க அணியின் இங்ராம் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.



இங்ராம்







தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பெருவிளையாட்டுப் போட்டிகளில் முதலிடங்களைப் பெற்ற கொக்குவில் இந்துக்கல்லூரியின் கிரிக்கெட் அணி, மகாஜனக் கல்லூரியின் கரப்பந்தாட்டப் பெண்கள் அணி மற்றும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய உதைபந்தாட்ட அணிவீரர்களுடன் விருந்தினர்கள் நிற்பதை படங்களில் காணலாம்.

## திறப்பு விழா

(மண்டைதீவு)

மண்டைதீவு மக்கள் அபிவிருத்தி ஒன்றியம்- சுவிஸ் அமைப்பினால் மண்டைதீவு மகாவித்தியாலயத்துக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட நுழைவாயில் மதில் திறப்பு விழா இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும்.

மண்டதீவு மக்கள் ஒன்றியத் தலைவர் அ.ஸ்ரீபத்மராசா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர் கை.பேரின்பநாயகம். பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இ.இராதாகிருஷ்ணன் சிறப்புரையாற்றுவார். ஏற்புரையை பாடசாலை அதிபர் சு.கனகரத்தினமும் நன்றியுரையை ஒன்றியச் செயலாளர் சோ.அருள்தீபனும் நிகழ்த்துவர். (ந)

## எயார்டெல் அலுவலகம் யாழில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

எயார்டெல் (Airtel) தொலைத்தொடர்பு நிறுவனத்தின் யாழ்.பிராந்திய கிளை அலுவலகம் நாளை திறக்கப்படவுள்ளது.

434,ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நாளை காலை 6 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (ச-5)

## இராணுவ நீதிமன்ற...

இந்த விளக்கத்தை தயார்ப் படுத்தி வருவதாக கூறப்படுகிறது.

இரண்டாவது இராணுவ நீதிமன்றம் முன் வைக்கப்பட்ட சகல குற்றச்சாட்டுக்களுக்கும் சரத் பொன்சேகா குற்றவாளி எனக் கூறி 30 மாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது.

இதனால் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோயுள்ளதாக நாடாளுமன்றச் செயலாளரும், தேர்தல் ஆணையாளரும் தீர்மானித்தனர்.

இந்த நிலையில், இராணுவ நீதிமன்றம் இலங்கையின் நீதிமன்ற கட்டமைப்பிற்குள் அடங்கும் நீதிமன்றம் என அரசாங்கத்தின் அமைச்சர்களும், அரசதரப்பு சட்டத்தரணிகளும் தெரிவித்தனர்.

எனினும் இந்த நீதிமன்றம் நாட்டின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நீதிமன்ற கட்டமைப்பிற்குள் அடங்காது என்பது சிரேஷ்ட சட்ட வல்லுநர்களின கருத்தாக உள்ளது.

நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் நீதிமன்றங்கள் என அர்த்தப்படுத்தப்படுவது, மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர்நீதிமன்றம் என்பவாகும் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ.குணசேகர இதற்கு முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருந்தார். (ச-5)

## பஸ்-மோ...

சபைக்கு சொந்தமான பஸ்வண்டியில் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் யாழ்ப்பாணம் வெள்ளாந் தெருவை சேர்ந்த பாலச்சந்திரன் ஜெயபாலன்(வயது 30) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவத்தின்போது படுகாயமடைந்த இவர்,யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## வடமாகாண...

சின் வடமாகாண அலுவலகம் திருகோணமலை வரோதயா நகரில் உள்ள மாகாண சபையின் கட்டிடத் தொகுதியில் இயங்கிவருகின்றது.

அதனை யாழ்ப்பாணத்துக்கு மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிலையில் இடம் தெரிவானதுடன் விரைவில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு அலுவலகம் யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்படவுள்ளது. (ச-5)

## இராணுவ மறுசீர...

ஆலோசனை வழங்கியுள்ளதாக இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய அறிவித்துள்ளார்.

30 ஆண்டுகளுக்கு மேல் இராணுவத்தில் சேவையாற்றி வருவோரின் எண்ணிக்கை மிகவும் குறைவானது எனவும், ஏனைய அனைவரும் யுத்தத்திற்காக இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

படைவீரர்களின் யுத்த மனோநிலையை சாதாரண மனோநிலைக்கு மாற்றப்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் பராமரிக்கப்பட்டு வந்த பாரிய இரண்டு விவசாய பண்ணைகள் தற்போது இராணுவப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ச-5)

## மூனின் பேச்...

தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்க பேச்சாளர் 24 மணித்தியாலங்கள் கூட தாமதிக்கிறார் என்று அது சுட்டிக்காட்டியுள்ளது.ஆயினும் உரிய பதில்களை வழங்காமல் சமாளிக்கின்றார் என்றும் சாடி உள்ளது.(ச-5)

## அமுலுக்கு வருகிறது...

அமுல்படுத்தப்படவுள்ள நேரமும் பிரதேசங்களும் வருமாறு;

**மாலை 18.00 - 19.15**

உரும்பிராய், கோண்டாவில், தபால்பெட்டிச் சந்தி, கந்தர்மடம், ஆரியகுளம் பிரதேசம், கச்சேரியடி பிரதேசம், பாசையூர், குருநகர் 5 ஆம் மாடி வீட்டுத்திட்ட பகுதி, புங்கங்குளம்.

**மாலை 19.15 - 20.15**

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சி பிரதேசம்.

**மாலை 20.15 - 21.30**

இணுவில், உடுவில், மருதனாமடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம்,யாழ்.பட்டணப்பகுதி.

**மாலை 21.30 - 22.30**

கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப்பிரதேசம்,அராலி. (ச)

## புலிகளின் செயற்பாட...

இலங்கை அரசாங்கம் சர்வதேச புலனாய்வுப் பிரிவொன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக திவயின ஞாயிறு இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. மேற்கத்தைய நாடுகளின் தூதுவராலயங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள உயர் இராணுவ அதிகாரிகளை ஒன்றிணைத்து இந்த புலனாய்வு சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

துரிதகதியில் அந்த புலனாய்வுப் பிரிவு உருவாக்கப்பட உள்ளதாகவும், பாதுகாப்பு அமைச்சின் திட்டத்திற்கு அமைய இந்த சர்வதேச புலனாய்வுப் பிரிவு உருவாக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கத்தைய நாடுகளின் தூதுவராலயங்களில் தற்போது ஐந்து உயர் இராணுவ அதிகாரிகள் கடமையாற்றி வருவதாகவும்,அந்த எண்ணிக்கை பத்தாக உயர்த்தப்படும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இந்த சர்வதேச புலனாய்வுப் பிரிவினர், அந்தந்த நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலி செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.


இதனிடையே பத்து நாடுகளில் 47 புலி ஆதரவாளர்கள் செயற்பட்டு வருவதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## காணாமல்...

சமர்ப்பித்துள்ளது. படையினரிடம் சரண் அடைந்து காணாமல் போனோர் என்று கூறப்படுபவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் ஆகியோருடைய வாக்குமூலங்கள், சாட்சியங்கள், பேட்டிகள் ஆகியனவும் இணைக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுகின்றது. (ச-5)

## மரண அறிவித்தல்

### நடராசா மகேந்திரராஜன்



கீரிமலை வீதி,காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா மகேந்திரராஜன் 14.10.2010 கனடாவில் காலமானார். அன்னாரின் நல்லடக்கம் 17.10.2010 இன்று கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சகோதரிகள்:
ஞானேஸ்வரி,
மகேஸ்வரி(தங்கா)

தெணிப்பிள்ளையார் கோயிலடி,
2ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை. (சி-1425)


**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 222 4459, 0774192275, Fax:222 4460

MONITOR FOR SALE
Brand New CRT17" Flat Screen Monitor =Rs.6250/=
GADMEI Combo TV Box with Remote Control = Rs. 3500/=
என்பன உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.
DDR I 512 Kingston Ram - Rs. 2250/=
(கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்)
(C-1429)

**கோழிக் குஞ்சு விநியோகம்**
தரமான நம்பர் 01 கோழிக்குஞ்சு விநியோகிக்கப்படும்.முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
➢ சங்கீத் களஞ்சியம் பொன்னாலை வீதி,மானிப்பாய்.
➢ லக்ஷ்மி ஸ்ரோர்ஸ் மானிப்பாய்வீதி,ஆறுகால்மடம்.
➢ கிருஷ்ணா ஸ்ரோர்ஸ் குளப்பிட்டி சந்தி, கே.கே.எஸ்.வீதி.
தொடர்புகளுக்கு: 0728039327
(C-1405)

**உடனடியே...**
❁ எமது திறமையான மாணவர்களின் முன்னேற்றத்தின் மற்றுமொரு மைல்கல்.
❁ லண்டனில் உள்ள பதினைந்துக்கு மேற்பட்டகல்லூரிகளின் அனுமதிகளைப் பெற்றுத் தருகிறோம்.
Eg:-
❁ Thames College of Technology
❁ Interlink College
❁ Richmond College
☞ அனுமதி கட்டணம் இலவசம்
☞ முன்கூட்டிய கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.
☞ Sponsor வசதி மிககுறைந்த விலையில்
☞ நம்பத்தகுந்த சேவை
☞ IELTS அவசியமில்லை
☞ சட்டத்தரணிகள்/சமூக பிரபல்யங்களின் வழிநடத்தல்
எமது காலடியில் Study in UK Study in Canada
தொடர்புகளுக்கு:
European College of higher Studies
315 1/2, Parameshwara Junction,Palaly Road,Jaffna.
Tel.No.: 0773537378 , 0213734747
(2691)

நவீன உலகின் அழகியலுக்கு ஏற்ப உங்கள் இல்லங்களை கண்கவர் முறையில் அழகு படுத்திட இந்தியப் பயிற்சி பெற்ற வர்ணக் கலைஞர்களை அழையுங்கள்.
(Home Designing and Painter)
கோம் டிசையினிங் அன்ட் பெயின்ரர்
T.P.No :- 021 7900668
0774669841
(2688)

**SANEYA BEAUTY PALACE**
விஜயதசமி சிறப்பு சலுகைகள்
132,கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(கிட்டுப்பூங்கா அருகாமை)
✹ உங்கள் அழகுமுகத்தில் கருமை நிறமா? முகப்பருக்களா? தழும்புகளா? கரும் புள்ளிகளா! கவலையை விடுங்கள்! 7 நாட்களில் உடனடித்தீர்வு!!!
✹ உடல்பருமன் குறைப்பதற்கும், அதிகரிப்பதற்கும் 21 நாட்களில் நிரந்தரத்தீர்வு!!!
✹ மற்றும் முடிஉதிர்வு, இளநரை போன்றவற்றுக்கான சிகிச்சைகள்!! மேற்கூறியவற்றுக்கு முற்றுமுழுதாக மூலிகைச் சிகிச்சைகள்!!! முற்பதிவுகளிற்கு அழையுங்கள்.
(2692) 0774011129 ,0777351954



**கலைமகள் அழகு நிலா**
பயிற்சி நிலையம்
ஏழு நாட்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சி யின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக் கொள்ளலாம். இப் பயிற்சி கற்றுக் கொள்வது இலகுவானதும் அதிக வருமானம் தரக் கூடிய தொழிலாகும். பெண்களுக்கு மிக அவசியமானது. வயதெல்லை கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன்முறையாகும்.
பயிற்சிகள்
★ Facial (ஏழு வகை)
★ Threading
★ Pimple Treatment
★ Waxing
★ Hair Stratening (2 வகை)
★ Hair Perming (2 வகை)
★ Hot oil Massage
★ Hair Cutting
★ Hair dye
★ Hair Colouring
★ Pedeicure Manicure
★ கறுப்புக் காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்
★ Bleaching
★ Bridal make up (6 வகை)
தொடர்புகள்: 077 3719071 021 4908151
பயிற்சிக் கட்டணம்:- 4000/=
பயிற்சி நேரம் :- 9 மணி - பி.ப.4 மணி வரை
பயிற்சி ஆரம்பம் :- 20/10/2010
கலைமகள் அழகுநிலா
390, பிரதான வீதி,பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.
(C-1423)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.